# TNPSC Tamil Current Affairs 1st May 2017

1. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கணக்குகளின் பொது கட்டுப்பாட்டாளர் (Controller General of Accounts – CGA) யார்?
A. K.Vinayak Rao
B. Anil Srivatsava
C. Jatindra Nath Swain
D. Anthony Lianzuala

**விடை : D. Anthony Lianzuala**

இவர் இந்திய சிவில் கணக்கு அதிகாரியாக 1982 ல் பணிபுரிந்தார். மே 1 2017 முதல் இவர் CGAவாக பணிபுரிவார்.இதன் மூலம் இந்தியாவின் வடகிழக்கு பகுதியிலிருந்து இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் முதல் நபராவார். சரத்து 150ன் படி CGA என்பது மத்திய அமைச்சகத்தின் கீழ் இயங்கும்,ஜனாதிபதியின் அதிகாரத்திற்குட்பட்ட ஓர் கணக்கியல் ஆணையமாகும்.கணக்கியல் கட்டுப்பாட்டாளர் மற்றும் இந்தியாவின் பொது தணிக்கையாளரின் அறிவுரையின் பேரில் மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்குமான கணக்கியல் சம்பந்தப்பட்ட படிவங்களை இது வழங்கும்.

2. மறைந்த புகழ்பெற்ற மலையேற்ற வீரரான Ueli Steck (40) எந்த நாட்டைச்சேர்ந்தவர்?
A. பிரான்ஸ்
B. இரஷ்யா
C. சுவிச்சர்லாந்து
D. ஜெர்மனி

**விடை : C. சுவிச்சர்லாந்து**

புகழ்பெற்ற மலையேற்ற வீரரான இவர் ஏப்ரல் 30 2017 அன்று எவரெஸ்ட் சிகரத்தினருகில், 25,791 அடி உயர Nuptse குன்றை அடையும் முயற்சியில் நடந்த ஒரு விபத்தில் காலமானார். இவரின் வேகமான மலையேற்ற திறத்தால் இவரை "Swiss Machine" என்று அழைப்பர்.Berne's Alps மலையை 2 மணி 47 நிமிடத்தில் கயிறுகள் ஏதும் பயன்படுத்தாமல் கடந்து சாதனை படைத்தார்.

3. தெற்காசிய செயற்கைக்கோளான "GSAT-09" ISRO வின் எந்த விண்வெளிக்கலத்தின் மூலம் ஏவப்படுகிறது?
A. GSLV Mk-III
B. GSLV Mk-II
C. GSLV MK-IV
D. GSLV Mk-V

**விடை : B. GSLV Mk-II**

winmeen

இது SAARC நாடுகளின் பொருளாதாரத்தையும் வளர்ச்சியையும் உயர்த்தும் பொருட்டு May 5 2017 அன்று ஸ்ரீ ஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து ஏவப்படுகிறது.இதன் எடை 2230 Kg ஆகும். கன சதுர வடிவம் கொண்ட இதன் வாழ்நாள் 12 வருடங்கள் ஆகும். இது தொலைத்தொடர்பு, பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளுக்கு பேருதவியாக இருக்கும்.இதன் மூலம் நேபால்,பங்களாதேஷ்,ஆப்கானிஸ்தான்,பூடான்,இலங்கை, மாலத்தீவு ஆகியவை பயன்பெறும்.

4. முதன்முதலாக தூய்மை கங்கா உறுதிமொழி ஏற்பு நாள் (Ganga Cleanliness Pledge Day) எப்போது கடைபிடிக்கப்பட்டது?

A. May 2
B. May 5
C. May 4
D. May 3

**விடை : A. May 2 2017**

இது Namami Ganga திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக National Mission Clean Ganga(NMCG) அமைப்பினரால் May 2 2017 அன்று கடைபிடிக்கப்பட்டது.இந்நாள் Ganga Swachhta Sankalp நாள் எனவும் வழங்கப்படுகிறது.இது நாட்டின் 12 வேறு இடங்களிலும் அனுசரிக்கப்பட்டது. Ganga Vichaar Manch என்ற தன்னார்வ அமைப்பின் மூலம் நாட்டின் 30 வேறு இடங்களிலும் அனுசரிக்கப்பட்டது.

winmeen

5. இந்தியாவின் முதல் பார்வையற்றோருக்கான கால்பந்து அகாடமி (Blind Football Academy) எந்த மாநிலத்தில் அமையவுள்ளது?

A. தமிழ்நாடு
B. சிக்கிம்
C. உத்தர பிரதேசம்
D. கேரளா

**விடை : D. கேரளா**

இந்தியாவிலேயே முதன்முறையாக பார்வையற்றோருக்கான கால்பந்து அகாடமி கேரள மாநிலம் கொச்சியில் அமையவுள்ளது. பார்வையற்றோருக்கான மறுவாழ்வு சமூகமும் (The Society for Rehabilitation of Visually Challenged(SRVC) & இந்திய பார்வையற்றோருக்கான அமைப்பும் (Indian Blind Federation) இணைந்து இந்த அமைப்பை தொடங்கியுள்ளன.இதன் நோக்கம் சிறந்த கால்பந்து வீரர்களை உருவாக்கி, 2024 ல் நடைபெறும் பாராலிம்பிக் போட்டியில் அவர்களை பங்குகொள்ளச்செய்வதே ஆகும்.

6. Centre for Media Studies (CMS)ன் கருத்துக்கணிப்பின் படி, இந்தியாவின் ஊழல் மிகுந்த மாநிலம் எது?

A. Andhra Pradesh

B. Maharashtra
C. Karnataka
D. Jammu and Kashmir

**விடை: C. Karnataka**

"CMS India Corruption Study 2017"ன் கருத்துக்கணிப்பின் படி ஊழல் மிகுந்த மாநிலங்களில் கர்நாடகா முதலிடத்திலும், ஆந்திரா இரண்டாமிடத்திலும், அதனைத்தொடர்ந்து தமிழகம் மூன்றாமிடத்திலும் உள்ளது. இந்த கருத்துக்கணிப்பு 20 மாநிலங்களை உள்ளடக்கி நடந்தது. குறைந்த ஊழல் மிகுந்த மாநிலங்களாக இமாச்சலம், கேரளா, சட்டிஸ்கார் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தக்கணிப்பின் அறிக்கை, மூன்றில் ஒரு பங்கினர் தங்களது அரசாங்கத்தேவையை பூர்த்திசெய்ய லஞ்சம் கொடுப்பதாக கூறுகிறது. லஞ்சம் கொடுத்த தொகை மட்டுமே தோராயமாக 6,350 கோடி மதிப்பு வரும் என கூறுகிறது இந்த அறிக்கை. இது 2015 ஆண்டின் அறிக்கையை ஒப்பட்டுப்பார்க்கும்போது 53% அதிகம் எனவும் கூறப்படுகிறது.

7. "Mukthijodha Scholarship" திட்டத்தின் படி வங்காளதேசத்திற்கு இந்தியா தரும் நிதியளவு எவ்வளவு?
A. 30 Crore
B. 35 Crore
C. 25 Crore
D. 20 Crore

**விடை: B. 35 Crore**

வங்காளதேசத்திலிருக்கும் சுதந்திர போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு உதவும் விதமாக இந்திய அரசு 35 கோடி ரூபாயை இத்திட்டத்தின் மூலம் அளிக்கிறது.அதோடு 100 பேருக்கு இலவச மருத்துவமும் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.இதைத்தவிர்த்து மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்திய மதிப்பில் ₹ 15370ம், கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு ₹ 38,430ம் வழங்கப்படுகிறது.1971 சுதந்திர வீரர்களின் வழித்தோன்றலாக , 2006ல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.இத்திட்டத்தின் மூலம் இதுவரை 10,000த்திற்கும் மேலானோர் பயனடைந்துள்ளனர்.

8. இந்தியாவின் முதல் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பஞ்சாயத்து வார்டு, எந்த மாநிலத்தில் வரவுள்ளது?
A. அசாம்
B. கேரளா
C. குஜராத்
D. ராஜஸ்தான்

**விடை: B. கேரளா**

அய்மனம் கிராம பஞ்சாயத்திலுள்ள வார்டு எண் 15 தான் இந்தியாவிலேயே முதன்முதலில் டிஜிட்டல் முறையில் மாற்றியமைக்கப்பட்ட பஞ்சாயத்து வார்டாகும்.இதனை மத்திய சமூக நீதி அமைச்சர் திரு.கிருஷ்ணன் பால் குஜர் தொடங்கிவைத்தார்.இதற்கான இணையத்தளம் www.digitalaymanam.com ஆகும்.இதில் அந்த வார்டு மக்களின் இரத்த வகை மற்றும் தொலைபேசி எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

9. இந்தியாவில் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?
A. April 26
B. April 24
C. April 28
D. April 30

**விடை: D. April 30**

குழந்தைகளின் கல்வி அவசியத்தை உணர்த்தும் விதமாகவும், குழந்தை தொழிலாளர்கள் படும் துன்பத்தை உணர்த்தும் விதமாகவும்,விழிப்புணர்வு நாளாக இது கடைபிடிக்கப்படுகிறது.மேலும், சர்வதேச தொழிலாளர் அமைப்பான (ILO) இதே நாளை ஜீன் 12 அன்று கடைபிடிக்கிறது.

10. 2017க்கான "Men's doubles Tallahassee Challanger" பட்டத்தை வென்றவர் யார்?
A. Leander Paes and Adil Shamasdin
B. Leander Paes and Ramkumar Ramanathan
C. Leander Paes and Blaz Rola
D. Leander Paes and Scott Lipsky

**விடை : D. Leander Paes and Scott Lipsky**

புளோரிடாவில் நடைபெற்ற போட்டியில் Leander Paes and Scott Lipsky அர்ஜென்டினாவின் Leonardo Mayer and Maximo Gonzalezசை 4-6, 7-6, 10-7 என்ற விதத்தில் தோற்கடித்தனர்.இது இவ்வாண்டிற்கான Paes வாங்கும் 2வது சேலஞ்சர் பட்டமாகும்.

winmeen

# TNPSC Tamil Current Affairs 2nd May 2017

1. எந்த மத்திய அமைச்சர் போர் வீரர்களை கவுரவிக்கும் விதமாக தேசிய அளவில் "Vidhya-Veerta Abhiyan" திட்டத்தை தொடங்கிவைத்தார்?

A. நரேந்திர மோடி

B. ராஜ்நாத் சிங்

C. அருண் ஜெட்லி

D. பிரகாஷ் ஜவடேகர்

**விடை : D. பிரகாஷ் ஜவடேகர்**

இத்திட்டத்தை மத்திய மனிதவளத்துறை அமைச்சரான திரு.பிரகாஷ் ஜவடேகர், May 2, 2017 அன்று தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின் நோக்கம், மாணவர்கள் மனதில் தேசப்பற்றை உருவாக்குவதும், போர் வீரர்களின் தேவைகளை உணர்த்துவதும் ஆகும். எனவே, "பரம் வீர் சக்ரா " விருதுபெற்ற வீரர்களை போன்ற உருவ பொம்மைகளை, கல்லூரி வளாகங்களில் வைத்து சிறப்பித்தனர். இந்திய ராணுவத்தின் மிக உயரிய விருது "பரம் வீர் சக்ரா" ஆகும்.

2. ஐ. நாவின் "The Economic and Social Survey of Asia and the Pacific 2017"ன் அறிக்கையின் படி, 2017ல் இந்தியாவின் GDP என்னவாக இருக்கும்?

A. 7.1 %

B. 7.5 %

C. 7.2 %

D. 7.4 %

**விடை : A. 7.1 %**

ஐ. நாவின் Economic and Social Commission for Asia and the Pacific (ESCAP), தனது 2017க்கான ஆண்டறிக்கையை May 1 2017 அன்று வெளியிட்டது. இவ்வறிக்கையின் படி, 2017ம் ஆண்டில் இந்தியாவின் GDP 7.1 % வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே நிலை தொடருமானால் 2018ல் இந்தியாவின் GDP 7.5 % ஆக இருக்கும். மேலும், இதன் மூலம் சில இன்னல்களும்(அதாவது, தவறுதலான வங்கிக்கடன்கள் வழங்குவது போன்றவை) இருப்பதாக இவ்வறிக்கை எச்சரித்துள்ளது.

winmeen

3. UNHCRன் புதிய "நல்லெண்ண தூதுவராக" நியமிக்கப்பட்டுள்ள Yusra Mardini, எந்த நாட்டைச்சேர்ந்தவர்?

A. கிரீசு

B. சிரியா

C. சோமாலியா

D. சாம்பியா

**விடை : B. சிரியா**

சிரியாவைச்சேர்ந்த இவர் படகில் தத்தளித்த அகதிகளுக்கு உதவினார். சிரிய அகதியும், ஒலிம்பிக் தடகள வீராங்கனையுமான இவருக்கு ஜெர்மன் நாடு புகலிடம் கொடுத்துள்ளது. தற்போது United Nations High Commissioner for Refugees(UNHCR)ன் "நல்லெண்ண தூதுவராக" நியமிக்கப்பட்டுள்ளார்.

winmeen

4. 2017 "Men's Singles Barcelona Open Tennis" போட்டியில் வென்றவர் யார்?

A. Kei Nishikori

B. Pablo Andujar

C. Rafael Nadal

D. Dominic Thiem

**விடை : C. Rafael Nadal**

ஸ்பானிஷ் டென்னிஸ் விளையாட்டு வீரரான இவர், ஆஸ்திரிய வீரர் Dominic Thiemஐ 6-4,6-1 என்ற செட் கணக்கில் தோற்கடித்து, 2017ம் ஆண்டுக்கான "Men's Singles Barcelona Open Tennis" போட்டியில் வென்றவர் ஆகிறார். இப்போட்டி ஸ்பெயினிலுள்ள பார்சிலோனா நகரத்தில் நடைபெற்றது. இந்த போட்டியை வென்றதன் மூலம், பத்து முறை இப்பரிசினை வென்றவர் என்ற சிறப்புத்தகுதியினை இவர் பெறுகிறார். இப்போட்டி ATP World Tourன் 500ல் ஒரு பாகமாகும்.

5. 19வது ஆசிய மகளிர் ஒற்றையருக்கான "Asian Individual Squash Championships - 2017" பட்டத்தினை வென்றவர் யார்?

A. Joshna Chinappa

B. Madeline Perry

C. Dipika Pallikal

D. Vicki Cardwell

**விடை : A. Joshna Chinappa**

சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யுவில் ஏப்ரல் 29 2017 அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் Dipika Pallikalஐ தோற்கடித்து Joshna Chinappa இப்பட்டத்தினை வென்றார். இதன் மூலம் "Asian Squash" பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையும் அடைகிறார்.

winmeen

6. இந்திய தொழிற்சாலை கூட்டமைப்பின் (Confederation of Indian Industry – CII) ன் முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Preeti Jain

B. Shobana Kamineni

C. Nita Ambani

D. Vimala Mehta

**விடை : B. Shobana Kamineni**

2017-18ம் ஆண்டுக்கான CII-ன் தலைவராக இவர் செயல்படுவார். இவர் அப்போலோ மருத்துவமனைகளின் துணைத்தலைவராவார். இவருக்கு முன் CIIன் தலைவராக பதவி வகித்தவர் Dr Naushad Forbes. CIIன் புதிய துணைத்தலைவராக உதய் கோடக் பதவி வகிப்பார். CII ஒரு அரசு சாராத, வியாபார நோக்கற்ற, இந்திய தொழிற் நிறுவனங்களின் வளர்சிக்கு பங்காற்றும் ஒரு அமைப்பாகும்.

7. INSA இளம் விஞ்ஞானி விருது 2017 (Youth Scientist Award) க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Prabeer Barpanda

B. Sai Siva Gorthi

C. Sanjay Pratihar

D. Chandan Saha

**விடை : C. Sanjay Pratihar**

இவர் தேஸ்பூர் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானியாக பணிபுரிந்துவருகிறார். இவரின் விவசாயம் சார்ந்த ஆய்வுக்காக இவ்விருது வழங்கப்படவுள்ளது. இவ்விருது வெண்கலப்பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.25000 பணப்பரிசை உள்ளடக்கியது. டிசம்பரில் நடைபெறும் INSAவின் ஆண்டுக்கூட்டத்தில் இவருக்கு இப்பரிசு வழங்கப்படும். இந்தியாவைச்சேர்ந்த இளம் விஞ்ஞானிகளுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

8. எந்த நகரம் உலகில் முதன்முதலில் தனக்கென சொந்த “மைக்ரோசாப்ட் எழுத்துரு” வை “Microsoft Font” கொண்டுள்ளது?

A. பாரிஸ்

B. நியூயார்க்

C. பெர்லின்

D. துபாய்

**விடை : D. துபாய்**

இந்த எழுத்துருவின் பெயர் “Dubai Font”. இது அரபி மற்றும் இலத்தின் எழுத்துக்களை எழுதும் விதம் உருவாக்கப்பட்டுள்ளது. இது “Dubai” “Dubai Medium” “Dubai Light” என மூன்று விதங்களில் மைக்ரோசாப்ட் ஆபிஸ் பயனாளிகளுக்கு கிடைக்கிறது. மே 1 2017 அன்று துபாய் அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இந்த எழுத்துரு துபாய் நகரத்தின் சிறப்புகளை பிரதிபலிக்கும் விதமாக இருக்கும்.

9. விவசாயிகளுக்கான தானியங்கி வானிலை நிலையத்தை (Automated Weather Station – AWS) பயன்படுத்தும் முதல் இந்திய மாநிலம் எது?

A. கேரளா

B. பஞ்சாப்

C. அசாம்

D. மகாராஷ்டிரா

**விடை : D. மகாராஷ்டிரா**

நாட்டிலேயே முதன்முதலாக நாக்பூரிலுள்ள Dongargaonல் அமைக்கப்பட்டுள்ளது.மகாராஷ்டிரா முழுவதும் மேலும் 2065 நிலையங்கள் இதேபோல அமைக்கப்படவுள்ளன. இது காற்றின் வேகம், ஈரப்பதம், மழையளவு போன்ற விவரங்களை விவசாயிகள் அறிந்துகொள்ள பேருதவியாக இருக்கும். இந்தத்தகவல்கள் அனைத்தும் "மகாதேவ் போர்டல்" ( மகாராஷ்டிர விவசாயிகள் வானிலை பிணையம்) மற்றும் Skymet செயலி மூலம் பகிரப்படும்.

10. இந்தியாவின் எந்த மாநிலத்தில் "The Lovely Professional University" அமைந்துள்ளது?

A. ஹரியானா

B. ராஜஸ்தான்

C. பஞ்சாப்

D. குஜராத்

winmeen

**விடை : C. பஞ்சாப்**

மே 2 2017 அன்று பஞ்சாப் மாநிலம் பகவாராவிலுள்ள "The Lovely Professional University"ல் நடைபெற்ற 8வது பட்டமளிப்பு விழாவில், இந்தியக்குடியரசு தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி கலந்துகொண்டார். இப்பல்கலைக்கழகம் 200க்கும் மேற்பட்ட படிப்புகளை வழங்குகின்றது. 30,000கும் அதிகமான பட்டதாரிகளை வருடந்தோறும் இப்பல்கலைக்கழகம் உருவாக்குகிறது.

# TNPSC Tamil Current Affairs 3rd May 2017

**1. நிதியாண்டை April-Marchலிருந்து January-December ஆக மாற்றிய முதல் இந்திய மாநிலம் எது?**

A. மகாராஷ்டிரா

B. கேரளா

C. ஆந்திர பிரதேசம்

D. மத்திய பிரதேசம்

**விடை : D. மத்திய பிரதேசம்**

இந்திய மாநிலங்களிலேயே முதல் முறையாக தனது நிதியாண்டை வரும் 2018 முதல் April-Marchலிருந்து January-December ஆக மாற்றிக்கொண்ட மாநிலம் மத்திய பிரதேச மாநிலமாகும். மத்திய பிரதேச மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவ்கான் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இம்முடிவெடுக்கப்பட்டது. இதனால் இம்மாநிலத்தின் அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட் அமர்வு 2018 December-Januaryல் நடைபெறும்.

**2. 2017ம் ஆண்டுக்கான "ஔவையார் விருது" பெறுபவர் யார்?**

A. கீர்த்தி கோஷ்

B. சாரதா மேனன்

C. பத்மா வெங்கடராமன்

D. முகேஷ் அகி

**விடை : C. பத்மா வெங்கடராமன்**

இவர் இந்திய மகளிர் சங்கத்தின் (Women's Indian Association)ன் தலைவரும், முன்னாள் குடியரசுத்தலைவரான R.வெங்கடராமன் அவர்களின் மகளுமாவார்.பெண்களின் பொதுநலத்தில் மிகுந்த ஈடுபாடும், தொழுநோயாளிகளின் வாழ்வு புனரமைப்பிற்காக 30 ஆண்டுகளுக்கும் மேல் சேவை புரிந்த காரணத்தினால், தமிழக அரசு 2017ம் ஆண்டுக்கான "ஔவையார் விருதை" C. பத்மா வெங்கடராமன் அவர்களுக்கு வழங்கி கௌரவித்துள்ளது. இந்த விருது அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கும் பெண்களை, ஊக்கப்படுத்தும் விதமாக வழங்கப்படுகிறது. இவ்விருது தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ. 1,00,000க்கான பணப்பரிசை உள்ளடக்கியது.

**3. 2017ம் ஆண்டுக்கான "World Snooker Championship" பட்டத்தை வென்றவர் யார்?**

A. Dennis Taylor
B. Mark Selby
C. Steve Davis
D. John Higgins

**விடை : B. Mark Selby**

Leicesterஐ சேர்ந்த Mark Antony Selby, ஓர் ஆங்கில ஸ்னூகர் விளையாட்டு வீரராவார். இவர் இங்கிலாந்திலுள்ள Sheffieldன் Crucible Theatreல் நடைபெற்ற இறுதிப்போட்டியில் John Higginsஐ 18-15 என்ற கணக்கில் தோற்கடித்தார். Steve Davis, Stephen Henry மற்றும் Ronnie O' Sullivanக்குப்பிறகு இப்பட்டத்தை தொடர்ந்து பெறும் நான்காம் நபர் இவராவார். ஸ்னூக்கர் விளையாட்டில் உலகத்திலேயே நெ.1 இடத்திலிருப்பவர் இவரே.

**4. 2017ம் ஆண்டுக்கான Men's Singles ITTF Challenge Sea master Chile Open Tournament" ஐ வென்ற இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் யார்?**

A. Soumyajit Ghosh
B. Sharath Kamal
C. Anthony Amalraj
D. Subhajit Saha

**விடை : A. Soumyajit Ghosh**

மேற்கு வங்க மாநிலத்தைச்சேர்ந்த இவர், சான்டியாகோவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் Anthony Amalrajஐ தோற்கடித்து Men's Singles ITTF Challenge Sea master Chile Open Tournament" பட்டத்தை வென்றார். இது இவரின் முதல் ITTF பட்டமாகும், மேலும் ITTF போட்டியில் வென்ற மூன்றாவது இந்தியர் என்ற பெருமையும் இவரையே சாரும். இதைத்தவிர்த்து, இந்திய இரட்டையர்களான Ghosh & Amalraj ஆகியோர் Philipp Floritz & Hunor Szocs ஆகியோரை ஆண்கள் இரட்டையர் பிரிவில் 4-0 என்ற கணக்கில் வென்றனர்.

**5. ஐ. நா வின் மனித உரிமைகள் மன்றம் UN Human Rights Council (UNHRC) நடத்தும் 2017ம் ஆண்டுக்கான Universal Periodic Reviewல் இந்தியாவின் சார்பாக கலந்துகொள்பவர் யார்?**

A. Amitabh Kant
B. Arvind Panagariya
C. Shaktikanta Das
D. Mukul Rokatji

**விடை : D. Mukul Rokatji**

May 4 2017 அன்று ஜெனிவாவில் நடைபெறும் UN Human Rights Council (UNHRC) நடத்தும் 2017ம் ஆண்டுக்கான Universal Periodic Reviewல் இந்தியாவின் சார்பாக கலந்துகொள்பவர் வழக்கறிஞர் திரு. Mukul Rokatji ஆவார். இதில் இவர் இந்தியாவால் பதிவு செய்யப்பட்ட உரிமைகள் மீறல், சிறுபான்மையினர் மற்றும் மதங்கள் சம்பந்தமான உரிமைகளுக்காக வாதிடுவார்.அதோடு காஷ்மீர் பிரச்சினையைப்பற்றியும் அவர்களின் உரிமைகள் பற்றியும் வாதிடுவார். UPR என்பது UNHRC உடனிணைந்த ஓர் அமைப்பாகும். இதில் மனித உரிமைகளைப்பற்றி 4 வருடங்களுக்கொரு முறை ஐ. நா உறுப்பினர்கள் ஆய்வு செய்வனர். இது ஒவ்வொரு நாடும் தங்களின் மனித உரிமைகளை எப்படி மேம்படுத்த வேண்டும் என்று செய்யும் ஒரு செயல்முறையாகும்.

**6. எந்த நாடு 2017 UNESCO / Guillermo Cano World Press Freedom Prize விழாவை நடத்துகிறது?**

A. பின்லாந்து

B. தாய்லாந்து

C. கனடா

D. இந்தோனேசியா

**விடை : D. இந்தோனேசியா**

2017ம் ஆண்டுக்கான UNESCO / Guillermo Cano World Press Freedom Prize விழாவை மே 1 முதல் 4 வரை ஜகர்தாவில், இந்தோனேசிய அரசாங்கம் நடத்துகிறது. சிறை சென்ற வந்த சுவிடன் நாட்டு பத்திரிக்கையாளர் Dawid Isaak அவர்கள், இவ்வாண்டுக்கான பரிசை பெறுகிறார். எரித்திரிய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு, எங்கே உள்ளாரென்றே தெரியாத நிலையில், இப்பரிசை அவரது மகள் “Bethelem Isaak” அவர்கள் மே 3 அன்று நடைபெறும் விழாவில் கலந்துகொண்டு பெற்றுக்கொள்வார். இவ்விழாவின் 2017க்கான மையக்கரு “Critical Minds for Critical Times: Media’s Role in Advancing Peaceful, Just and Inclusive Societies” ஆகும். 1948, மனித உரிமைகள் சரத்து 19ன் படி பத்திரிகை சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வுக்காக வருடந்தோறும் மே 3 அன்று இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

**7. எந்தத்தேதியில் ஐ. நா முதன் முதலில் உலக TUNA தினத்தை கடைபிடித்தது?**

A. மே 3

B. மே 2

C. மே 4

D. மே 5

**விடை : B. மே 2**

உலகின் மிக பிரபலமான மீன் வகையான TUNAவின் முக்கியத்துவத்தை உலக மக்களுக்கு உணர்த்துவதற்காக, முதன் முதலாக மே 2 2017 அன்று ஐ. நா "உலக TUNA தினத்தை" கொண்டாடியது. உலக உணவு உற்பத்தி, பொருளாதாரம், வாழ்வாதாரம் போன்றவற்றில் இம்மீன் வகையின் பங்கு அளப்பரியது. 80க்கும் அதிகமான நாடுகளில் இந்த மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் இந்திய & பசிபிக் பேராழிகளில் இதனை வளர்க்கின்றனர். 2016 டிசம்பரில் நடைபெற்ற ஐ. நா சபை கூட்டத்தில் இந்த நாளை அனுசரிப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

**8. எந்த நாடு ஆசிய வளர்ச்சி வங்கியின் 50வது ஆளுநர்களுக்கான வருடாந்திர கூட்டத்தை நடத்தவுள்ளது?**

A. ஜப்பான்

B. இந்தியா

C. தென் ஆப்ரிக்கா

D. இலங்கை

**விடை : A. ஜப்பான்**

ஆசிய வளர்ச்சி வங்கியின் 50வது ஆளுநர்களுக்கான வருடாந்திர கூட்டத்தை ஜப்பான் அரசாங்கம் வருகிற மே 4 முதல் 7 வரை டோக்கியோவிலுள்ள யோகிஹோமாவில் நடத்தவுள்ளது. இந்த கூட்டத்தின் சாராம்சம் "Building Together the Prosperity of Asia" ஆகும். இந்நிகழ்வு ஆசிய மற்றும் பசிபிக்கிற்கிடையேயான கூட்டுறவு, வர்த்தகம், நிதி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார இணைப்புகளை உறுதிப்படுத்துவதை வலியுறுத்துகிறது.

**9. எந்த ஆண்டின் அடிப்படையில் இந்தியாவின் தொழில்துறை உற்பதிக்குறியீடு (Index of Industrial Production-IIP) மதிப்பிடப்படுகிறது?**

A. 2006-2007
B. 2008-2009
C. 2010-2011
D. 2011-2012

**விடை : D. 2011-2012**

பொருளாதார நிகழ்வுகளை மிகச்சரியாக கணக்கிட 2011-2012ம் ஆண்டை அடிப்படையாகக்கொண்டு, இந்தியாவின் முதன்மை புள்ளியியல் அலுவலர் மற்றும் MOSPIன் செயலருமான திரு. T C A Anand ஒரு புதிய முறையை மே 9 2017 அன்று அறிமுகப்படுத்தவுள்ளார். அதுவே இந்தியாவின் புதிய தொழில்துறை உற்பதிக்குறியீடு ஆகும். இந்த புதிய முறையானது நிலையான தன்மையை

கொண்டது. தற்போது 2004-2005 ஆண்டின் அடிப்படையில் இது கணக்கிடப்பட்டு வருகிறது. இது பலதரப்பட்ட அடிப்படை பொருட்கள், நுகர்வோர் பொருட்கள் ஆகியவற்றின் மேலோட்டமான உற்பத்தியையும், அவற்றின் பொருளாதார வளர்ச்சியையும் காட்டக்கூடியது. மேலும் GDP(Gross Domestic Product), GVA(Gross Value Addition) & CPI(Consumer Price Index) ஆகியவற்றை 2011-2012ம் ஆண்டின் அடிப்படையில் கணக்கிடுவர். Wholesale Price Index(WPI) ம் புதிய முறையிலேயே இனி கணக்கிடப்படும்.

**10. ஆந்திர பிரதேச மாநிலத்தின் மின் திட்டத்திற்கு, Asian Infrastructure Investment Bank (AIIB) எவ்வளவு நிதியுதவி அளிப்பதாக கூறியுள்ளது?**

A. $120 million
B. $160 million
C. $185 million
D. $220 million

**விடை : B. $160 million**

ஆந்திராவின் 24x7 மின் திட்டத்திற்கு சீனா ஆதரவிலிருக்கும் Asian Infrastructure Investment Bank (AIIB), $160 million பணவுதவி அளிப்பதாக உறுதியளித்துள்ளது. இதன் மூலம் ஆந்திர மாநிலத்தில் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்படும். ஓர் இந்திய திட்டத்திற்காக AIIB பணம் வழங்குவது இதுவே முதல்முறை. இத்திட்டத்திற்காக உலக வங்கியும்(WB) ஒரு பகுதி பணவுதவி செய்துள்ளது. இத்திட்டம் 2014ல் இந்திய அரசாங்கம் உருவாக்கிய "Power for All Program" திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின்("Power for All Program") படி தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாநிலங்களிலும் அடுத்த 5 வருடத்துக்குள் தடையற்ற மின்சார வசதியை ஏற்படுத்துவதேயாகும்.

## TNPSC Tamil Current Affairs 4th May 2017

**1. ஆசிய வளர்ச்சி வங்கியின் சமீபத்திய அறிக்கையான "Asian Development Outlook 2017"ன் படி எதிர்வரும் 2018ம் நிதியாண்டில், இந்தியாவின் GDP என்னவாக இருக்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது?**

A. 7.4 %
B. 7.6 %
C. 7.7 %
D. 7.1 %

**விடை : A. 7.4 %**

ஆசிய வளர்ச்சி வங்கியின் சமீபத்திய அறிக்கையான "Asian Development Outlook 2017"ன் படி எதிர்வரும் 2018ம் நிதியாண்டில், இந்தியாவின் GDP 7.4 % இருக்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது. இவ்வறிக்கையின்படி GDPயின் வளர்ச்சி விகிதம் 2018-19 நிதியாண்டில் 7.6 % வரை உயரும் என கூறப்படுகிறது. சென்ற 2016-17 நிதியாண்டில் இது 7.1 % என இருந்தது. GST வரி, புதிய நொடிப்பு சமாளிக்கும் சட்டம் (New bankruptcy law) ஆகியவையால் இந்தியாவில் வியாபாரம் செய்வது சுலபமாக இருக்கிறது என்று, ஆசிய வளர்ச்சி வங்கியின் முதன்மை பொருளாதார நிபுணர் Yasayuki Sawada கூறியுள்ளார்.

**2. சமீபத்திய "Fitch Ratings" ன் மதிப்பாய்வின்படி, இந்தியாவின் உண்மையான GDP வளர்ச்சி விகிதம் என்னவென்று கணிக்கப்பட்டிருக்கிறது?**

A. 7.4 %
B. 7.6 %
C. 7.7 %
D. 7.5 %

**விடை : C. 7.7 %**

உலகப்பிரசித்தி பெற்ற மதிப்பாய்வு நிறுவனமான "Fitch Ratings" ன் சமீபத்திய மதிப்பாய்வின்படி, இந்தியாவின் உண்மையான GDP வளர்ச்சி விகிதம் 7.7 % என கணிக்கப்பட்டிருக்கிறது. இது 2016 FY 16(Fiscal Year) நிதியாண்டில் 7.1 % ஆகும். 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தி, வளர்ச்சியை அதிகரிப்பதற்கான சில முக்கியமான சீர்திருத்தங்களையும் அதிக வருவாய் தருவதையும் இவ்வறிக்கை எதிர்பார்க்கிறது. இந்நிறுவனம் இந்தியாவின் சவரன் மதிப்பை மாற்றாமல் "BBB" எனும் குறைந்த முதலீடு தரத்திலேயே வைத்துள்ளது. இந்நிறுவனத்தின் இந்திய சவரன் மதிப்புகள், இவற்றிற்கு நொடிந்த நிதி நிலையையும் சாதகமான வெளி வருவாயையும் தருவதாக கூறியுள்ளது.

**3. இந்திய அரசியலமைப்பின்படி Sualgiri & Swalgiri ஆகிய இரு சாதிப்பிரிவுகளும், சமிபத்தில் பட்டியல் இனத்தவர்களாக (Scheduled Caste) மாற்றப்பட்டனர். இப்பிரிவினர் எந்த மாநிலத்தை சேர்ந்தவர்களாவர்?**

A. மணிப்பூர்

B. ஒடிசா

C. அசாம்

D. மேற்கு வங்கம்

**விடை : B. ஒடிசா**

இந்தியக்குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜியின் ஆணையின்பேரில் 2017 சட்டத்திருத்தத்தின் படி, Sualgiri & Swalgiri ஆகிய இரு சாதிப்பிரிவுகளும், பட்டியல் இனத்தவர்களாக (Scheduled Caste) மாற்றப்பட்டனர். எனவே இவர்கள் SC பிரிவினருக்கு அரசாங்கத்தால் கிடைக்கப்பெறும் அனைத்து சலுகைகளுக்கும் தகுதி பெறுகின்றனர். திருத்தியமைக்கப்பட்ட ஒடிசா மாநில சாதிப்பட்டியலில், "Sabakhia, Sualgiri, Swalgiri" ஆகிய மூன்று சாதிப்பிரிவினரும் பட்டியல் இனத்தவர்களாவர். ஒரு மாநிலத்திலோ அல்லது யூனியன் பிரதேசத்திலோ இருக்கும் ஒரு பிரிவினரை பட்டியல் இனத்தவரென்று குறிப்பிட, இந்திய அரசியலமைப்பு, குடியரசுத்தலைவருக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்துள்ளது. பாராளுமன்றத்திலும் இம்மாற்றத்திற்கான பட்டியல் நடைமுறைபடுத்தப்படும். இந்த புது சட்டமே, 1964 பட்டியல் இனத்தவர் ஆணையின்படி பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் என்றிருந்த பெயரை புதுச்சேரி என்று மாற்ற வழி செய்தது.

**4. உலகின் மிக நீளமான ரயில்வே மேம்பாலம் எந்த இந்திய நதியின் மேல் கட்டப்படுகிறது?**

A. நர்மதா

B. கோதாவரி

C. கங்கா

D. செனாப்

**விடை : D. செனாப்**

உலகின் மிக நீளமான ரயில்வே மேம்பாலம் ஜம்மு & காஷ்மீரிலுள்ள செனாப் நதியின் மேல் கட்டப்படுகிறது. இது வரும் 2019ம் ஆண்டில் கட்டிமுடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது கத்ரா முதல் பனிகல்

வரையுள்ள 111 km தூரத்தை இணைக்கும். இது உதம்பூர் – ஸ்ரீநகர் – பராமு ரயில் இணைப்புத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். 1,100 கோடி செலவில் உருவாகும் இப்பாலத்தில் 24,000 டன் இரும்பு பயன்படுத்தப்படும். இது ஆற்றுப்படுகையிலிருந்து 359 m உயரத்தில் கட்டப்படும். இது 260 km வேகத்தில் வீசக்கூடிய காற்றையும் தாங்கவல்லது. கட்டிமுடித்தபின், சீனாவில் பாயும் Beipen ஆற்றின் மேலுள்ள Shuibai பாலத்தின் சாதனையை (275 m) இது முறியடிக்கும்.

**5. எந்த இந்திய கால்பந்தாட்ட வீரர் 2017ம் ஆண்டுக்கான “Hero of the league 2017” விருதை பெற்றார்?**

A. Debjit Majumder
B. Anas Edathodika
C. Sunil Chhetri
D. Alfred Kemah Jaryan

**விடை : C. Sunil Chhetri**

பெங்களூரைச்சேர்ந்த கால்பந்தாட்ட வீரர் Sunil Chhetri, 10வது “Hero I-League” போட்டியில் வெற்றிபெற்று, 2017ம் ஆண்டுக்கான “Hero of the league 2017” விருதை பெற்றிருக்கிறார். சிறந்த கோல்கீப்பருக்கான விருதை Mohun Bagan’s Debjit Majumder வென்றார். சிறந்த மிட்ஃபீல்டராக Alfred Kemah Jaryanம் “Jarnail Singh Best Defender”க்கான விருதை Anas Edathodika பெற்றுக்கொண்டார்.

**6. ஐ. நா மனித உரிமைகள் ஆணையத்தின் Universal Periodic Reviewன் 27வது விழாவை எந்த நாடு நடத்துகிறது?**

A. சுவிச்சர்லாந்து
B. சிங்கப்பூர்
C. தென் ஆப்ரிக்கா
D. செஷல்ஸ்

**விடை : A. சுவிச்சர்லாந்து**

சுவிச்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனிவாவில், மே 1 முதல் 12 வரை Universal Periodic Reviewன் 27வது விழா நடைபெறுகிறது. இதில் மே 4 2017 அன்று இந்தியாவின் தேசிய அறிக்கை விவாதிக்கப்படும். இதில் இந்தியாவின் சார்பாக வாதிடுபவர் வழக்குரைஞர் திரு. முகுல் ரோகத்ஜி ஆவார். இக்கூட்டத்தில் மனித உரிமைகள் பற்றியும், கூட்டுறவு பற்றியும் நாடுகளுக்குண்டான பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கப்படும்.

**7. 2017ம் ஆண்டுக்கான உலக ஆஸ்துமா தினத்தின் மையக்கருத்து எது?**

A. Reduce the asthma burden (ஆஸ்துமாவின் சுமையை குறைப்போம்)

B. Better air better breathing (நல்ல காற்று நல்ல சுவாசம்)

C. You Can Control Your Asthma (நீங்களே உங்கள் ஆஸ்துமாவை கட்டுப்படுத்த முடியும்)

D. Unite to overcome asthma (ஒற்றுமையால் ஆஸ்துமாவை வெற்றிகொள்வோம்)

**விடை : B. Better air better breathing**

2017ம் ஆண்டுக்கான உலக ஆஸ்துமா தினத்தின் மையக்கருத்து "Better air better breathing" ஆகும். ஆஸ்துமா பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்ல Global Initiative for Asthma (GINA) எனும் அமைப்பு, வருடந்தோறும் மே மாதம் முதல் செவ்வாய் அன்று இந்நாளை அனுசரிக்கிறது. இந்நோயால் 300 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனைத்தொடர்ந்து 2,50,000 மக்கள் இறந்து போவதாகவும் கூறப்படுகிறது.

**8. பாராளுமன்ற பொது கணக்குக்குழு (Public Accounts Committee – PAC) ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A. KV Thomas

B. Subhash Chandra Baheria

C. Janardan Singh Sigriwal

D. Mallikarjun Kharge

**விடை : D. Mallikarjun Kharge**

பாராளுமன்ற பொது கணக்குக்குழு (Public Accounts Committee – PAC) ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் காங்கிரஸ் தலைவர் திரு. Mallikarjun Kharge ஆவார். இவருக்கு முன் இப்பதவியில் ஏப்ரல் 30 2017 வரை திரு. KV Thomas பதவி வகித்தார். பாராளுமன்ற குழுக்களிலேயே மிகவும் பழமையான குழு இதுவே. இது இந்திய அரசாங்கத்திற்கு பாராளுமன்றம் அளிக்கும் நிதிகளுக்கான கணக்குகளை ஆய்வு செய்யும். இது சரிபாதி தன்னாட்சி கொண்டவோர் அமைப்பாகும். இது ராணுவம், அஞ்சல் துறை, வரி நிர்வாகம், ரயில்வே, போன்ற துறைகள் சம்பந்தமாக பொது தணிக்கை அதிகாரி சமர்பித்த அறிக்கைகளையும், கணக்குகளையும் ஆய்வு செய்யும்.

**9. தூதரக சேவைக்காக (Order of Diplomatic Service Merit) தென்கொரியாவின் Sungnye விருதை பெற்ற இந்தியர் யார்?**

A. Arun Thakur

B. Rajive Kaul

C. Rajesh Shukla
D. Sonali Mishra

**விடை : B. Rajive Kaul**

Nicco குழுவின் தலைவரும், CIIன் முன்னாள் தலைவருமான திரு. Rajive Kaul அவர்கள், தூதரக சேவைக்காக (Order of Diplomatic Service Merit) தென்கொரியாவின் Sungnye விருதை பெற்றுக்கொண்டார். இவ்விருதை தென்கொரியாவின் பிரதம அமைச்சர் Hwang Kyo அவர்கள் புது டில்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

**10. 2017ம் ஸ்வச் பாரத் கணக்கெடுப்பின் படி, தூய்மையான இந்திய நகரம் எது?**

A. இண்டூர்
B. திருச்சிராப்பள்ளி
C. மைசூரு
D. விசாகப்பட்டினம்

**விடை : A. இண்டூர்**

2017ம் ஸ்வச் பாரத் கணக்கெடுப்பின் படி, தூய்மையான இந்திய நகரங்களின் பட்டியலில், மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள இண்டூர் நகரம் முதலிடத்தைப்பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து போபால் நகரம் இரண்டாமிடமும், விசாகப்பட்டினம் மூன்றாமிடமும், சூரத் நான்காமிடமும், மைசூரு ஐந்தாமிடமும், திருச்சி மாநகரம் ஆறாமிடமும், புது டில்லி ஏழாமிடமும், நவி மும்பை எட்டாமிடமும், வதோதரா ஒன்பதாமிடமும், சண்டிகார் பத்தாமிடமும் பெற்றுள்ளன. இக்கருத்துக்கணிப்பு 434 இந்திய நகரங்களில் 37 லட்சம் மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து Swachh Survekshan குழுவால் நடத்தப்பட்டது. இக்கருத்துக்கணிப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட அம்சங்கள் பின்வருமாறு,
அ) திடக்கழிவு மேலாண்மை(திறந்தவெளி மலம் கழிப்பு நிலையும் சேர்த்து)
ஆ) மக்களின் கருத்து (30 %)
இ) தன்னிச்சையான கருத்துக்கள் (25 %)

இதனை இந்திய தரக்குழு, 421 மதிப்பீட்டார்களைக்கொண்டு 434 நகரங்களிலுள்ள 17,500 தலங்களில் நேரடியாக வேலைக்கு உட்படுத்தி ஆய்வு செய்துள்ளது.

# TNPSC Tamil Current Affairs 5th May 2017

1. இந்தியாவிலேயே முதன்முதலாக சிறு ஆயுதங்களை செய்யும் தனியார் தொழிற்சாலை, எந்த மாநிலத்தில் அமையவுள்ளது?

A. அசாம்

B. உத்திர பிரதேசம்

C. மத்திய பிரதேசம்

D. மகாராஷ்டிரா

விடை : C. மத்திய பிரதேசம்

இந்தியாவிலேயே முதன்முதலாக சிறு ஆயுதங்களை செய்யும் தனியார் தொழிற்சாலை, மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள மலன்பூரில் இந்திய இஸ்ரேல் கூட்டு முயற்சியில் அமையவுள்ளது. உலகத்தரம் வாய்ந்த ஆயுதங்களை உற்பத்தி செய்து இந்திய ராணுவத்திற்கு வழங்குவதே இதன் நோக்கமாகும். இத்தொழிற்சாலையில் X95 carbine and assault rifle, Galil sniper rifle, Tavor assault rifle, Negev Light Machine Gun (LMG) ஆகிய நான்கு விதமான ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படும். இது இந்தியாவின் ராணுவ குழுமமான "Punj Lloy"ம் இஸ்ரேலின் ஆயுத அமைப்பான (IWS)ம் இணைந்த கூட்டு முயற்சியில் உருவானதாகும். இந்த ஆயுதங்கள் அனைத்தும் 100% தொழில்நுட்ப முறையிலேயே உருவாக்கப்படும்.

2. இந்திய தேயிலை சங்கத்தின் (Tea Board of India) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Prabhat Kamal Bezboruah

B. M G K V Bhanu

C. Santosh Sarangi

D. M S Boje Gowda

விடை : A. Prabhat Kamal Bezboruah

இந்திய தேயிலை சங்கத்தின் (Tea Board of India) புதிய தலைவராக, தேயிலை உற்பத்தியில் முன்னணியிலிருக்கும் திரு. Prabhat Kamal Bezboruah அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வரும் Nov 1 2018 வரை

இப்பதவியிலிருப்பார். அசாமில் 12 தேயிலைத்தோட்டங்களை கொண்டு ஆண்டுக்கு 55 லட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்யும் Bokahola தேயிலை நிறுவனத்தின் உரிமையாளரான இவர், தேயிலை ஆராய்ச்சி கழகத்தின் தலைவருமாவார். மேலும், இந்திய காபி சங்கத்தின் தலைவராக திரு. M.S.Boje Gowda அவர்கள் டிசம்பர் 14 2018 வரை பதவி வகிப்பார்.

**3. இந்தியாவில் "Express Wi-Fi" இணையதள சேவையை தொடங்கிய சமூக வலைத்தளம் எது?**

A. YouTube

B. Facebook

C. Twitter

D. Instagram

விடை : B. Facebook

இந்தியாவில் "Express Wi-Fi" இணையதள சேவையை தொடங்கிய சமூக வலைத்தளம் Facebook ஆகும். இது ஏற்கனவே உத்தரகாண்ட், குஜராத், மேகலாயா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 700க்கும் அதிகமான இடங்களில் தனது சேவையை தொடங்கியுள்ளது. 500க்கும் அதிகமான உள்ளூர் தொழில் முனைவோர்களை பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு இச்சேவையை வழங்கி வருகிறது. இதற்கான கட்டணம் ஒரு நாளுக்கு 10 & 20 ரூபாய் அல்லது மாதம் 200 & 300 ஆகும். இதன் நோக்கம் குறைந்த விலையில் இணையதள சேவையை வழங்குவதே ஆகும். இதோடு, விரைவில் ஏர்டெல் நிறுவனத்துடன் இணைந்து மேலும் 20,000 இடங்களில் இச்சேவையை வழங்க முடிவெடுத்துள்ளது. இந்தத்திட்டம் கென்யா, டான்சானியா, நைஜீரியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் ஏற்கனேவே செயல்முறையில் உள்ளது.

**4. எந்த மாநிலம் சமீபத்தில், பங்கனப்பள்ளி மாம்பழங்களுக்கு புவிசார் குறியீடு உரிமையை பதிந்துள்ளது?**

A. உத்திர பிரதேசம்

B. இமாச்சல பிரதேசம்

C. மத்திய பிரதேசம்

D. ஆந்திர பிரதேசம்

விடை : D. ஆந்திர பிரதேசம்

சுவைமிகுந்த பங்கனப்பள்ளி மாம்பழங்களுக்குக்கான புவிசார் குறியீடை, ஆந்திர பிரதேச மாநிலத்திற்கு, சென்னை புவிசார் குறியீட்டு மையம் வழங்கியுள்ளது. இதன் மூலம் பங்கனப்பள்ளி மாம்பழங்களுக்குக்கான உரிமையை ஆந்திர மாநிலம் பெற்றுள்ளது. இந்த வகை மாம்பழங்கள் 100 வருடத்திற்கும் மேலாக ஆந்திராவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இது பெனசன், பனசன், சப்பட்டை, சபெடா போன்ற வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல காலங்கள் வளர்ந்து, வருவாய் தருவதால், புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. இனி இந்த மாம்பழங்களை ஆந்திர அரசின் ஒப்புதல் இல்லாமல் வேறு எவரும் உற்பத்தி செய்ய முடியாது.

5. 2017 National Standards Conclave (NSC) கூட்டம் எந்த நகரத்தில் நடைபெற்றது?

A. புது டில்லி

B. ஜெய்பூர்

C. லக்னோ

D. இண்டூர்

விடை : A. புது டில்லி

மத்திய மாநில அமைச்சகங்களில் தரத்தினைப்பற்றிய விழிப்புணர்வை கொண்டுவரவும், உலக வர்த்தகத்தின் பார்வையில் தரத்தின் வளர்ச்சியைபற்றி தயாராகவும், மே 1 முதல் 2 வரை, புது டில்லியில் 4வது National Standards Conclave (NSC) கூட்டம் நடைபெற்றது. இந்திய பொருளாதார துறை, Confederation of Indian Industry (CII), Bureau of Indian Standards (BIS) மற்றும் National Accreditation Board for Certification Bodies (NABCB) ஆகியவை இணைந்து இக்கூட்டத்தை நடத்தின.

6. சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

A. மே 3

B. மே 4

C. மே 5

D. மே 6

விடை : B. மே 4

சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் மே 4 அன்று கொண்டாடப்படுகிறது. இது தீயணைப்பு வீரர்களின் தியாகத்தையும், அர்பணிப்பையும், உயிர்காக்கும் திறத்தையும், அவர்களின் முக்கியத்துவத்தையும் அறிந்துகொள்ள கொண்டாடப்படுகிறது.இது ஆஸ்திரேலியாவில் சனவரி 4 1999 அன்று நடந்த காட்டுத்தீயில், தம் இன்னுயிர் நீத்த 5 வீரர்களின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.

7. இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி குழுவின் (Indian Council of Social Science Research (ICSSR)) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Ashok Modak

B. Braj Bihari Kumar

C. Jitendra Mohan

D. S K Thorat

விடை : B. Braj Bihari Kumar

இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி குழுவின் (Indian Council of Social Science Research (ICSSR)) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் திரு. Braj Bihari Kumar ஆவார். இவர் Dialogue & Chintan Srijan ஆகிய பத்திரிக்கைகளின் பதிப்பாசிரியராவார். இதற்கு முன் S K Thorat தலைவராக இருந்தார். இப்பதவியின் காலம் மூன்றாண்டுகள் ஆகும். புது டில்லியை தலைமையிடமாகக்கொண்டு இயங்கி வரும் இந்த (ICSSR) குழு என்பது சமூக அறிவியல் துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஒரு குழுவாகும்.

8. இந்திரா காந்தி தேசிய வன கல்விச்சாலை (Indira Gandhi National Forest Academy (IGNFA)) ன் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A. இண்டூர்

B. விசாகப்பட்டினம்

C. டேராடூன்

D. புனே

விடை : C. டேராடூன்

(IGNFA) என்பது மத்திய சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறையின் கீழ் இயங்கிவரும் ஓர் அமைப்பாகும். இது வன பாதுகாவலர்களுக்கு சிறந்த பயிற்சியை அளித்து வனங்களை பாதுகாக்க அவர்களை நியமிக்கிறது. மே 5 2017 அன்று நடைபெற்ற, இக்கல்விச்சாலையின் பட்டமளிப்பு விழாவில் மேதகு இந்தியக்குடியரசுத்தலைவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

9. Vansda தேசியப்பூங்கா எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. ராஜஸ்தான்

B. பஞ்சாப்

C. அசாம்

D. குஜராத்

விடை : D. குஜராத்

தெற்கு குஜராத்தில், நவஸ்ரீ மாவட்டத்தில் “தங்” மரங்கள் நிறைந்த பாதுகாக்கப்பட்ட பகுதியில் இந்த தேசியப்பூங்கா அமைந்துள்ளது. இந்திய சிறுத்தை, Rhesus (ரீசஸ்) வகை குரங்குகள், புனுகுப்பூனை, நான்கு கொம்பு மான், காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, குரைக்கும் மான் ஆகியவை இங்கே உள்ளன. பருவகாலம் முடிந்து குளிர்காலம் வரை இந்த பூங்காவுக்கு சுற்றுலா செல்ல உகந்த காலமாகும்.

10. விகாஸ் கிருஷ்ணன் யாதவ், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. குத்துச்சண்டை

B. மல்யுத்தம்

C. டேபிள் டென்னிஸ்

D. வூஷூ **(Wushu)**

விடை : **A. குத்துச்சண்டை**

சமிபத்தில், நடுத்தர எடைகொண்ட விகாஸ் கிருஷ்ணன் யாதவ், உஸ்பெகிஸ்தானிலுள்ள, **Tashketan**ல் நடைபெற்ற ஆசிய குத்துச்சண்டை அரையிறுதிப்போட்டியில் 75 கிலோ பிரிவில் கலந்துகொண்டார். இதில் தென் கொரியாவைச்சேர்ந்த **LeeDongyun**னிடம் தோல்வியை தழுவினார். இதற்குக்காரணம் இவரின் எடை போட்டியாளரின் எடையைவிட குறைவாக இருந்ததேயாகும் என ஆசிய குத்துச்சண்டை கூட்டமைப்பு கூறியுள்ளது. நடந்து முடிந்த அரையிறுதிப்போட்டியில் விகாஸ் கிருஷ்ணன் யாதவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

---

# TNPSC Tamil Current Affairs 6th & 7th May 2017

**1. முக்கிய சேவைகளின் செயல்திறனுக்காக, தொழில்நுட்ப தரத்தை தளர்த்திக்கொள்ள Insolvency and Bankruptcy Board of India (IBBI) எந்தக்குழுவை அமைத்துள்ளது?**

A. R B பர்மன் குழு

B. நந்தி லால் சாரதா குழு

C. புலக் கோஷ் குழு

D. V G கண்ணன் குழு

விடை : A. R B பர்மன் குழு

(IBBI)ன் 14வது ஒழுங்குமுறை விதிப்படி, இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தேசிய புள்ளியியல் குழுவின் தலைவர் பேராசிரியர் திரு. R B பர்மன் அவர்களின் தலைமையின் கீழ் செயல்படும். இக்குழு முக்கிய சேவைகளின் செயல்திறனுக்காக, தொழில்நுட்ப தரத்தை தளர்த்திக்கொள்ள சில பரிந்துரைகளை கூறும். அதாவது, நிலையான சேவைகளில் சிறு மாற்றம், பயனாளிகளின் பதிவு பற்றி, தனித்தன்மையான கூறுகள் போன்றவையாகும்.

**2. உலகின் மிகப்பெரிய X-லேசர் கதிரான "European XFEL", முதன் முதலில் எந்த நாட்டிலிருந்து பாய்ச்சப்பட்டது?**

A. பிரான்ஸ்

B. ஜெர்மனி

C. இத்தாலி

D. பெல்ஜியம்

விடை : B. ஜெர்மனி

European X-ray Free Electron Laser (XFEL)தான் உலகிலேயே மிகப்பெரிய X-லேசர் கதிரை உற்பத்தி செய்தது. 3.4 கி. மீ நீளமுடைய இது ஹாம்பர்கிலிருந்து ஷேனபெல் வரை பாய்ந்தது. இதிலிருந்து விஞ்ஞானிகள் நிறைய புதிய பொருட்களை கண்டறிந்தனர். இது சாதாரண துகள் முடுக்கிகளைக்காட்டிலும் பில்லியன் மடங்கு பிரகாசமானதாகும்.இதன் அலை நீளம் 0.8 நேனோ

மீட்டர்களாகும். இதனை பயன்படுத்தி புகைப்படங்கள், காணொளிகளை அணு அளவில்கூட எடுக்க முடியும். மேலும், நோய்களுக்கான சிகிச்சைமுறைகளையும் கண்டறியலாம்.

**3. 2017ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த இந்திய போக்குவரத்து மற்றும் தளவாடங்களின் உச்சிமாநாடு, எந்த நகரத்தில் நடைபெற்றது?**

A. சென்னை

B. ராஜ்கோட்

C. புது டில்லி

D. புனே

விடை : C. புது டில்லி

மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம், 2017ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த இந்திய போக்குவரத்து மற்றும் தளவாடங்களின் உச்சிமாநாட்டை மே 3 அன்று புது டில்லியில் நடத்தியது. இந்த மூன்று நாள் மாநாட்டில் பல்முனை வளர்ச்சித்திட்டங்களுக்காக பங்குதாரர்களின் நிலைபற்றி பேசப்பட்டது. 34 முதலீட்டாளர்களின் 2 லட்சம் கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த மாநாட்டில் மத்திய மாநில அமைப்புகளை சார்ந்தவர்கள், உலக வங்கி, உலகலாவிய போக்குவரத்து உறுப்பினர்களென இந்திய & அயல்நாட்டைசேர்ந்த 3000 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**4. சமீபத்தில் காலமான Captain Chand Roop, எந்த விளையாட்டைச்சார்ந்தவர்?**

A. பேட்மிட்டன்

B. குத்துச்சண்டை

C. டென்னிஸ்

D. மல்யுத்தம்

விடை : D. மல்யுத்தம்

துரோணாச்சாரியார் விருதுபெற்ற பிரசித்திபெற்ற மல்யுத்த பயிற்சியாளர் Captain Chand Roop, தனது 87வது வயதில் டில்லியில் காலமானார். இவர்

1948ல் ராணுவத்தில் மல்யுத்த பயிற்சி தருவதற்காக சேர்ந்தார். அங்கே இவர் பல வீரர்களுக்கு மல்யுத்த பயிற்சி கொடுத்தார், அதில் ஒருவரே புகழ்பெற்ற மல்யுத்த வீரரான விஜய் குமார் ஆவார். இவர் (Captain Chand Roop) ஆசிய விளையாட்டில் வெண்கலப்பதக்கமும், பாரத் கேசரி பட்டமும் பெற்றிருக்கிறார். அர்ஜுனா விருது பெற்ற வீரர்களான Ombeer Singh, Rohtash Dahiya, Ashok Kumar and Ramesh Kumar ஆகியோரின் பயிற்சியாளர் இவரே.

5. காலமான ஓய்வுபெற்ற நீதிபதி Leila Seth, எந்த உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாவார்?

A. இமாச்சல பிரதேச உயர்நீதி மன்றம்.

B. மத்திய பிரதேச உயர்நீதி மன்றம்.

C. ஆந்திர பிரதேச உயர்நீதி மன்றம்.

D. கேரளா உயர்நீதி மன்றம்.

விடை : A. இமாச்சல பிரதேச உயர்நீதி மன்றம்.

ஓய்வுபெற்ற நீதிபதி Leila Seth(86), இமாச்சல பிரதேச உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாவார். இவர் சமீபத்தில், நொய்டாவிலுள்ள தனது இல்லத்தில் காலமானார். லண்டன் பார் தேர்வில் முதலிடம் பிடித்த முதல் பெண்ணும், டில்லி உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியும் இவரே. டிசம்பர் 16 அன்று டெல்லியில் நடந்த கூட்டு வன்புணர்வு நிகழ்வுக்குப்பின், 2012ல் பாலியல் தொல்லைகள் தரும் கிரிமினல் குற்றவாளிக்களுக்கான தண்டனையில் சட்ட திருத்தம் மேற்கொள்ள மூன்றுபேர் கொண்ட “ஜஸ்டிஸ் வெர்மா குழு” அமைக்கப்பட்டது. அம்மூவரில் ஒருவராக இவர் இருந்தார். 2000 வரை சட்டக்குழுவிலும் உறுப்பினராக இருந்தார். இந்து முன்னணி விதியில், கூட்டுக்குடும்பத்தில் வாழும் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு உண்டு என்ற சட்ட திருத்தத்தையும் கொண்டு வந்தார். இவர் புகழ்பெற்ற எழுத்தாளர் விக்ரம் சேத்தின் தாயாராவார்.

6.எந்த மாநிலம் ஐ. நா & IITயுடன் இணைந்து புதுமை கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வகம் அமைக்க கையெழுத்துத்திட்டுள்ளது?

A. மத்திய பிரதேசம்

B. சத்தீஸ்கர்

C. அசாம்

D. ஒடிசா

விடை : B. சத்தீஸ்கர்

சத்தீஸ்கர் அரசு ஐ.நா & IIITயுடன் இணைந்து புதுமை கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வகம் அமைக்க மே 7 2017 அன்று முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்துத்திட்டுள்ளது. இதற்கான வேலைகள் கையெழுத்துத்திட்ட அடுத்த 15 நாட்களில் தொடங்கப்படும். இதன் நோக்கம் "ஸ்மார்ட் கிராமங்களை" டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் கொண்டு வருவதே ஆகும்.

7. சர்வதேச பத்தியமில்லா நாள் International No diet day (INDD) எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?

A. மே 7

B. மே 8

C. மே 6

D. மே 5

விடை : C. மே 6

வருடந்தோறும் மே 6 அன்று ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தை வலியுறுத்தியும், தேவையற்ற உணவுப்பழக்கத்தின் தீமையைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இதன் அடையாளம் வெளிர் நீல நிற ரிப்பனாகும்.

8. 2016க்கான Wisden-MCC (Melbourne Cricket Council) Cricket Photograph-ஐ வென்றவர் யார்?

A. Paul Miller

B. Adrian Murrel

C. Nigel Davies

D. Saqib Majeed

விடை : D. Saqib Majeed

2016க்கான Wisden-MCC (Melbourne Cricket Council) Cricket Photograph-ஐ ஸ்ரீநகரைச்சேர்ந்த, புகைப்படக்கலைஞரான Saqib Majeed வென்றுள்ளார். அதுல் கம்ப்ளேவுக்கு பிறகு இவ்விருதைப்பெறும் இரண்டாவது ஆசியரும், முதல் காஷ்மீரைச்சேர்ந்தவரும் இவரே. வருடந்தோறும் MCC 'Wisden Cricketer Almanack' என்ற புத்தகத்தை வெளியிடும். இதில் உலகின் சிறந்த விளையாட்டு சம்பந்தமான புகைப்படங்கள் இடம்பெற்றிருக்கும்.

9. சமீபத்தில் மறைந்த நீச்சல் வீரர் Adolph Kiefer எந்த நாட்டைச்சேர்ந்தவர்?

A. ஐக்கிய நாடுகள் (US)

B. ஜெர்மனி

C. பிரான்ஸ்

D. இரஷ்யா

விடை : A. ஐக்கிய நாடுகள் (US)

உலகின் மிக வயதான ஒலிம்பிக் வெற்றி வீரர் Adolph Kiefer(98), சமீபத்தில் Wadsworth, Illinoisல் காலமானார். உலகிலேயே 100 நீட்டளவு(yard) தூரத்தை ஒரே நிமிடத்தில் பின்னிருந்து நீச்சலடித்து கடந்தவர் இவர் ஒருவரே. நீர் விளையாட்டுகளுக்காக நிறைய புதிய கண்ண்டுபிடிப்புகளை இவர் தன் வாழ்நாளில் உருவாக்கியுள்ளார்.

10. எந்த நாட்டின் ஹாக்கி அணி 2017 ஆண்டுக்கான Sultan Azlan Shah கோப்பையை வென்றுள்ளது?

A. இந்தியா

B. நியுசிலாந்து

C. ஆஸ்திரேலியா

D. பிரிட்டன்

விடை : D. பிரிட்டன்

26வது Sultan Azlan Shah கோப்பைக்கான இறுதிப்போட்டி, மே 7 2017 அன்று Ipoh,

மலேசியாவில் நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலியாவை 4-3 என்ற கணக்கில் பிரிட்டன் வெற்றிகொண்டது. 23 ஆண்டுகளுக்கு பிறகு பிரிட்டனுக்கு இவ்வெற்றி கிடைத்துள்ளது. இந்தியா, நியூசிலாந்தை 4-0 என்ற கணக்கில் விஞ்சி, வெண்கலப்பதக்கம் வென்றது.

---

# TNPSC Tamil Current Affairs 8th May 2017

1. கீழ்க்காண்பதில் எது 22வது ஆசிய தடகளப்போட்டியின் அதிகாரப்பூர்வ சின்னமாகும்?

A. Bawean மான்

B. மிஷா

C. Olly ஆமை

D. பறக்கும் அணில்.

விடை : C. Olly ஆமை

22வது ஆசிய தடகளப்போட்டி, ஒடிசாவிலுள்ள புவனேஷ்வரில் வரும் சூலை 1 முதல் 4 வரை நடைபெறவுள்ளது. தற்சமயம் இதன் இலச்சினை மற்றும் சின்னத்தை , ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் வெளியிட்டுள்ளார். இந்த இலச்சினை, ஒரு தடகள வீரர் வெற்றிக்கோட்டை தொடுவது போலவும், அதன் பின்பு ஒடிசாவின் வரலாற்று சிறப்புமிக்க சுற்றுலாத்தலம் இருப்பது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற ஆலிவ் ரிட்லி ஆமைகளை நினைவுகூறும்விதமாக, Olly ஆமை இதன் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2. எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் உயிரி சுத்திகரிப்பு நிலையம் அமையவுள்ளது?

A. ஆந்திர பிரதேசம்

B. அசாம்

C. தமிழ்நாடு

D. மகாராஷ்டிரா

விடை : D. மகாராஷ்டிரா

இந்தியாவின் முதல் உயிரி சுத்திகரிப்பு நிலையம், மகாராஷ்டிரா மாநிலம் புனே மாவட்டத்திலுள்ள ரகு எனுமிடத்தில் அமையவுள்ளது. இதனை மத்திய சாலை போக்குவரத்து & நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கத்காரி தொடங்கிவைத்தார். இது உயிரி கழிவுகளிலிருந்து எத்தனாலை உற்பத்தி செய்யும். இது நெல், கோதுமை வைக்கோல்கள், பருத்தித்தண்டு, சோளத்தட்டை, கரும்புச்சக்கை போன்றவற்றிலிருந்து ஒரு

வருடத்திற்கு பத்து லட்சம் லிட்டர் எத்தனாலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இது விலை மலிவான, சுற்றுச்சூழலுக்கேற்ற எரிபொருளாகும்.

**3. 2017 பிரெஞ்சு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவர் யார்?**

A. Emmanuel Macron

B. Marine Le Pen

C. Francois Hollande

D. Jean-Luc Melenchon

**விடை : A. Emmanuel Macron**

2017 பிரெஞ்சு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவர் Emmanuel Macron. இவர் முந்தைய ஆட்சி அலுவலரும், முதலீடு வங்கிப்பணியாளரும் ஆவார். வரும் மே 14 2017 அன்று பதிவியேற்கவுள்ளார் நெப்போலியனுக்கு பிறகு, பிரெஞ்சு வரலாற்றியே இளம் ஜனாதிபதி ஆனவர் இவர். modern republic's foundation (1958) க்குப்பிறகு இரண்டு மாபெரும் இயக்கங்களைச்சாராத ஒருவர் ஜனாதிபதி ஆவதும் இதுவே முதல் முறை. இவர் ஏப்ரல் 2016ல் தான் தோற்றுவித்த En Marche! இயக்கத்தின் மூலம் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**4. Governing Council of UN-Habitat க்கு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடு எது?**

A. சீனா

B. இந்தியா

C. இரஷ்யா

D. இலங்கை

**விடை : B. இந்தியா**

மனித குடியிருப்புகளையும், சமூகம் சார்ந்த வாழ்வாதாரங்களையும் வலியுறுத்தும் ஐ. நா வின் அங்கமான United Nations Human Settlements Programme (UN-Habitat) க்கு ஒரு மனதாக தலைவராக தேர்ந்தேடுக்கபட்டுள்ள நாடு இந்தியா ஆகும். 1978ல் UN-Habitat உருவான பிறகு, 1988, 2007 மற்றும்

தற்போது 2017ல் இந்தியா தலைமையேற்றுள்ளது. **UN-Habitat,** தனது அறிக்கைகளை **United Nations General Assembly (UNGA)**விடம் சமர்ப்பிக்கும்.

**5. எந்த நாடு 26வது Governing Council (GC) of UN-Habitat-2017 ஐ நடத்துகிறது?**

A. இந்தியா

B. கென்யா

C. ஈக்குவடேர்

D. உருகுவே

**விடை : B. கென்யா**

மே 8 2017 அன்று கென்யாவிலுள்ள நைரோபியின் ஐ. நா அலுவலகத்தில் 26வது **Governing Council (GC) of UN-Habitat-2017** நடைபெறுகிறது. இதன் மையக்கருத்து **"Opportunities for effective implementation of the New Urban Agenda"** ஆகும். இதன் நோக்கம் சிறந்த வருங்கால திட்டங்களை செயல்படுத்தி, சிறந்த நகரக்கட்டமைப்புகளையும், மனித குடியிருப்புகளையும் உருவாக்குவதாகும். இந்த 4 நாள் நிகழ்வுக்கு மத்திய வீடுகள் & நகர வறுமை ஒழிப்புத்துறை அமைச்சர் திரு. M. வெங்கையா நாயுடு தலைமை தாங்குவார். அடுத்த இரு வருடங்களுக்கு இவரே **UN-Habitat**க்கு தலைமை தாங்குவார். அதோடு மே 8 2017 அன்று நைரோபியில் நடைபெறும் நகர மயமாக்கல் சம்பந்தமான "ஆசிய பசிபிக் அமைச்சர்கள்" கருத்தரங்கிலும் கலந்துகொள்வார்.

**6. 2017ன் பன்னாட்டு இராணுவ பயிற்சியான "Eager Lion" ல் எந்த நாடு தொடங்கியது?**

A. இத்தாலி

B. குவைத்

C. ஜோர்டான்

D. கத்தார்

**விடை : C. ஜோர்டான்**

மே 8 2017 அன்று 2017ன் பன்னாட்டு இராணுவ பயிற்சியான **"Eager Lion"**

ஜோர்டானில் தொடங்கியது. இதில் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கா, அரபு பகுதிகளைச்சேர்ந்த நாடுகளான பிரிட்டன், ஜப்பான், பாகிஸ்தான், குவைத், கென்யா, அரேபியா, US, பக்ரைன், கத்தார் போன்ற நாடுகளைச்சேர்ந்த 7400 படைகள் கலந்துகொள்கின்றன. இந்த பயிற்சி எல்லைப்பாதுகாப்பு, இணைய பாதுகாப்பு, "command and control" ஆகிய பயிற்சிகள் வழங்கப்படும். இது மே 18 வரை நடைபெறும். ஜிகாடிஸ்களுக்கு எதிரான சிரிய, ஈராக் போரில் USன் தலைமைப்படையாக ஜோர்டான் செயல்பட்டது.

**7. 2017 கூட்டு இராணுவ பயிற்சியான "Balikatan"-ஐ US & எந்த நாடுடன் இணைந்து ஆரம்பித்தது?**

A. சவுதி அரேபியா

B. பாகிஸ்தான்

C. இஸ்ரேல்

D. பிலிப்பைன்ஸ்

**விடை : D. பிலிப்பைன்ஸ்**

33வது கூட்டு இராணுவ பயிற்சியான "Balikatan" (Shoulder - to - Shoulder) ஐ USம் பிலிப்பைன்ஸ்-ம் இணைந்து பிலிப்பைன்சின் மணிலாவிலுள்ள Camp Aguinaldoவில் மே 8 2017ல் ஆரம்பித்தது. பத்து நாள் நடைபெறும் இந்த பயிற்சியின் நோக்கம், பேரழிவு, பயங்கரவாத எதிர்ப்புக்கான பயிற்சியாக இருக்கும். இந்த பயிற்சியில் 5400 பேர் கலந்துகொள்கின்றனர்.

**8. 2017 World Red Cross Red Crescent Day (WRCRCD)ன் மையக்கருத்து என்ன?**

A. Less Known Red Cross Stories

B. Everywhere for everyone

C. Together for Humanity

D. Get Together for the purpose of Humanity

**விடை : A. Less Known Red Cross Stories**

2017 World Red Cross Red Crescent Day (WRCRCD)ன் மையக்கருத்து "Less Known Red Cross Stories" ஆகும். International Committee of the Red Cross (ICRC)

நிறுவனரான Jean Henry Dunant அவர்களின் பிறந்தநாள் நினைவாக ஒவ்வொரு வருடமும் மே 8 அன்று World Red Cross and Red Crescent Day அனுசரிக்கப்படுகிறது.

**9. Navegaon தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

A. உத்தர பிரதேசம்

B. மேற்கு வங்கம்

C. குஜராத்

D. மகாராஷ்டிரா

**விடை : D. மகாராஷ்டிரா**

மகாராஷ்டிரா மாநிலம் கோண்டியா மாவட்டத்தில் Navegaon தேசியப்பூங்கா அமைந்துள்ளது. 18ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இப்பூங்கா மகாராஷ்டிரா மாநிலத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ளது. இதில் பல வகையான மீன்கள், 209 வகையான பறவையினங்கள், 9 வகையான ஊர்வனங்கள், 26 வகையான பாலூட்டிகள் பரமாரிக்கப்படுகின்றன. புலி, சிறுத்தை, காட்டுப்பூனை, புனுகுப்பூனை, ஓநாய், குள்ளநரி, காட்டெருமை, நீல்காய்ஸ், சிஸ்டல்கள், காட்டுப் பன்றிகள், ஸ்லோத் கரடிகள் மற்றும் நாதன் லூயிஸ் ஆகியவை இதில் அடங்கும்.

**10. Kavinder Singh Bisht எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A. மல்யுத்தம்

B. சதுரங்கம்

C. குத்துச்சண்டை

D. கிரிக்கெட்

**விடை : C. குத்துச்சண்டை**

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில், மலேசிய வீரர் Salam Abdul Kasim-ஐ தோற்கடித்து, உலக சாம்பியன்ஷிப் போட்டிக்காக 52 Kg பிரிவில் இந்தியக்குத்துச்சண்டை வீரர் Kavinder Singh Bisht (52 Kg) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உலக சாம்பியன்ஷிப் போட்டிக்காக

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்ற இந்தியக்குத்துச்சண்டை வீரர்கள், **Vikas Krishan (75kg), Amit Phangal (49kg), Shiva Thapa (60kg), Sumit Sangwan (91kg), Satish Kumar (+91kg) and Manoj Kumar (69kg)** ஆவர்.

---

winmeen

# TNPSC Tamil Current Affairs 9th May 2017

**1. UKவில் Fellowship விருதுபெற்ற இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

A. சச்சின் டென்டுல்கர்

B. ரவி சாஸ்திரி

C. MS தோனி

D. சுனில் கவாஸ்கர்

விடை : A. சச்சின் டென்டுல்கர்

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், இங்கிலாந்தில் நடைபெற்ற 7வது ஆண்டு ஆசிய விருதுகள் விழாவில் Fellowship விருதுபெற்றார். அதோடு, இந்தியாவின் பின்னணி பாடகரான Adnan Sami, 'Outstanding achievement in Music"க்கிற்கான விருதினை பெற்றார். சினிமாவில் சிறந்த சாதனைக்கான விருது, 2017ல் காலமான நடிகர் Om Puri அவருக்கு வழங்கப்பட்டது. மேலும், கிருஷ்ணன் குரு-மூர்த்தி (Outstanding Achievement in Television)க்கும், அஜய் பங்கா (Business Leader of the Year)க்கும், Masayoshiன் மகன் (Entrepreneur of the year)க்கும், நிஷா தத் (Social Entrepreneur of the year)க்கும், Dr Jack Preger (Philanthropist of the year)க்கும், Ding Punhui (Outstanding achievement in sport) க்கும், Demis Hassabis (Outstanding achievement in Science and Technology) க்கும் மற்றும் Sir Harpal Kumar (Outstanding contribution to the community)க்கும் விருதுகள் பெற்றனர்.

**2. 2015-16ம் ஆண்டிற்கான தொல்காப்பியர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?**

A. A. தக்ஷிணாமூர்த்தி

B. S. ராஜலட்சுமி

C. S.N. கந்தசாமி

D. R. கலைக்கோவன்

விடை : D. R. கலைக்கோவன்

தொல்காப்பியர் விருதென்பது, தமிழறிஞர்களுக்கான ஒரு புகழ்மிக்க விருதாகும். மே 9 2017 அன்று, ராஷ்டிரபதி பவனில் நடந்த 'Presidential Awards for Classical Tamil' விருது வழங்கும் விழாவில், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி 2013-14, 2013-15 மற்றும் 2015-16 ஆண்டுக்கான விருதுகளை வழங்கினார். கிளாசிக்கல் தமிழ் வாழ்நாள் சாதனைக்கான தொல்காப்பியர் விருது Dr. S.N. கந்தசாமி (2013-14), Dr. A. தக்ஷிணாமூர்த்தி (2014-15) மற்றும் Dr. R. கலைக்கோவன் (2015-16) ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இளம் அறிஞர்களுக்கான விருதுகள் 15 நபர்களுக்கு வழங்கப்பட்டன. செம்மொழியான தமிழ் மொழிக்கும், அதன் இலக்கியத்திற்கும் சிறந்த பங்களிப்பையளித்த புகழ்பெற்ற அறிஞர்களுக்கு அங்கீகாரம் மற்றும் கௌரவம் வழங்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகிறது. இந்த விருது ஒரு சால்வை, சான்றிதழை உள்ளடக்கியது. தொல்காப்பியர் விருதுக்கு ரூ.5 லட்சமும் இளம் அறிஞர் விருதுக்கு ரூ.1 லட்சமும் வழங்கப்படுகிறது. மனித வள மேம்பாட்டு(MHRD) அமைச்சகத்தின் கீழ் இயங்கும் Classical Tamil functioning நிறுவனத்தால் இவ்விருதுகள் வழங்கப்படுகிறது.

3. டால்மா வனவிலங்கு சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. மகாராஷ்ட்ரா

B. ஜார்க்கண்ட்

C. அசாம்

D. உத்தர பிரதேசம்

விடை : B. ஜார்க்கண்ட்

டால்மா வனவிலங்கு சரணாலயம் ஜார்கண்டிலுள்ள ஜாம்ஷெட்பூர் நகரத்திலிருந்து 10 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. யானைகள் மற்றும் பிற விலங்குகளை கொண்டிருக்கும் புகழ் பெற்ற வனவிலங்கு சரணாலயம் இது. இவைகள் மழைக்காலம் மற்றும் குளிர்காலத்தில் ஜார்க்கண்ட் & மேற்கு வங்க மாநிலங்களிலுள்ள மலையடிவாரங்களுக்கு வரும். சில சமயம் ஊருக்குள்ளும் புகும். யானைகள் தவிர, இந்திய மாபெரும் அணில், சோம்பல் கரடி, குள்ள மான், காட்டுப்பன்றி,

முள்ளம்பன்றிகள், சுண்டெலி மற்றும் தேவாங்குகள் ஆகியவை சரணாலயத்தில் உள்ளன. பொதுவாகப் பறவைகள் சரணாலயத்திலுள்ள பறவைகள், தங்கக் கூனைப்பூக்கள், இந்திய பை மரம், **Paradise** பூக்கள், இந்திய மயில்கள், மீனகொத்திகள், மைனாக்கள் ஆகியவை உள்ளன.

**4. IMFன் சமீபத்திய அறிக்கையான 'Regional Economic Outlook (REO) for Asia and Pacific'ன் மதிப்பீட்டின்படி இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP)யின் வளர்ச்சி 2018ம் நிதியாண்டில் எவ்வளவு இருக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது?**

**A. 7.6 %**

**B. 7.2 %**

**C. 7.4 %**

**D. 7.7 %**

விடை : **B. 7.2 %**

**IMF**ன் சமீபத்திய அறிக்கையான **'Regional Economic Outlook (REO) for Asia and Pacific'**ன் மதிப்பீட்டின்படி இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி(**GDP**)யின் வளர்ச்சி, பணமதிப்பிழப்பினால் ஏற்பட்ட தடைகளுக்குப்பிறகு **FY18 (2017-18) ல் 7.2%** மற்றும் **FY19 (2018-19) 7.7%** இருக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. நீண்டகால கட்டமைப்புக்களை அகற்றுவதை **IMF** பரிந்துரைத்துள்ளது. பணப்பரிமாற்றங்களுடன், பணப்பற்றாக்குறையால் ஏற்படும் தற்காலிக தடங்கல்கள் படிப்படியாக **2017**ம் ஆண்டில் குறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் விநியோகப்பற்றாக்குறையை சரிசெய்யும் நிலை தொடர்ந்து முன்னேறும்.**IMF** இந்திய பொருளாதார வளர்ச்சியைப்பற்றி நேர்மறையான பார்வையைத்தருகிறது, மேலும், இது சரக்குகள் மற்றும் சேவை வரி (**GST**) செயல்படுத்துவதை ஆதரிக்கிறது. இவ்வறிக்கையின்படி ஆசியாவின் வளர்ச்சி **2017** ல் **5.5%** உயருமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**5. 2017 வேட்டை திருவிழா "Bishu Parv" எந்த மாநிலத்தில்**

கொண்டாடப்படுகிறது?

A. ஜார்க்கண்ட்

B. மணிப்பூர்

C. மேற்கு வங்கம்

D. ஒடிசா

விடை : A. ஜார்க்கண்ட்

ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள டல்மா வனவிலங்கு சரணாலயத்தில் வனவிலங்கிற்கு எந்த பாதிப்புமில்லாமல், 2017 வேட்டை திருவிழா "Bishu Parv" (அல்லது Sendra) கொண்டாடப்பட்டது. இவ்விழாவை கண்காணிக்க, வனத்துறையால் விழிப்புணர்வு பிரச்சாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுதவிர, வேட்டைக்காரர்கள் சரணாலயத்திற்குள் நுழைவதைத் தடுக்க, அனைத்து சோதனைச்சாவடிகளும் கண்காணிக்கப்பட்டது.

6. Central Board of Direct Taxes (CBDT)ன் தலைமையகம் எந்த நகரத்தில் அமைந்துள்ளது?

A. சென்னை

B. கொச்சி

C. புது டில்லி

D. புனே

விடை : C. புது டில்லி

ஜூன் 1, 2017 முதல் மே 1, 2018 வரையுள்ள ஒருவருட காலத்திற்கு, சுஷில் சந்திரா அவர்கள் Central Board of Direct Taxes (CBDT)ன் தலைவராக நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இவர் ஜூன் 1 2010 அன்று ஓய்வுபெறுவார். இவர் முன்னாள் சிறப்பு செயலாளராவார் மற்றும் இந்திய வருவாய் செயலாளரின் நேரடி பொறுப்பில் பதவிவகிப்பார். CBDT என்பது வருமான வரித்துறையின் உச்சக்கொள்கை அமைப்பாகும். இது ஒரு தலைவரையும் ஆறு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. நேரடி வரிகள் மற்றும் வருமான வரித்துறை தொடர்பான கொள்கை மற்றும்

நிர்வாகச்சிக்கல்களை தயாரிப்பதற்கு இதுவே பொறுப்பாகும். CBDTன் தலைமையகம் புது டில்லியில் அமைந்துள்ளது.

**7. எந்த ஹாலிவுட் நடிகர், சிறந்த நடிகருக்கான first-ever gender-neutral MTV விருதை பெற்றுள்ளார்?**

A. Lil Rel Howery

B. Daniel Kaluuya

C. Millie Bobby Brown

D. Emma Watson

விடை : **D. Emma Watson**

ஹாலிவுட் நட்சத்திரமான எம்மா வாட்சன், கலிபோர்னியாவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 2017 MTV Movie & TV விருதுகளில் அவரது "பியூட்டி அண்ட் தி பீஸ்ட்" திரைப்படத்திற்காக சிறந்த நடிகருக்கான first-ever gender-neutral MTV விருதை பெற்றுள்ளார். இது 26வது விழாவாகும், முதல் முறையாக தொலைக்காட்சியிலும் சினிமாவிலும் நடிப்பவர்களை கௌரவப்படுத்துவத்றகாக விருதுகளை வழங்கியுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான நடிப்புப்பிரிவுகள் இணைந்து கூட்டாக போட்டியிட்டது இதுவே முதன்முறையாகும்.

**8. Oracle நிறுவனத்துடன் இணைந்து, இணையம் சார்ந்த சேவைகளை நாட்டு மக்களுக்கு வழங்க, எந்த மாநில அரசு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

A. ஒடிசா

B. உத்தரகாண்ட்

C. திரிபுரா

D. ஜார்க்கண்ட்

விடை : **D. ஜார்க்கண்ட்**

மே 8, 2017ம் அன்று ஜார்க்கண்ட் அரசு மற்றும் ஆரக்கிள் ஒரு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ஆரக்கிள் தனது கிளவுட் உள்ளிட்ட தொழில்நுட்ப தீர்வுகளின் பரந்த தொகுப்பு மூலம் அதன் ஆதரவை மாநிலத்திற்கு வழங்கும். இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, ஆரக்கிள் தனது கிளவுட் அடிப்படையிலான தொழில்நுட்பங்களை, நாட்டு மக்களின் சேவைகளுக்காக வழங்கவும், வர்த்தக ரீதியாக வழங்கவும் பயன்படக்கூடிய இடங்களை ஜார்க்கண்ட் அரசுடன் இணைந்து இனங்காணும்.

9. பழம்பெரும் சித்தார் இசைக்கலைஞர் Ustad Raees Khan, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. இந்தியா

B. பாகிஸ்தான்

C. வங்காளதேசம்

D. ஆப்கானிஸ்தான்

விடை : B. பாகிஸ்தான்

இந்தியாவில் பிறந்த புகழ்பெற்ற பழம்பெரும் சித்தார் இசைக்கலைஞர் Ustad Raees Khan,தனது 77வது வயதில் மே 6, 2017 அன்று கராச்சியில் காலமானார். இவர் 1939ம் ஆண்டில் இண்டூர் நகரில் பிறந்தார். இவர் இந்திய பாரம்பரிய இசைவழியான Mewati Gharanaவை சேர்ந்தவர். அவரது தாய்வழி தாத்தா Inayat Alikhan இந்திய துணைக்கண்டத்திலுள்ள சிறந்த சிதார் இசைக்கலைஞர்களுள் ஒருவராவார். இவர் \`Jab Tera Hukam Mila Tarkay Mohaabat Kar Di', \`Ab Kay Saal Poonam Main, \`Neend Ankhoun Se Uri', \`Mojoun Sahil Se Milo', \`Main Khayal Hun Kisi Aur Ka', \`Kabhi Kitaboun Main Phool Rakhna' போன்ற பாடல்களை உருவாக்கியுள்ளார். 1968ல், இவர் பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தார். 2005 மற்றும் 2017ம் ஆண்டுகளில் ஜனாதிபதி விருது மற்றும் Sitara-e-Imtiaz விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

10. நெதர்லாந்து ராஜ்யத்தில் புதிய இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. J S Mukul

B. Pooja Kapur

C. Venu Rajamony

D. Nitish Jha

விடை : C. Venu Rajamony

1986ம் ஆண்டு Indian Foreign Service (IFS) அதிகாரியாக பணிபுரிந்த Venu Rajamony, நெதர்லாந்தின் ராஜ்யத்திற்கு இந்தியாவின் அடுத்த தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் Prevention of Chemical Weapons (OPCW) அமைப்பிற்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ஆவார். The Hague அடிப்படையில் நெதர்லாந்திலிருக்கும் International Court of Justice (ICJ), The Permanent Court of Arbitration ஆகியவற்றுக்கும் இவரே பிரதிநிதியாவார். இவர் தற்போது, ஜனாதிபதியின் பத்திரிகை செயலராக பதிவியிலுள்ளார்.

---

# TNPSC Tamil Current Affairs 10th May 2017

1. தென் கொரியாவின் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றவர் யார்?

A. Moon Jae-in

B. Hong Joon-pyo

C. Goh Kun

D. Roh Tae-woo

விடை : A. Moon Jae-in

முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரான Moon Jae-in தென் கொரியாவின் 19வது ஜனாதிபதியாக பதவி ஏற்றார். இவருக்கு முன் இப்பதவியில் Park Geun-hye பணிபுரிந்தார். பதவியேற்ற பிறகு, South Jeollaவை மாகாண ஆளுநராகவும் Lee Nak-yonஐ பிரதமராகவும் நியமித்தார். மேலும், வடகொரிய பிரச்சினைகளில் நிபுணத்துவம் வாய்ந்த, நீண்டகாலமாக உளவுத்துறை அதிகாரியாக பணிபுரிந்த Suh-hoonஐ, தேசிய புலனாய்வு சேவையின் புதிய தலைவராக நியமித்தார்.

2. வேலைவாய்ப்பு கொள்கைகளுக்கான நம்பகத்தரவை வழங்க மத்திய அரசு எந்த உயர்மட்டக்குழுவை அமைத்துள்ளது?

A. புலக் கோஷ் குழு

B. TCA ஆனந்த் குழு

C. அரவிந்த் பனகாரியா குழு

D. மனிஷ் சபர்வால் குழு

விடை : C. அரவிந்த் பனகாரியா குழு

வேலைவாய்ப்பு கொள்கைகளுக்கு நம்பகமான தரவை வழங்குவதற்காக நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் அரவிந்த் பனகாரியாவின் கீழ் மத்திய அரசு ஒரு உயர்மட்டக்குழுவை அமைத்துள்ளது. இக்குழு ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய தீர்வுகளை பரிந்துரைக்கும். தற்போது, வேலைவாய்ப்புப் பற்றிய தரவு

சேகரிக்கப்பட்டு, தொழிற்துறை பணியகம் **(Labour Bureau)** உட்பட சில நிறுவனங்களால் வெளியிடப்படுகிறது, ஆனால், இதன் அளவு மிகச்சிறியதாகும். **Labour Bureau**வின் தரவுகள் ஒரு சில துறைகளை மட்டுமே உள்ளடக்கியது, மேலும், இது புதிதாக உண்டாக்கப்பட்ட குழுவை அடிப்படையாகக்கொண்டது அல்ல.

**3. Sakewa விழா சமீபத்தில் எந்த மாநிலத்தில் கொண்டாடப்பட்டது?**

**A.** ஜார்க்கண்ட்

**B.** அருணாச்சல பிரதேசம்

**C.** சிக்கிம்

**D.** மணிப்பூர்

விடை : **C. சிக்கிம்**

ராய் சமூகத்தின் சாக்வா திருவிழா சமீபத்தில் சிக்கிமில் இயற்கை அன்னைக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக கொண்டாடப்பட்டது. இவ்விழா "பூமி பூஜை" அல்லது "சந்தி பூஜை" அல்லது "நில வழிபாடு" என்றும் அழைக்கப்படுகிறது. இது சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் உலக சக்திகளுக்கு வழிபாடு செய்யும் விதமாக செய்யப்படுகிறது. இது தவிர, கௌதம புத்தரின் பிறந்தநாளான புத்த பூர்ணிமாவையும், புத்த கயாவில் போதி மரத்தின் கீழ் ஞானம் அடைந்த நாளையும், சிக்கிமில் கொண்டாடுகின்றனர். இந்நாட்களில் மக்கள் மடாலயங்களில் வழிபாடு மேற்கொள்கின்றனர்.

**4. ஒருநாள் சர்வதேச பெண்கள் கிரிக்கெட்டில், அதிக விக்கெட் எடுத்த வீராங்கனை யார்?**

**A. Mithali Raj**

**B. Harmanpreet Kaur**

**C. Ekta Bisht**

**D. Jhulan Goswami**

விடை : **D. Jhulan Goswami**

இந்திய பெண்கள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் Jhulan Nishit Goswami, ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். 109 போட்டிகளிலிருந்து 180 விக்கெட்டுகளை வீழ்த்திய ஆஸ்திரேலியாவின் Cathryn Fitzpatrick சாதனையை முறியடித்தார். தென்னாப்பிரிக்காவின் Potchefstroomல் நடைபெற்ற போட்டியில், தென்னாப்பிரிக்காவைச்சேர்ந்த Raisibe Ntozakheவை 181வதாக வீழ்த்தி தனது சாதனையை புரிந்துள்ளார். இது இவரது 151வது போட்டியாகும். 2007ம் ஆண்டு ICCன் 'Women Cricketer of the Year' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார். இவர் 10 டெஸ்ட் போட்டிகளில் 40 விக்கெட்டுகளையும், 60 T 20 போட்டிகளில் 50 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

5. எந்த மாநில அரசு ,சமீபத்தில் பள்ளி உணவகங்களில் அதிகக்கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை (HFSS) சேர்த்த உணவுகளின் விற்பனையை தடை செய்துள்ளது?

A. மகாராஷ்டிரா

B. பஞ்சாப்

C. உத்தர பிரதேசம்

D. மத்திய பிரதேசம்

விடை : A. மகாராஷ்டிரா

மகாராஷ்டிரா அரசாங்கம் சமீபத்தில் மாநில முழுவதுமுள்ள பள்ளி உணவகங்களில் அதிகக்கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை (HFSS) சேர்த்த உணவுகளின் விற்பனையை தடைசெய்துள்ளது. இதில் உருளைக்கிழங்கு சீவல்கள், நூடுல்ஸ், கார்பனேற்றப்பட்ட குளிர்பானங்கள், பீட்சா, பர்கர், கேக்குகள், பிஸ்கட், பன்கள், பாஸ்தாக்கள் போன்ற 12 வகையான உணவுகள் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், கோதுமை ரொட்டி, காய்கறி புலவு, இட்லி, வடை, இளநீர் போன்ற 20 வகையான பொருட்களை விற்கவும் அனுமதித்துள்ளது. இந்தத்தீர்மானம், ஊட்டச்சத்து உணவு உட்கொள்வதைப்பற்றி குழந்தைகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவதை வலியுறுத்துகிறது.

6. 2017 New York Indian Film Festival (NYIFF)ல் சிறந்த நடிகைக்கான விருதை பெற்ற இந்திய நடிகை யார்?

A. Ratna Pathak

B. Konkona Sen Sharma

C. Anushka Sharma

D. Ramya Krishnan

விடை : B. Konkona Sen Sharma

2017 நியூயார்க் இந்திய திரைப்பட விழாவில்(NYIFF) சிறந்த நடிகைக்கான விருதை, "Lipstick Under My Burkha" என்ற படத்திற்காக Konkona Sen Sharma பெற்றுள்ளார். இவர் தனது "A Death in the Gunj" படத்திற்காக சிறந்த இயக்குநருக்கான விருதையும் பெற்றார். சிறந்த நடிகருக்கான விருதை, "Ottayaal n Paatha" என்ற படத்திற்காக கலாதரன் பெற்றுள்ளார். Shubhashish Bhutiani சிறந்த திரைப்படத்திற்காக (முக்தி பவன்) விருது பெற்றுள்ளார். சிறந்த திரைக்கதைக்கான விருது மலையாள திரைப்படமான "Kammattipadam"க்கு கிடைத்துள்ளது. சிறந்த குறும்படமாக Onirன் "Aaba" தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

7. 2017 World Thalassemia Day (WTD)வின் மையக்கருத்து என்ன?

A. Access to Safe & Effective Drugs in Thalassemia

B. Thalassemia: Knowledge is Strength

C. Patient's Rights Revisited

D. Together for Humanity

விடை : D. Together for Humanity

2017 World Thalassemia Day (WTD)வின் மையக்கருத்து "Together for Humanity" ஆகும். இத்தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 8 அன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்தக்கொடிய நோய்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் & இரத்ததானம் தொடர்பான முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காகவும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

தலசீமியா என்பது இரத்தத்திலுள்ள ஹீமோகுளோபினின் குறைபாடு அல்லது முழுவதும் இல்லாத நிலையாக வகைப்படுத்தப்பட்டுள்ள மரபணு இரத்தக்கோளாறு நோயாகும். WHOவின் அறிக்கையின்படி, மேற்கத்திய நாடுகளில் தாலசீமியாவுடன் 90%க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இந்தியாவின் மக்கள் தொகையில் 3.9% பேர் தாலசீமியாவிற்கு ஆட்பட்டுள்ளனர். இந்த அபாயகரமான நோயை எதிர்த்துப்போராட வேண்டிய அவசியத்தை இந்நாள் வலியுறுத்துகிறது.

8. இந்தியாவுக்கான பாகிஸ்தானின் புதிய உயர் ஆணையர் யார்?

A. Husain Haqqani

B. Abdul Basit

C. Sohail Mahmood

D. Maleeha Lodhi

விடை : C. Sohail Mahmood

பாகிஸ்தானின் மூத்த தூதரகர்களில் ஒருவரான Sohail Mahmood இந்தியாவுக்கான பாகிஸ்தானின் புதிய உயர் ஆணையர் ஆகிறார். இந்தியாவில் எல்லைதாண்டி பயங்கரவாத தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் மற்றும் இந்தியாவைச்சேர்ந்த Kulbhushan Jadhavக்கு மரணதண்டனை வழங்கியது தொடர்பான விசயங்களை ஆராய்ந்து பணிகளை மேற்கொள்வார். மே மாத இறுதியில் இவர் பதவியேற்பார். இவருக்கு முன் Abdul Basit இப்பதவியிலிருந்தார். தற்போது, இவர் துருக்கிக்கு பாகிஸ்தான் தூதராக செயல்பட்டு வருகிறார்.

9. சமீபத்தில் காலமான Arjun Tulshiram Pawar, எந்தத்துறையை சேர்ந்தவராவார்?

A. விளையாட்டு

B. இதழியல் (Journalism)

C. சட்டத்துறை

D.அரசியல்

விடை : D.அரசியல்

மூத்த Nationalistt Congress Party (NCP)ன் தலைவர் மற்றும் முன்னாள் மகாராஷ்டிரா அமைச்சரான Arjun Tulshiram Pawar சமீபத்தில் மும்பையில் தனது 80வது வயதில் காலமானார். 1999ல் விலாஸ்ராவ் தேஷ்முக் தலைமையிலான காங்கிரஸ்-NCP அரசாங்கத்தில் பழங்குடி மக்களின் நலனுக்காக அவர் மாநில அமைச்சராக இருந்தார். 2014 மாநில சட்ட மன்ற தேர்தலில் தோல்வியடைந்த இவர், பல ஆண்டுகளாக கல்வன் விதான சமுதாயத்தின் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராகவும் இருந்துள்ளார்.

10. முதுமலை தேசிய பூங்கா எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. கேரளா

B. தமிழ்நாடு

C. ஆந்திர பிரதேசம்

D. கர்நாடகம்

விடை : B. தமிழ்நாடு

முதுமலை தேசிய பூங்கா (MNP) தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர் நகரிலிருந்து 150 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்திய யானை, வங்காளப்புலி, காட்டெருமை மற்றும் இந்திய சிறுத்தை உட்பட பல ஆபத்தான மற்றும் அழிவிலிருக்கக்கக்கூடிய இனங்கள் இங்கு பாதுகாக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 266 வகையான பறவைகள் இந்த சரணாலயத்தில் உள்ளன. இதில் அரிதான வெள்ளை கழுத்து ராஜாளிக்கழுகு, வேட்டைக்கழுகு போன்றவையும் அடக்கம்.

# TNPSC Tamil Current Affairs 11th May 2017

**1. United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA)ன் புதிய பொதுச்செயலாளர் யார்?**

A. Mark Lowcock

B. Valerie Amos

C. Stephen O'Brien

D. John Holmes

விடை : A. Mark Lowcock

பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தித்துறையின் தலைவரான Mark Lowcock, United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA)ன் புதிய பொதுச்செயலாளர் ஆவார். இவருக்குமுன் Stephen O'Brien இப்பதவியில் இரண்டாண்டுகள் பணிபுரிந்தார். தெற்கு சூடான், ஏமன், ஈராக், மத்திய ஆப்பிரிக்கா குடியரசு மற்றும் Lake Sat பிராந்தியங்களில் பிரதான உதவி நடவடிக்கைகளுடன் சிரியாவில் ஐ.நா.வின் நிவாரண முயற்சிகளை வழிநடத்தும் பணியில் இவர் ஈடுபடுவார்.

**2. இந்தியாவின் புதிய பாதுகாப்பு செயலாளர் யார்?**

A. LC Goyal

B. Sanjay Mitra

C. G Mohan Kumar

D. Anant Kumar Singh

விடை : B. Sanjay Mitra

2017ம் ஆண்டு மே மாதம் 24ம் தேதி G மோகன் குமார் பதவி விலகியபின்னர், மேற்கு வங்க மாநிலத்தின் 1982 பேட்ச் அதிகாரியான Sanjay Mitra இந்தியாவின் புதிய பாதுகாப்புச்செயலாளராக நியமிக்கப்படுவார். இது பாதுகாப்புத்துறையில் இவர் வகிக்கப்போகும் முதல் பதவியாகும். தற்பொழுது, இவர் சாலை போக்குவரத்து மற்றும்

நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் செயலாளராக பதவியிலுள்ளார்.

**3. 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் Greco Roman 80 கிலோ பிரிவில் வெண்கலம் வென்ற இந்திய வீரர் யார்?**

A. Jaspreet Singh

B. Ravinder Singh

C. Gurpreet Singh

D. Harpreet Singh

விடை : D. Harpreet Singh

2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் Greco Roman 80 கிலோ பிரிவில் Harpreet Singh வெண்கலம் வென்றுள்ளார். வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் அவர் 3-2 என்ற கோல் கணக்கில் சீனாவின் Na Junjieவை தோற்கடித்தார்.

**4. Indian National Science Academy (INSA)ன் 2017க்கான இளம் விஞ்ஞானி விருது யாருக்கு வழங்கப்பட்டது?**

A. T S Gupta

B. Vijay Singh

C. Vikram Vishal

D. Sidharth Malhotra

விடை : C. Vikram Vishal

Indian National Science Academy (INSA)ன் 2017க்கான இளம் விஞ்ஞானி விருது, IIT, Bombayல் புவி அறிவியல் துறையில் உதவிப்பேராசிரியராக பணியாற்றும் Vikram Vishal அவர்களுக்கு வழங்கப்பட்டது. தொழிற்தசாலைகளால் வெளியேற்றப்படும் கரியமில வாயுவை பிடித்து, அவற்றை பூமியின் மேற்பரப்புக்குள்ளாக இருக்கும் கடினமான பாறையில் புகுத்தும் ஒரு விஞ்ஞான மாதிரியை வழங்கியதற்காக இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இம்முறை, நாட்டில்

கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் ஒரு நீண்டகால தீர்வாக இருக்கலாம். இவ்விருது இளம் அறிவியலாளர்களுக்கு ஒரு மாபெரும் உயர்ந்த அங்கீகாரமாகக்கருதப்படுகிறது. இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இது ஒரு வெண்கலப்பதக்கத்தையும் ரூ. 25,000 பணப்பரிசையும் உள்ளடக்கியது.

5. இந்தியாவில் ட்விட்டருக்கான புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Taranjeet Singh

B. Junaid Ahmad

C. Saroj Kumar Jha

D. M Teresa Kho

விடை : A. Taranjeet Singh

இந்தியாவில் ட்விட்டருக்கான புதிய இயக்குநராக Taranjeet Singh நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சில ஒருங்கிணைந்த வணிக யுக்திகள் மற்றும் சில சிறப்பு செயல்முறைகளை பயன்படுத்தி இக்குழுவை வழிநடத்துவார். இதற்கு முன்னர், இவர் ட்விட்டரின் விளம்பரதாரர்களுக்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவில் பணிபுரிந்தார். ட்விட்டரில் சேரும் முன், அவர் தெற்காசியாவில் பிபிசியின் விளம்பரத்துறையில் விற்பனை இயக்குநராக பணிபுரிந்தார். பிபிசிக்கு முன்னர், அவுட்லுக் பப்ளிகேஷனில் இவர் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

6. இந்தியாவின் உச்சநீதிமன்றத்திற்காக எந்த டிஜிட்டல் தாக்கல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது?

A. Integrated e-filing Information System

B. Integrated Digital Transparency System

C. Integrated Case Management Information System

D. Integrated Transparency Information System

விடை : C. Integrated Case Management Information System

வழக்கு தொடர்பான தகவல்களை ஒரு டிஜிட்டல் களஞ்சியமாகக் கொண்டு சேவையாற்ற, பிரதமர் நரேந்திர மோடி "Integrated Case Management Information System" என்ற இம்முறையை புது டில்லியிலுள்ள Vigyan Bhavanல் தொடங்கிவைத்தார். இதன் செயல்பாடுகளாக இ-தாக்கல் வழக்குகள், பட்டியல் தேதி, வழக்கின் நிலை, மற்றும் அறிவிப்பு / சம்மன்களின் ஆன்லைன் சேவை, அலுவலக அறிக்கைகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் பதிவேட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் ஒட்டுமொத்த கண்காணிப்பும் இதில் அடங்கும்.

7. இந்திய-இந்தோனேசிய இருதரப்பு கடல்சார் பயிற்சியான "CORPAT-2017" எந்த இந்திய கடற்படைக்கட்டுப்பாட்டின் கீழ் தொடங்கியது?

A. Eastern Naval Command

B. Western Naval Command

C. Southern Naval Command

D. Andaman and Nicobar Command

விடை : D. Andaman and Nicobar Command

29வது இந்திய-இந்தோனேசிய இருதரப்பு கடல்சார் பயிற்சியான "CORPAT-2017" (Co ORdinated PATrol) மே 9-12 வரை அந்தமான் மற்றும் நிக்கோபார் கட்டளைத்தளத்தின் கீழ் போர்ட் பிளேயரில் நடைபெறும். இதன் நிறைவு விழா மே 22 முதல் 25 வரை இந்தோனேசியாவின் பெலவான் நகரில் நடைபெறும். CORPAT என்பது இந்தியப்பெருங்கடலின் வளங்களை இரு நாடுகளும் முறையாக பிரித்துக்கொள்ள உதவும் ஒரு சர்வதேச சமுதாய அமைப்பாகும். இந்தியாவின் ஒரு யூனியன் பிரதேசமான அந்தமான் நிகோபார் தீவுகளில் போர்ட் பிளேயரில் அமைந்துள்ள இந்திய ஆயுதப்படையே இந்தியாவின் ஒரே திரி சேவை படையாகும்.

8. "Commonwealth of the Bahamas" க்கு புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதமர் யார்?

A. Fred Mitchell

B. Jmeail Dames

C. Hubert Minnis

D. Marguerite Pindling

விடை : C. Hubert Minnis

"Commonwealth of the Bahamas" க்கு புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதமர் Hubert Minnis ஆவார். 34-5 என்ற பாராளுமன்றப்பிரிவில் Perry Christie's Progressive Liberal Partyக்கு பெரும் தோல்வியை அளித்தபின்னர், இவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

9. இந்தியாவில் 2017 தேசிய தொழில்நுட்ப தினம் (National Technology Day)க்கான மையக்கருத்து என்ன?

A. Technologies for better quality of life

B. Technology for inclusive and sustainable growth

C. Technology enablers of Startup India

D. Technology for inclusive growth

விடை : B. Technology for inclusive and sustainable growth

2017 தேசிய தொழில்நுட்ப தினம் (National Technology Day) க்கான மையக்கருத்து "Technology for inclusive and sustainable growth" ஆகும். 1998ம் ஆண்டில் இந்தியா தனது வரலாற்று சாதனையான முதல் அணுசக்தித்திறன் ஏவுகணை சோதனையின் அடையாளமாகவும், கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்பத்தின் சாதனைகளை நினைவுகூரவும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் ஒவ்வொரு ஆண்டும் மே 11 அன்று தேசிய தொழில்நுட்ப தினம் (NTD) கொண்டாடப்படுகிறது.

10. விவசாயத்துறையின் பிரச்சனைகளுக்கு நேரடி தீர்வு வழங்குவதற்காக, எந்தவொரு ஆன்லைன் வசதியை மத்திய அரசு

தொடங்கியுள்ளது?

A. e-Krishi Samasya

B. e-Krishi Samvad

C. e-Krishi Samveda

D. e-Krishi Solution

விடை : B. e-Krishi Samvad

மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் சமீபத்தில், புது தில்லியில் "e-Krishi Samvad" ஐ அறிமுகப்படுத்தினார். e-Krishi Samvad என்பது இணைய அடிப்படையிலான ஓர் ஆன்லைன் இடைமுகச்சேவையாகும். இது விவசாயிகள் மற்றும் பங்குதாரர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நேரடியான மற்றும் பயனுள்ள வகையில் தீர்வுகள் வழங்கும் ஒரு தனிப்பட்ட தளம் ஆகும். இந்த வசதி மூலம், விவசாயிகள் நேரடியாக Indian Council of Agricultural Research (ICAR) ன் வலைத்தளமான www.icar.org.in உடன் இணையலாம். மேலும், வலைத்தளம் அல்லது குறுந்தகவல் மூலமாக நிபுணர்களிடமிருந்து பொருத்தமான தீர்வைப்பெறலாம். பயிர்கள், விலங்குகள் அல்லது மீன்களில் ஏதேனும் நோய் ஏற்பட்டிருப்பின், அவற்றின் நோய் பாதிக்கப்பட்ட புகைப்படங்களை பதிவேற்றம் செய்து, அதற்கான தீர்வையும் பெற்றுக்கொள்ளலாம்.

# TNPSC Tamil Current Affairs 12th May 2017

**1. FIFA Governance Committeeக்கு புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**

A. Mukul Mudgal

B. Rajeev Shukla

C. Ajay Shirke

D. R M Lodha

**விடை : A. Mukul Mudgal**

ரஷ்ய உலகக்கோப்பை அதிகாரியான Vitaly Mutko, தனது பதவியை தக்கவைத்துக்கொள்வதை தடுத்த காரணத்தினால், ஏற்கனவே ஆளுமை குழுவின் தலைவராக இருந்த Miguel Maduro தனது பதவியை இழந்தார். எனவே இப்பதவி காலியாக இருந்தது. தற்போது, டில்லி உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான Mukul Mudgal, மனாமாவில் நடைபெற்ற 67வது உலக கால்பந்து காங்கிரஸ் குழுவில், FIFA Governance Committeeக்கு புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் IPL Spot-fixing விசாரணைக்கு தலைமை வகித்தவராவார். மேலும், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் நடத்தையை மேற்பார்வை செய்வதிலும் ஈடுபட்டுள்ளார். இதற்கு முன், இவர் இதே குழுவின் துணைத்தலைவராக பணிபுரிந்தார்.

**2. இந்திய இராணுவம் CASO-வை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான 'நிரந்தர அம்சமாக (permanent feature)' மீண்டும் அறிமுகப்படுத்துகிறது. CASO என்றால் என்ன?**

A. Cordon and Searchlight Operations

B. Cordon and Search Operations

C. Cordon and Seeding Operations

D. Cordon and Seed Operations

**விடை : B. Cordon and Search Operations**

15 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், இந்திய இராணுவம் CASO-வை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான 'நிரந்தர அம்சமாக (permanent feature)' மீண்டும் அறிமுகப்படுத்துகிறது. தெற்கு காஷ்மீர் பகுதிகளான கல்கம், புல்வாமா, டிரால், புத்காம் மற்றும் சாபியன் ஆகியவற்றில் இதன் தாக்குதல்கள் அதிகமாக இருந்தன. உள்ளூர் மக்களிடமிருந்து வந்த கடுமையான எதிர்ப்பைத்தொடர்ந்து இராணுவம் CASOவை கைவிட்டது. 2001க்குப்பின்னர் குறிப்பிட்ட உளவுத்துறை சார்ந்த தகவல்களுக்கு மட்டும் CASOவை இந்திய இராணுவம் பயன்படுத்திக்கொண்டது. இத்தகைய நடவடிக்கைகளின்போது மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்கொண்ட காரணத்தை பாதுகாப்பு அமைப்பு உறுதிசெய்தது. பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் காபூல் காஷ்மீரி இராணுவ அதிகாரியான உமர் பெயாஸ் கொல்லப்பட்டதையடுத்து, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான முக்கிய அம்சமாக CASOவை மீண்டும் அறிமுகப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**3. எந்த நாடு United Nations Day of Vesak - 2017-ஐ நடத்தவுள்ளது?**

A. இந்தியா

B. பூடான்

C. இலங்கை

D. மியான்மர்

விடை : C. இலங்கை

14வது United Nations Day of Vesak - 2017-ஐ, மே 12 2017 அன்று இலங்கையில் கொழும்புவில் “Buddhist Teachings for Social Justice and Sustainable World Peace” என்ற தலைப்பில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வினில் 100 நாடுகளில் இருந்து 400க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்ட சர்வதேச புத்த கருத்தரங்கமும் நடக்கவுள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்நிகழ்வினில் பிரதம விருந்தாளியாக கலந்துகொள்கிறார். புத்தரின் போதனைகள், அவரின் தத்துவங்கள் இதில் பகிரப்பட்டன. இது மனித குலத்திற்கு அமைதியைத்தரும் ஒரு செய்தியாகும்.

4. எந்த மாநில அரசு நகர்ப்புற பகுதிகளில் வாழும் மக்களுக்கு மலிவு வீடுகள் வழங்க ஆய்வினை மேற்கொள்கின்றது?

A. உத்தரப்பிரதேசம்

B. மணிப்பூர்

C. மேற்கு வங்கம்

D. அரியானா

விடை : D. அரியானா

மாநிலத்தில் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு **'Pradhan Mantri Awas Yojna-Housing for All'** திட்டத்தின் கீழ் மலிவு வீடுகளை வழங்க அரியானா மாநில அரசு முடிவு செய்துள்ளது. ஜூன் 17, 2015 அன்று நகர்ப்புறங்களில் வசித்த மக்கள் இந்த ஆய்வில் பங்கேற்க தகுதியுடையவர்கள். இந்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே இந்தத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர். இவர்களிடம் ஆதார் அட்டை, வங்கிக்கணக்கு போன்றவை நிச்சயம் இருக்கவேண்டும். மேலும், அந்த விண்ணப்பதாரருக்கோ அல்லது அவர் குடும்பத்தைச்சேர்ந்தவருக்கோ வேறு எங்கும் வீடுகள் இருக்கக்கூடாது. எந்தவொரு மத்திய அல்லது மாநில வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பயன் அடைந்தவர்கள், இத்திட்டத்தின் மூலம் நன்மைகளைப்பெற தகுதியற்றவர்களாவார்கள். பொருளாதார ரீதியாக பலவீனமானவர்கள், குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானமுடையவர்கள், இத்திட்டத்தின் மூலம் நன்மைகளைப்பெற தகுதியுடையவர்களாவார்கள்.

5. இந்திய ஆயுதப்படைகளுக்காக $75 மில்லியன் டாலரில், உயர் தொழில்நுட்ப இரசாயன பாதுகாப்பு ஆடைகளை வழங்க எந்த நாடு அங்கீகரித்துள்ளது?

A. US

B. இரஷ்யா

C. பிரான்ஸ்

D. ஜப்பான்

விடை : A. US

உயிரியல் மற்றும் இரசாயனப்போரில் வீரர்களைப்பாதுகாக்கும் விதமாக இந்திய ஆயுதப்படைகளுக்கு அமெரிக்கா $75 மில்லியன் டாலர் செலவில் உயர் தொழில்நுட்ப இரசாயன பாதுகாப்பு ஆடைகளை வழங்க அங்கீகரித்துள்ளது. Joint Service Lightweight Integrated Suit Technology (JSLIST) 38,034 உடைகளை வழங்கவுள்ளது. இதில் ஒரு ஜோடி உடைகள், காலுறைகள், கையுறைகள், NBC பைகள், 854 கவசங்கள், காலணிகள், 9509 தொப்பிகள், 114, 102 M61 பில்டர்கள் ஆகியவை அடக்கம். மேலும், 38,034 M50 வகை முகமூடிகளும் இதிலுள்ளது.

6. 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான Greco-Roman 85 கிலோ பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்?

A. Sushil Kumar

B. Anil Kumar

C. Joginder Singh

D. Yogeshwar Dutt

விடை : B. Anil Kumar

புது டில்லியிலுள்ள KD Jadhav உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2017ம் ஆண்டுகான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில், உஸ்பெகிஸ்தானின் Muhammadali Shamsiddinov-ஐ தோற்கடித்து இந்தியாவின் அனில் குமார், ஆண்களுக்கான Greco-Roman 85 கிலோ பிரிவில் வெண்கலப்பதக்கத்தை வென்றார். இது தவிர, பெண்கள் 75 கிலோ பிரிவில் ஜோதி வெண்கலத்தை வென்றார்.

7. சமீபத்தில் காலமான கரன் சிங், எந்த இந்திய மாநிலத்தின் அமைச்சராவார்?

A. சிக்கிம்

B. பஞ்சாப்

C. இமாச்சலப்பிரதேசம்

winmeen

D. ஜம்மு & காஷ்மீர்

விடை : C. இமாச்சலப்பிரதேசம்

இமாச்சலப்பிரதேச மாநிலத்தின் ஆயுர்வேத மற்றும் கூட்டுறவு மந்திரியான கரன் சிங் (59), சமீபத்தில் டில்லி எய்ம்ஸ்(AIIMS)ல் காலமானார். 2012ல் நடந்த சட்டமன்றத்தேர்தலில் குலு மாவட்டத்தில் உள்ள பான்ஜார் சட்டமன்றத்தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் குன்னு ராயல் குடும்பத்தினரின் வாரிசாவார். மேலும், இவர் குலுவின் முன்னாள் ராஜாவான மஹேஷ்வர் சிங்கின் இளைய சகோதரர் ஆவார்.

8. ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின்(JNU) புதிய வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Avinash Chander

B. M Jagadesh Kumar

C. K Kasturirangan

D. V K Saraswat

விடை : D. V K Saraswat

புகழ்பெற்ற விஞ்ஞானி மற்றும் Defence Research and Development Organisation (DRDO)வின் முன்னாள் இயக்குநரான V K Saraswat, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின்(JNU) புதிய வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன் ISROவின் தலைவர் K Kasturirangan, மார்ச்சு 30 2017 வரை இப்பதவியிலிருந்தார். V K Saraswatன் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். தற்போது, அவர் NITI Aayog ன் உறுப்பினராக பணியாற்றுகிறார். JNU சட்டத்தின் படி, இப்பதவி ஒரு கௌரவப்பதவியாகும்.

9. பிரான்ஸ் நாட்டின் புதிய இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Vinay Mohan Kwatra

B. Brajendra Navnit

C. Rajeev Topno

D. Neleesh Jain

விடை : A. Vinay Mohan Kwatra

1988ம் ஆண்டு வெளிநாட்டு சேவை அதிகாரியாக பணியாற்றிய Vinay Mohan Kwatra பிரான்ஸ் நாட்டின் அடுத்த இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன் மோகன் இப்பதவியிலிருந்தார். சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) போன்ற ஐ.நா. அமைப்புகளை கையாளும் அனுபவத்தைத்தவிர, இவர் சீனா & அமெரிக்காவின் இந்திய தூதராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது, இவர் பிரதமர் அலுவலகத்தின் (PMO) கூட்டுச்செயலாளர் ஆவார். அவர் MEA-வில் பயங்கரவாத எதிர்ப்புப்பிரிவின் துணைப்பொறுப்பாளராகவும் பணியிலிருந்துள்ளார்.

10. 2017 சர்வதேச செவிலியர் தினம் (International Nurse Day) வின் மையக்கருத்து என்ன?

A. Nursing: From Evidence to Action

B. Nurses: Care Effective, Cost Effective

C. Nursing: A vital resource for health

D. Nursing: A voice to lead - Achieving the sustainable development goals

விடை : D. Nursing: A voice to lead - Achieving the sustainable development goals

International Council of Nurses (ICN), 2017 சர்வதேச செவிலியர் தினத்துக்கான (International Nurse Day) மையக்கருத்தாக "Nursing: A voice to lead - Achieving the sustainable development goals" ஐ தேர்ந்தெடுத்துள்ளது. இத்தினம் செவிலியர் துறையில் நவீனத்துவத்தைக் கொண்டு வந்த ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேல் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாகவும், சமுதாயத்திற்கு செவிலியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாகவும் ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதிலும் மே 12 அன்று கொண்டாடப்படுகிறது.

# TNPSC Tamil Current Affairs 13th May 2017

**1. காதுகேளாத நபர்களால் இயக்கப்படும் வாகனங்களுக்கான இலச்சினையை அறிமுகப்படுத்தியுள்ள முதல் இந்திய மாநிலம் எது?**

A. தெலுங்கானா

B. இமாச்சலப்பிரதேசம்

C. குஜராத்

D. மகாராஷ்டிரா

விடை : A. தெலுங்கானா

காதுகேளாத நபர்களால் இயக்கப்படும் வாகனங்களுக்கான இலச்சினையை அறிமுகப்படுத்தியுள்ள முதல் இந்திய மாநிலம் தெலுங்கானாவாகும். இதனை வடிவமைத்தவர் ஐதராபாத்தைச்சேர்ந்த Manikanta Annapragada ஆவார். இவர் காது கேளாதோர் பிரிவில், ஓட்டுனர் உரிமம் பெற்ற முதல் நபராவார். இரு சக்கர வாகனங்களின் பின்புறத்தில், நான்கு அங்குல உயரமும் மூன்று அங்குல அகலமும், முன்புறத்தில், மூன்று அங்குல உயரமும் இரண்டு அங்குல அகலமும் இந்த இலச்சினை ஒட்டப்பட்டிருக்கவேண்டும். நான்கு சக்கர வாகனங்களில், பின்புறத்தில், ஆறு அங்குல உயரமும் ஐந்து அங்குல அகலமும், முன்புறத்தில், நான்கு அங்குல உயரமும் மூன்று அங்குல அகலமும் இருக்கவேண்டும்.

**2. 2017 Arctic Energy Summit (AES)ஐ எந்த நாடு நடத்துகிறது?**

A. உருகுவே

B. பின்லாந்து

C. அயர்லாந்து

D. சாம்பியா

விடை : B. பின்லாந்து

2017 செப்டம்பர் 18-20 வரை பின்லாந்தின் ஹெல்சின்கியில் 2017 Arctic

**Energy Summit (AES)** நடைபெறுகிறது. இதனை **Institute of the North and Finland Ministry of Economy and Employment** நடத்துகிறது. **AES** என்பது பல நூறு தொழிற்துறை அதிகாரிகள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், ஆற்றல் வல்லுநர்கள் மற்றும் சமூகத்தலைவர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து ஆர்டிக் ஆற்றல் பிரச்சினைகளில் உள்ள அணுகுமுறைகளைப்பற்றி பகிர்ந்துகொள்வதற்காக நடத்தப்படும் ஒரு நிகழ்வாகும். **2017** உச்சி மாநாட்டில் சமூக ஆற்றல் தீர்வுகள், எண்ணெய் மற்றும் எரிவாயு வளர்ச்சி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்றவைகளைப் பற்றி விவாதிக்கப்படும்.

3. தொலைத்தொடர்பு துறையின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**A. PK Pujari**

**B. J S Deepak**

**C. Aruna Sundararajan**

**D. Manju Jha**

<u>விடை</u> : **C. Aruna Sundararajan**

**1982**ல் கேரள மாநிலத்தில் அலுவலராக பணிபுரிந்த அருணா சுந்தரராஜன் தொலைத்தொடர்பு துறையின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் இவர் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளராகவும் பணியிலிருப்பார். இவருக்கு முன் **PK Pujari** இப்பதவியிலிருந்தார். குறைந்த விலையில் அகலக்கற்றை சேவை வழங்கும் கேரள அரசாங்கத்தின் பாரத் பிராட்பேண்ட் திட்டத்தை **(BBS)** மேற்பார்வையிட்ட அனுபவங்கள் இவருக்கு உண்டு. மேலும் பல அரசாங்கம் சார்ந்த தகவல் தொழில்நுட்பத்திட்டங்களில் இவர் பணிபுரிந்துள்ளார். **Universal Service Obligation Fund**லும் இவர் பணியாற்றியுள்ளார்.

4. இந்தியாவின் முதல் தேசிய கூடைப்பந்து சங்கத்தின் **(NBA)** அகாடமி, அதிகாரப்பூர்வமாக எந்த நகரத்தில் திறக்கப்பட்டுள்ளது?

A. மும்பை
B. கிரேட்டர் நொய்டா
C. புனே
D. சென்னை

விடை : B. கிரேட்டர் நொய்டா

இந்தியாவின் முதல் தேசிய கூடைப்பந்து சங்கத்தின் (NBA) அகாடமி, அதிகாரப்பூர்வமாக உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள கிரேட்டர் நொய்டாவில் திறக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள (NBA) அகாடமி, உலகளவில் ஐந்தாவது சிறப்பான பயிற்சி அகாடமி ஆகும். இதற்கு முழு நிதியும் NBAவே வழங்குகிறது. இந்த NBA அகாடமி, கல்வி, தலைமை, தன்மை மேம்பாடு மற்றும் வாழ்க்கைத்திறன் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தி ஒரு முழுமையான, 360 டிகிரி பயிற்சியை வழங்குகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் ஆண்டு முழுவதும் உயர்போட்டிக்கு எதிராக போட்டியிடுவார்கள். மேலும், சர்வதேச போட்டிகள் மற்றும் கண்காட்சி விளையாட்டுகளில் விளையாடும் பயணக்குழுக்களுக்கு இவர்களை தெரிவு செய்ய வாய்ப்பும் கிடைக்கும். உலகளாவிய (NBA) அகாடமியின் ஆட்சியை விரிவுபடுத்துவதற்கு இதுவொரு முன்முயற்சியாக இருக்கும்.

5. Marylebone Cricket Club (MCC)ன் கௌரவ வாழ்நாள் உறுப்பினருக்கான விருது வாங்கிய இந்திய கிரிக்கெட் வீரர் யார்?
A. மகேந்திர சிங் தோனி
B. யுவராஜ் சிங்
C. அணில் கும்ப்ளே
D. VVS லக்ஷ்மன்

விடை : D. VVS லக்ஷ்மன்

முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் VVS லக்ஷ்மன், Marylebone Cricket Clubன் கௌரவ வாழ்நாள் உறுப்பினருக்கான விருதினை வாங்கியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் வீரர்களான சச்சின், டிராவிட், கங்குலி ஆகியோருடன், MCCன் கௌரவ வாழ்நாள் உறுப்பினருக்கான மதிப்புமிக்க பட்டியலில் இவரும் இடம்பெற்றார். இவர் 134 தொடர் போட்டிகள், 86 ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் 25 டி-20 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். தற்போது இவர் ஐதராபாத்தின் ஐ.பி.எல் அணியான சன் ரைசர்சுக்கு பயிற்சியாளராகவுள்ளார்.

**6. 2017 Savills Tech Cities அட்டவணையில் முதலிடத்தில் உள்ள நகரம் எது?**

A. ஆஸ்டின்

B. பெங்களூர்

C. சான் பிரான்சிஸ்கோ

D. நியூயார்க்

விடை : **A. ஆஸ்டின்**

2017 Savills Tech Cities Index அட்டவணையின் படி, உலகெங்கிலுமுள்ள 22 தொழில்நுட்ப நகரங்களின் பட்டியலில் ஆஸ்டின் நகரம் முதலிடத்திலுள்ளது. சான் பிரான்சிஸ்கோ இரண்டாமிடத்திலும் அதனைத்தொடர்ந்து நியூயார்க், லண்டன் முதலிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. இந்தியாவிலிருந்து பெங்களூரு, உலகின் தொழில்நுட்ப நகரங்களில் 20வது இடத்தைப்பிடித்துள்ளது. ஆனால், வாழ்க்கைச்செலவினத்துக்கு வரும்போது, பெங்களூரு நகரத்தில் ஒரு சராசரி தொழில்நுட்ப ஊழியருக்கு, அவரின் வாராந்திர வீட்டு வாடகை $236 டாலர் என்ற அளவில் உள்ளது. இது மற்ற தொழில்நுட்ப நகரங்களில் சராசரியாக $368 டாலர்களாகும். 2017 Savills Tech Cities Indexன் நோக்கம், பல்வேறு காரணிகளைக்கொண்டு தொழில்நுட்பத்துறையில் ஒரு நல்ல இடத்தை தேர்வு செய்வதாகும்.

**7. 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் 69 கிலோவுக்கான பெண்கள் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்?**

A. Sakshi Malik

B. Vinesh Phogat

C. Divya Kakran

D. Ritu Phogat

விடை : C. Divya Kakran

புதுடில்லியில் நடைபெற்ற 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில், மூன்று இந்திய பெண் மல்யுத்த வீரர்களான Sakshi Malik (60 Kg), Vinesh Phogat (55 Kg), Divya Kakran (69 Kg) ஆகியோர் கலந்துகொண்டு அவரவர் பிரிவில் வெள்ளி வென்றனர். ரியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற Sakshi Malik, ஜப்பானின் Risako Kawaiக்கு எதிரான 60 கிலோ பிரிவுக்கான இறுதிப்போட்டியில் தனது வெற்றியை இழந்தார். 58 Kg எடை பிரிவிலிருந்து 60 Kg பிரிவில் முதல் முறையாக Sakshi Malik போட்டியிட்டார்.

8. தென்கிழக்கு ஆசியா பிராந்தியத்தில் ஹெபடைடிஸ் (ஈரல் அழற்சி) நோய்க்கான WHOவின் நல்லெண்ண தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

A. Shah Rukh Khan

B. Aamir Khan

C. Priyanka Chopra

D. Amitabh Bachchan

விடை : D. Amitabh Bachchan

தென்கிழக்கு ஆசியா பிராந்தியத்தில் ஹெபடைடிஸ் (ஈரல் அழற்சி) நோய்க்கான WHOவின் நல்லெண்ண தூதுவராக Amitabh Bachchan நியமிக்கப்பட்டுள்ளார். ஹெபடைடிஸ் (ஈரல் அழற்சி) நோய்க்கான WHOவின் நல்லெண்ண தூதுவரென்ற அடிப்படையில் பொது விழிப்புணர்வு திட்டங்களுக்கு தனது குரல் மற்றும் ஆதரவை இவர் கொடுப்பார். இது தடுப்பு நடவடிக்கைகளை அளவிடுதல் மற்றும் ஹெபடைடிஸ் வைரஸ் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிதல் மற்றும்

சிகிச்சையளிப்பதற்கான செயல்முறைகளை நோக்கமாகக்கொண்டது. ஏற்கனவே இவர் UNICEFன் போலியோவிற்கான நல்லெண்ண தூதுவராகவும் இருந்துள்ளார்.

**9. முதன்முதலாக நடைபெறும் One Belt One Road (OBOR) உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?**

A. சீனா

B. இந்தியா

C. நேபாளம்

D. மாலத்தீவு

விடை : **A. சீனா**

மே 14 2017 அன்று சீனாவிலுள்ள பெய்ஜிங்கில் முதன்முதலாக One Belt One Road (OBOR) உச்சி மாநாடு நடைபெறுகிறது. பாகிஸ்தான், இலங்கை, மாலத்தீவு மற்றும் மியான்மர் உட்பட 29 நாட்டின் தலைவர்கள் மற்றும் பங்களாதேஷ், நேபாளத்திலிருந்து உயர்மட்ட பிரதிநிதிகள், சீனாவில் நடைபெறும் இரண்டு நாள் உச்சிமாநாட்டில் கலந்துகொள்கிறார்கள். இம்மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளவில்லை. இந்தியா கலந்துகொள்ளாமைக்கான முக்கிய காரணம், China-Pakistan Economic Corridor (CPEC) கொள்கையை இந்தியா எதிர்ப்பதேயாகும். CPEC என்பது OBORன் ஒரு பகுதியாகும். இந்த உச்சிமாநாட்டின் நோக்கம், ஆசிய நாடுகள், ஆப்பிரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பா ஆகியவற்றின் இணைப்பு மற்றும் ஒத்துழைப்பை அதிகரிப்பதாகும். உள்நாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் சீனா இந்த கொள்கைக்குக்கு ஆதரவளிக்கிறது.

**10. இந்தியாவிலேயே முதன்முதலாக Videsh Sampark சேவைத்திட்டத்தை வழங்கும் மாநில அரசு எது?**

A. கேரளா

B. தமிழ்நாடு

C. தெலுங்கானா

D. கர்நாடகா

விடை : C. தெலுங்கானா

மே 13 2017 அன்று வெளிவிவகார அமைச்சகத்தின் திட்டமான Videsh Sampark சேவைத்திட்டம் ஹைதராபாத்தில் தொடங்கப்பட்டது. தெலுங்கானா அரசுடன் இணைந்து, மத்திய வெளிவிவகார அமைச்சரான Dr. VK சிங் அவர்களின் தலைமையில் இதற்கான ஒருநாள் மாநாடு நடந்தது. இந்த மாநாடு, Ministry of External Affairs (MEA)ன் பாஸ்போர்ட் சேவைகளுக்கான திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். இச்சேவை வெளிநாட்டு இந்தியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு சார்ந்த சேவையினை வழங்கும்.

# TNPSC Tamil Current Affairs 14th & 15th May 2017

**1. Global Corporate குடியுரிமைக்கான Woodrow Wilson விருதைப்பெற்ற முதல் இந்தியப்பெண்மணி யார்?**

A. Shikha Sharma

B. Usha Ananthasubramanian

C. Arundhati Bhattacharya

D. Chanda Kochhar

விடை : D. Chanda Kochhar

மே 10 2017 அன்று வாஷிங்டன் DCயிலுள்ள Woodrow Wilson மையத்தில் நடைபெற்ற, Global Corporate குடியுரிமைக்கான Woodrow Wilson விருது வழங்கும் விழாவில், ICICI வங்கியின் தலைவரான Chanda Kochhar இவ்விருதைப்பெற்றுள்ளார். இவர் இவ்விருதைப்பெறும் முதல் இந்தியப்பெண்மணி ஆவார். இதன் மூலம், முன்னாள் ஜனாதிபதி மற்றும் விண்வெளி அறிவியல் விஞ்ஞானி APJ அப்துல் கலாம் மற்றும் IT நாராயண மூர்த்தி ஆகியோருக்குப்பிறகு இப்பட்டியலில் இவர் இணைந்துள்ளார். இவ்விருது 1988 முதல் தங்கள் பணியில் அல்லது சேவையில் சாதனைகள் புரிவோருக்கு வில்சன் மையத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

**2. 2017 World Fair Trade Day (WFTD)ன் மையக்கருத்து என்ன?**

A. Hand in hand for change

B. Fair trade to promote social justice

C. Human chains for fair trade and the planet

D. Support community support peace

விடை : C. Human chains for fair trade and the planet

2017 World Fair Trade Day (WFTD)ன் மையக்கருத்து "Human chains for fair trade and the planet" ஆகும். நகரங்கள் மற்றும் சமுதாயங்களில் நியாயமான

வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கும், அவற்றினைப்பற்றிய கல்வியை போதிக்கவும், உலகளவில் இத்தினம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் வரும் இரண்டாம் சனிக்கிழமையில் World Fair Trade Organization (WFTO) இத்தினத்தை கடைப்பிடிக்கிறது. இவ்வாண்டுக்கான மையக்கருத்து, வறுமை ஒழிப்புக்கான ஒரு உறுதியான தீர்வை எடுத்துக்காட்டுகிறது. இது நிலையான வளர்ச்சிக்கான ஒரு நல்ல கருவியாகும். மேலும் இது அனைத்து வர்த்தகத்தையும் சமூக நீதியையும் ஊக்குவிக்கிறது.

3. இந்தியாவின் முதல் மின் வாடகை வண்டி எந்த நகரத்தில் தொடங்கப்பட்டுள்ளது?

A. புது டில்லி

B. நாக்பூர்

C. லக்னோ

D. போபால்

விடை : B. நாக்பூர்

இந்தியாவில் மின் & ஹைப்ரிட் வாகனங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் விதமாக மே 26 2017 அன்று நாக்பூரில் இந்தியாவின் முதல் மின் வாடகை வண்டி சேவை தொடங்கப்பட்டது. Nagpur Municipal Corporation (NMC) & Mahindra and Mahindra (M&M) ஆகியவை இணைந்து 200க்கும் மேற்பட்ட e-Verito & e20 plus ரக வாகனங்களை இச்சேவைக்கு பயன்படுத்தவுள்ளது. இத்திட்டத்திற்காக இந்திய அரசாங்கம் Faster Adoption and Manufacturing of Electric (FAME) வாகனத்திட்டத்தை 2015ல் கொண்டுவந்தது. ஏப்ரல் 1, 2015 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை FAME இந்தியா திட்டத்தின் கீழ், 99,000 கலப்பின / மின் வாகனங்கள் (xeVs) தருவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் ஒரே நோக்கம் 2030ல் அனைத்து வாகனங்களும், முற்றிலும் மின்சக்திக்கு மாற்றப்படவேண்டும் என்பதாகும்.

4. 2017 பொது விவகாரக்குறியீட்டில் (Public Affairs Index) எந்த மாநிலத்தின்

நிர்வாகம் முதலிடத்தைப்பிடித்துள்ளது?

A. கேரளா

B. குஜராத்

C. கர்நாடகா

D. மகாராஷ்டிரா

விடை : A. கேரளா

2017 பொது விவகாரக்குறியீட்டில் (Public Affairs Index) கேரள மாநிலத்தின் நிர்வாகம் முதலிடத்தைப்பிடித்துள்ளது. இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா முதலிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளன. இவ்வறிக்கை மனித வள அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள், குற்றம், சட்டம் ஒழுங்கு, நீதி, சுற்றுச்சூழல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு, நிதி மேலாண்மை மற்றும் பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றிற்கான ஆதரவை அடிப்படையாகக்கொண்டது. இதன் நோக்கம் பல்வேறு காரணிகளைக்கொண்டு, மாநிலத்தின் ஆளுமையை மதிப்பீடு செய்வதேயாகும்.

5. 2017 ஆண்கள் ஒற்றையர் Mutua Madrid Open டென்னிஸ் போட்டியில் வென்றவர் யார்?

A. Rafael Nadal

B. Novak Djokovic

C. Andy Murray

D. Dominic Thiem

விடை : A. Rafael Nadal

ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற்ற 2017 ஆண்கள் ஒற்றையர் Mutua Madrid Open டென்னிஸ் போட்டியில் ஆஸ்திரியாவின் Dominic Thiemஐ 7-7, 6-4 என்ற செட் கணக்கில் தோற்கடித்து, ஸ்பெயினின் தொழிற்முறை டென்னிஸ் விளையாட்டு வீரரான Rafael Nadal இறுதிப்போட்டியை

வென்றார். இது அவரது 5வது Madrid பட்டமாகும். இவ்வெற்றியின் மூலம் 30 ATP உலக டூர் மாஸ்டர்ஸ் 1000 ஒற்றையர் பட்டங்களைக்கொண்ட Novak Djokovic உடன் இணைகிறார்.

**6. 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில், ஆண்கள் Freestyle 125 கிலோ பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்?**

A. Sumit Kumar

B. Amit Sangwan

C. Bajrang Punia

D. G S Sandhu

விடை : **A. Sumit Kumar**

மே 14 2017 அன்று நடைபெற்ற 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் Sumit Kumar 125 கிலோ பிரிவில் வெள்ளிப்பதக்கத்தை வென்றார். இறுதிச்சுற்றில் ஈரானைச்சேர்ந்த Yadollah Mohammadkazem Mohebi-யிடம் 2-6 என்ற கணக்கில், வெற்றி வாய்ப்பை நழுவவிட்டார். இதன் மூலம் இந்தியா தனது, ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியினை முடித்தது. மேலும் 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளி, நான்கு வெண்கலம் என 10 பதக்கங்களை பெற்றுள்ளது. இது சென்ற முறை பாங்காக்கில் நடைபெற்ற போட்டியில் பெற்ற ஒன்பது பதக்கங்களைக்காட்டிலும் அதிகமாகும்.

**7. பொதுச்சேவைக்காக முதன்முறையாக Bhairon Singh Shekhawat வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் யார்?**

A. Mukul Sangma

B. Manik Sarkar

C. Lal Thanhawla

D. Pawan Chamling

விடை : **D. Pawan Chamling**

மே 15 2017 அன்று ராஜஸ்தான், ஜெய்ப்பூரில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவர்கள், பொதுச்சேவைக்கான **Bhairon Singh Shekhawat** வாழ்நாள் சாதனையாளர் விருதை சிக்கிம் முதல்வர் **Pawan Chamling**க்கு வழங்கி கௌரவித்தார். இந்தியாவிலேயே 5 சட்டமன்றத்தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிபெற்று அதிக நாட்கள் முதல்வராக இருப்பவர் இவரே. வரும் 2019ல் நடைபெறும் தேர்தலோடு இவரின் அரசியல் வாழ்க்கை 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

**8. 2017 "Smart Village" விருது வென்ற இந்திய கிராமம் எது?**

A. Punsari

B. Mawlynnong

C. Govardhan Ecovillage

D. Dharnai

விடை : C. Govardhan Ecovillage

மகாராஷ்டிராவின் வாடா மாவட்டத்திலுள்ள **International Society for Krishna Consciousness (ISKCON)**ன் **Govardhan Ecovillage**, 2017க்கான **"Smart Village"** விருதினை வென்ற இந்திய கிராமமாகிறது. வாடா தாலுகாவில் உள்ள இக்கிராமம், மும்பைக்கு 108 கி.மீ. தொலைவில் வடக்கே, சயாத்திரி மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. இவ்விருது, வாழ்க்கைத்தரம், மேம்பாடு, சமூக-பொருளாதார, உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை அடிப்படையாக்கொண்டு வழங்கப்படுகிறது. இவ்விருது **India Trade Promotion Organization (ITPO)**வினால் வழங்கப்படுகிறது. ISKON-ன் தலைமையகம் மேற்கு வங்காளத்திலுள்ள மாயாபூரில் அமைந்துள்ளது. இதன் நோக்கம் கிருஷ்ணரின் பக்தி மார்க்கத்தினை மக்களிடையே பரப்புவதாகும்.

**9. 43வது G7 உச்சிமாநாடு எந்த நகரத்தில் நடைபெறுகிறது?**

A. ஜெர்மனி

B. இத்தாலி

C. பிரான்ஸ்

D. US

விடை : B. இத்தாலி

43வது G7 உச்சிமாநாடு இத்தாலியிலுள்ள, Taorminain Sicilyயில் நடைபெறுகிறது. இதில் G7 உறுப்பு நாடுகளின் தலைவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர். இம்மாநாடு பிரிட்டிஷ் பிரதமர் Theresa May, பிரெஞ்சு ஜனாதிபதி Emmanuel Macron, இத்தாலிய பிரதமர் Paolo Gentiloni, அமெரிக்க ஜனாதிபதி Donald Trump ஆகியோருக்கு முதல் G7 மாநாடு ஆகும்.

10. 2017 சர்வதேச குடும்பங்களின் தினத்துக்கான (International Day of Families) மையக்கருத்து என்ன?

A. Ensuring Work-Family Balance

B. Families, education and well-being

C. Families, healthy lives and sustainable future

D. Stronger families, stronger communities

விடை : B. Families, education and well-being

2017 சர்வதேச குடும்பங்களின் தினத்துக்கான (International Day of Families) மையக்கருத்து "Families, education and well-being" ஆகும். குடும்பங்கள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் குடும்பங்களை பாதிக்கும் சமூக, பொருளாதார மற்றும் மக்கள்தொகை வளர்ச்சி பற்றிய அறிவை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மே 15 அன்று இத்தினம் அனுசரிக்கப்படுகிறது. இவ்வாண்டுக்கான மையக்கருத்து, கல்வியின் முக்கியத்துவத்தையும் அதைக்கொண்டு அமையும் சிறப்பான வாழ்க்கையைப்பற்றிய விழிப்புணர்வையும் வலியுறுத்துகிறது. இதன் தலையாய நோக்கம், 2030ல் நிலையான வளர்ச்சி, வறுமையை ஒழித்தல், பொருளாதாரப்பகிர்வுகளை ஊக்குவிப்பது, சமூக மேம்பாடு மற்றும் மக்கள் நலன் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

# TNPSC Tamil Current Affairs 16th May 2017

1. பிரான்சின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Edouard Philippe

B. Bernard Cazeneuve

C. Manuel Valls

D. Michel Debre

விடை : A. Edouard Philippe

பிரான்சின் புதிய பிரதமராக Edouard Philippe-ஐ, பிரான்சின் புதிய குடியரசுத்தலைவர் Emmanuel Macron அவர்கள் நியமித்துள்ளார். இவர் Emmanuel Macronன் மத்தியக்கட்சியை சார்ந்தவரல்ல. மாறாக மத்திய வலதுசாரி குடியரசுக்கட்சியை சார்ந்தவராவார். பிரெஞ்சு அரசியலில், வலதுசாரி மற்றும் இடதுசாரிகள் இணைந்து ஆட்சியமைப்பது ஒரு நல்ல விஷயமாக காணப்படுகிறது.

2. 2017 World Bank's Power accessibility பட்டியலில், இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

A. 39வது

B. 26வது

C. 44வது

D. 16வது

விடை : B. 26வது

2014-ல் 99வது இடத்திலிருந்த இந்தியா, தற்போது 2017 World Bank's Power accessibility பட்டியலில் 26வது இடத்தைப்பிடித்துள்ளது. இந்திய அரசாங்கத்தின் கிராமிய மின்சாரத்திட்டத்தின் காரணமாக, 18,452 கிராமங்களில் 13,000 கிராமங்கள் 1000 நாட்களுக்குள் மின்சார வசதி பெற்றுள்ளன. மேலும் மின்சார உள்கட்டமைப்பு உள்ள இடங்களில், ஒருவர் மின்சாரம் வேண்டி விண்ணப்பித்தால், அவருக்கு 24

மணிநேரத்துக்குள்ளாக மின்சார வசதி செய்து தரப்படவேண்டும். மின்சார உள்கட்டமைப்பு இல்லாத இடங்களில், ஒருவர் மின்சாரம் வேண்டி விண்ணப்பித்தால், அவருக்கு ஒரு வாரத்துக்குள்ளாக மின்சார வசதி செய்து தரப்படவேண்டும்.

**3. சமீபத்தில் மறைந்த S. ராமசாமி, எந்த மாநிலத்தின் முன்னாள் முதல்வராவார்?**

A. கேரளா

B. தமிழ்நாடு

C. புதுச்சேரி

D. கர்நாடகம்

விடை : C. புதுச்சேரி

புதுச்சேரியின் முன்னாள் முதல்வர் S. ராமசாமி (80), மே 15, 2017 அன்று புதுச்சேரியில் காலமானார். இவர் 1969 முதல் 1973 வரை திமுக.-சிபிஐ கூட்டணி அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்தார். பின்பு 1973ல் அதிமுகவில் இணைந்தார். 1974ல் அதிமுக-சிபிஐ கூட்டணி அமைச்சரவையில் தலைவராக இருந்தார். பின்பு 1977ல் அதிமுக அரசாங்கத்தில் ஒரு வருடத்திற்கும் மேலாக முதலமைச்சராகவும் இருந்தார். 1985 & 1990ம் ஆண்டுகளில் காரைக்காலில் தனித்துப்போட்டியிட்டார். 1992ல் இவர் காங்கிரஸில் இணைந்தார்.

**4. 2017 Formula 1 Spanish Grand Prix-ஐ வென்றவர் யார்?**

A. Sebastian Vettel

B. Nico Rosberg

C. Valtteri Bottas

D. Lewis Hamilton

விடை : D. Lewis Hamilton

இங்கிலாந்தின் Formula 1 கார் பந்தய வீரரான Lewis Hamilton, பார்சிலோனாவின் Circuit de Barcelona-Catalunyaவில் நடைபெற்ற 2017 Formula 1 Spanish Grand Prix போட்டியில் வென்றுள்ளார். இது 71வது Formula 1 கார் பந்தயமாகும்.

**5. National Platform for Disaster Risk Reduction (NPDRR)ன் 2வது கூட்டத்தை எந்த நகரம் நடத்தியது?**

A. புது டில்லி

B. நாக்பூர்

C. அகமதாபாத்

D. விசாகப்பட்டினம்

விடை : A. புது டில்லி

2017 மே 15-16 வரை National Platform for Disaster Risk Reduction (NPDRR)ன் 2வது கூட்டம், 'Disaster Risk Reduction for Sustainable Development: Making India Resilient by 2030' என்ற மையக்கருத்துடன் புது டில்லியில் தொடங்கியது. இதனை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார். NPDRR என்பது பல பங்குதாரர்களின் தேசிய இயங்குதளம் ஆகும், இது பேரழிவு மேலாண்மைத்துவத்தில் பங்கு கொண்டு, அதற்கான முடிவை ஊக்குவிப்பதோடு நாட்டின் கூட்டாட்சி கொள்கையையும் பலப்படுத்துகிறது. இக்கூட்டத்தில் மாநில அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் தலைவர்கள் மற்றும் சிறப்புப்பேரழிவு மேலாண்மை தலைவர்கள், கல்வியாளர்கள், தனியார் துறை நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் சிவில் சமுதாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட 1000க்கும் அதிகமான விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

**6. 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர் யார்?**

A. Sumit Kumar

B. Bajrang Punia

C. Sarita Mann

D. Amit Sangwan

விடை : B. Bajrang Punia

புதுடில்லியில் நடைபெற்ற 2017 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 65kg Freestyle பிரிவில் தென் கொரியாவை சேர்ந்த Seunghui Lee-வை 6-2 என்ற கணக்கில் தோற்கடித்து, இந்தியாவைச்சேர்ந்த Bajrang Punia தங்கம் வென்றார். இதன் மூலம் இவர் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்திய வீரர் ஆனார். இதைத்தவிர்த்து, மகளிருக்கான 58 kg பிரிவில் Saritha Mann வெள்ளியையும், ஆண்கள் 125kg Freestyle பிரிவில் Sumit Kumar வெள்ளியையும் வென்றனர். ஒரு தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் நான்கு வெண்கலப்பதக்கங்களென மொத்தம் 10 பதக்கங்களை இந்திய வீரர்கள் வென்றுள்ளனர்.

7. வாரணாசியை ஒரு ஸ்மார்ட் நகரமாக மாற்றுவதற்காக British Geological Survey (BGS) உடன் எந்த IIT இணைந்து பணியாற்றவுள்ளது?

A. IIT Bombay

B. IIT Madra

C. IIT Kharagpur

D. IIT Indore

விடை : C. IIT Kharagpur

வாரணாசியை ஒரு ஸ்மார்ட் நகரமாக மாற்றுவதற்காக British Geological Survey (BGS) உடன் IIT Kharagpur இணைந்து பணியாற்றவுள்ளது. திட்டத்தின் ஒரு பகுதியாக, புதிய போக்குவரத்து மற்றும் சேவை உள்கட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு உதவும் விதமாக, வாரணாசி நகரத்தின் முப்பரிமாண புவியியல் மாதிரியாக்கத்தை உருவாக்கவுள்ளனர். இத்திட்டத்தில் புவியியல்-விஞ்ஞான முறைகளான துளையிடுதல், புவிசார் தொழில்நுட்பங்கள், டெக்டோனிக்ஸ், மற்றும்

ரிமோட் சென்சிங் போன்ற செயல்முறைகள் அடங்கும். இது இந்தியாவிலேயே முதன்முதலாக முப்பரிமாண முறையில் நடைபெறும் நகர்ப்புற ஆய்வு மற்றும் திட்டமிடல் ஆகும். இத்திட்டத்தின் மூலம் வாரணாசி நகரம், மற்ற இந்திய நகரங்களுக்கொரு முன்னோடியாக இருக்கும்.

**8. UNFCCC-ன் புதிய துணை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**

**A. Arvind Mehta**

**B. P K S Chaku**

**C. Natasha Singh**

**D. Ovais Sarmad**

விடை : **D. Ovais Sarmad**

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் **Antonio Guterres**, இந்தியாவின் **Ovais Sarmad**-ஐ, **United Nations Framework Convention on Climate Change (UNFCCC)**ன் துணைச்செயலாளராக நியமித்துள்ளார். இந்தப்பணி, கட்சி மாநாட்டில் வழங்கப்பட்ட ஆலோசனைக்குப் பின்னர் நியமனம் செய்யப்பட்டது. இதற்குமுன் **Richard Kinley** இப்பதவியிலிருந்தார். தற்போது இவர் **(Ovais Sarmad) International Organization for Migration (IOM)**ன் பொது இயக்குனருக்கு தலைமைப்பணியாளராக பணியாற்றுகிறார்.

**9. Economic Outlook Survey of Federation of Indian Chambers of Commerce and Industry (FICCI)ன் சமீபத்திய அறிக்கையின்படி, 2017-18 நிதியாண்டில் இந்தியாவின் GDP என்னவாக இருக்கும்?**

**A. 7.7%**

**B. 6.9%**

**C. 7.9%**

**D. 7.4%**

விடை : **D. 7.4%**

Economic Outlook Survey of Federation of Indian Chambers of Commerce and Industry (FICCI)ன் சமீபத்திய அறிக்கையின்படி, 2017-18 நிதியாண்டில் இந்தியாவின் GDP 7.4% இருக்கும். இது குறைந்தபட்ச அளவான 7% முதல் அதிகபட்ச அளவான 7.6% வரை கொண்டிருக்கும். இந்த அறிக்கையின்படி 2017-18ம் ஆண்டில் விவசாயத்துறை 3.5% வளர்ச்சியையும் தொழிற்துறை மற்றும் சேவைகள் துறைகள் முறையே 6.9% & 8.4% வளர்ச்சியையும் அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தகணக்கீட்டின் முடிவுகளின்படி, 2017-18 நிதியாண்டில் Consumer Price Index (CPI) 4.8% ஆகவிருக்கும். இதன் குறைந்தபட்சம் 4% முதல் அதிகபட்சம் 5.3% ஆகவிருக்கும்.

10. நந்தன்கனன் (Nandankanan) விலங்கியல் பூங்கா (NZP) எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. தமிழ்நாடு

B. ஒடிசா

C. அசாம்

D. கர்நாடகம்

விடை : B. ஒடிசா

நந்தன்கனன் விலங்கியல் பூங்கா (NZP) ஒடிசாவின் புவனேஸ்வரில் அமைந்துள்ளது. இங்கு 67 வகையான பாலூட்டிகள், 81 வகையான பறவைகள், மற்றும் 18 வகையான ஊர்வனங்கள் என 166 இனங்களைச்சேர்ந்த 1660 தனி விலங்குகள் வாழ்கின்றன. இந்தியாவிலேயே அதிக வெள்ளைப்புலிகள் உள்ள இடம் இதுதான். இம்மிருகக்காட்சிசாலையில் 34 வகையான நீர்வாழ் உயிரினங்கள் உள்ளன. மேலும் பல வகையான மீனினங்களும் உள்ளன. ஆசிய சிங்கம், இந்திய முதலைகள், நீலகிரி லங்கூர், இந்திய எறும்புத்தின்னி, சுட்டி மான் மற்றும் எண்ணற்ற பறவைகள், ஊர்வன மற்றும் மீன் வகைகள் நந்தன்கனனில் உள்ளன. கருஞ்சிறுத்தை & வெள்ளைப்புலிகள் ஆகிய விலங்கினங்களை இனப்பெருக்கம் செய்து, அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்ததன் மூலம், உலகளவில் இப்பூங்கா நற்பெயரை பெற்றுள்ளது.

# TNPSC Tamil Current Affairs 17th May 2017

**1. புற்றுநோய் சிகிச்சை ஆராய்ச்சிக்காக 2017 INSA Young Scientist விருதை வென்றவர் யார்?**

**A. R D Trivedi**

**B. Aasok Tmange**

**C. Sidharth Deshmukh**

**D. Aravind Kumar Rengan**

விடை : **D. Aravind Kumar Rengan**

ஹைதராபாத் ஐஐடி(IIT-H)-யில் உயிர் மருத்துவ பொறியியல் துறையில் உதவிப்பேராசிரியராக பணிபுரியும் **Dr. Aravind Kumar Rengan** அவர்களுக்கு **2017**ம் ஆண்டுக்கான இளம் அறிவியல் அறிஞர் பிரிவில், புற்றுநோய் சிகிச்சை ஆராய்ச்சிக்காக **2017 INSA (Indian National Science Academy)** வின் விருதினை வென்றுள்ளார். இவ்விருது ஒரு வெண்கலப்பதக்கம், ரூ.**25,000** பணப்பரிசு மற்றும் சான்றிதழை உள்ளடக்கியது. வரும் டிசம்பர் **2017**ல் நடக்கும் **INSA**வின் பொதுக்கூட்டத்தில், இவருக்கு இவ்விருது வழங்கப்படும்.

**2. உலகின் மிகச்சிறிய செயற்கைக்கோளான "KalamSat"-ஐ Rifath Sharook என்பவர் வடிவமைத்துள்ளார். இவர் எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

**A.** சீனா

**B.** மலேசியா

**C.** இந்தியா

**D.** ஜப்பான்

விடை : **C.** இந்தியா

தமிழ்நாட்டு இளைஞரான **Rifath Sharook** "கலாம்சட்" என்ற பெயரில் உலகின் மிகச்சிறிய செயற்கைக்கோளை வடிவமைத்துள்ளார். **64 gm** மட்டுமே எடைகொண்ட இந்த செயற்கைக்கோளை ஜூன் **21 2017** அன்று

NASA விண்ணில் ஏவுகிறது. இதன் மூலம் நாசாவால் தனது பரிசோதனையை பரிசோதித்த முதல் மாணவன் என்கிற பெருமையை இவர் பெறுகிறார். இச்செயற்கைக்கோளின் முக்கிய வேலை, முப்பரிமாணத்தில் அச்சு செய்யப்பட கார்பன் இழையின் செயல்திறனை விளக்குவதாகும். இது விண்வெளியில் 240 நிமிடம் பணிசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, மேலும் விண்வெளியில் ஒரு நுண்ணிய ஈர்ப்பு சூழலில்(Micro-gravity) 12 நிமிடங்கள் வரை செயல்படும்.

**3. எந்த மத்திய அமைச்சர் வெளிப்படையான வரி நிர்வாகத்திற்காக, "Operation Clean Portal" என்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்?**

A. சுஷ்மா சுவராஜ்

B. அருண் ஜெட்லி

C. நரேந்திர மோடி

D. ராஜ்நாத் சிங்

விடை : B. அருண் ஜெட்லி

மே 16 2017 அன்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, வெளிப்படையான வரி நிர்வாகத்திற்காக, "Operation Clean Portal" என்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இதன் சிறப்பம்சங்களாக ஒரே இடத்தில் விரிவான தகவலை வழங்கி, குடிமக்களிடம் வரி விதிப்பு தொடர்பான இணக்கமான சூழலை ஏற்படுத்தி, அதன் நிலை அறிக்கைகளைப்பகிர்ந்து கொள்வதன் மூலம் வெளிப்படையான வரி நிர்வாகத்தை செயல்படுத்துவதாகும். இதனை Central Board of Direct Taxes (CBDT) வடிவமைத்துள்ளது. அதிகளவு கணக்கில் வராத பணத்தை, தனது கணக்கில் வைத்திருந்தால், அது "Operation Clean Portal"ன் திட்டத்தின் மூலம் பின்தொடரப்பட்டு நடவடிக்கைக்குள்ளாக்கும்.

**4. மறைந்த புகழ்பெற்ற பத்திரிகையாளர் Javier Valdez, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

A. மெக்ஸிகோ

B. பொலிவியா

C. Nauru (நவ்ரூ)

D. Trinidad and Tobago (டிரினிடாட் & டொபாகோ)

விடை : A. மெக்ஸிகோ

மெக்ஸிகோவின் புகழ்பெற்ற பத்திரிகையாளர் மற்றும் Riodoceன் நிறுவனருமான Javier Valdez, மே 15 2017 அன்று, மெக்ஸிகோவின் வடமேற்கு மாகாணமான (Sinaloa)சினாலோவாவில், முகந்தெரியாத மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் தேசிய மற்றும் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளராவார். இவர் "Narcoperiodismo" & "Los Morros del Narco" உட்பட பல போதை மருந்து வியாபாரங்கள் சம்பந்தப்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். இவர் போதைப்பொருள் வியாபாரங்கள் பற்றி புகார் அளித்ததன் மூலம் அறியப்படுகிறார்.

5. பள்ளிகளில் மதிய உணவுத்தரத்தை சரிபார்க்க "Maa Committee"-ஐ எந்த மாநில அரசு அமைத்துள்ளது?

A. உத்தரப்பிரதேசம்

B. அசாம்

C. தமிழ்நாடு

D. இமாச்சல பிரதேசம்

விடை : A. உத்தரப்பிரதேசம்

தொடக்கப்பள்ளிகளில் வழங்கும் மதிய உணவின் தரத்தை சரிபார்க்கவும், சுத்தமான சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்குவதை உறுதிசெய்யவும், உத்தரப்பிரதேச அரசு "Maa Committee"-ஐ அமைத்துள்ளது. இக்குழுவில், சம்பந்தப்பட்ட பள்ளியில் படிக்கும் மாணாக்கர்களின், அனைத்து சமுதாயத்தைச்சேர்ந்த ஆறு தாய்மார்களே குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். சமையலறையின் சுத்தம் முதல் உணவு வழங்குவது வரை, இவர்களின் கண்காணிப்பிலேயே இருக்கும்.

6. OIC Independent Permanent Human Rights Commission (IPHRC)ன் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A. United Arab Emirates

B. Senegal

C. Saudi Arabia

D. Burkina Faso

விடை : C. Saudi Arabia

OIC Independent Permanent Human Rights Commission (IPHRC)ன் தலைமையகம், சமீபத்தில் மே 15 2017 அன்று சவுதி அரேபியாவின் Jeddahவில் திறக்கப்பட்டது. இத்தலைமையகம் புறநிலை மற்றும் நடுநிலையான கருத்துக்களை வழங்குவதன் மூலம் இசுலாமியர்களின் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை சர்வதேச விதிகள் மற்றும் இசுலாமிய கோட்பாடுகளைக்கொண்டு ஊக்குவிக்கும். IPHRC என்பது ஒரு திறமையான, இசுலாமியர்களின் மனித உரிமை பிரச்சனைகளுக்கு ஆலோசனை வழங்கும், Organization of Islamic Cooperation (OIC)ன் கீழ் இயங்கும் ஓர் சுதந்திரமான அமைப்பாகும். IPHRC தனது உறுப்பு நாடுகளிளும் மனித உரிமைகளை கண்காணிப்பதற்கான அதிகாரத்தினை பெற்றுள்ளது. அனைத்து உறுப்பு நாடுகளிலும் அரசியல், சிவில் மற்றும் பொருளாதார உரிமைகளை மேம்படுத்துவதில் இது உதவுகிறது.

7. GP 3 Series பந்தயத்தை வென்ற முதல் இந்திய ஓட்டுநர் யார்?

A. Dinesh Singh

B. Sanjay Sharma

C. Karun Chandhok

D. Arjun Maini

விடை : D. Arjun Maini

பெங்களுரைச்சேர்ந்த Arjun Maini, Jenzer Motorsports நிறுவனத்துக்காக, மே

14 2017 அன்று ஸ்பெயினிலுள்ள Circuit de Catalunyaவில் நடைபெற்ற GP 3 Series பந்தயத்தில் கலந்துகொண்டு வெற்றிபெற்றுள்ளார். இதன் மூலம் GP 3 Series பந்தயத்தை வென்ற முதல் இந்திய ஓட்டுநர் என்ற பெருமையை இவர் பெறுகிறார். இவர் GP 3 Series-ன் ஒன்பது சுற்றுகளில் 21 புள்ளிகளைப்பெற்று 3வது இடத்திலுள்ளார். ஜப்பானைச்சேர்ந்த Nirei Fukuzumi 29 புள்ளிகளைப்பெற்று முதலிடத்திலும், அவரைத்தொடர்ந்து இத்தாலியைச்சேர்ந்த Alessio Lorandi, 25 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்திலும் உள்ளனர். GP 3 Series வரும் நவம்பர் 26 2017 அன்று அபுதாபியிலுள்ள Yas Marina Circuit-ல் முடிவடையும்.

**8. 2017 G20 Labour & Employment Ministers கூட்டத்திற்கு, இந்தியாவின் பிரதிநிதி யார்?**

A. Rajit Punhani

B. Bandaru Dattatraya

C. Sushma Swaraj

D. Arun Jaitley

விடை : B. Bandaru Dattatraya

2017 மே 18 & 19 அன்று ஜெர்மனியில் Bad Neuenahr-ல் நடைபெறவுள்ள 2017 G20 Labour & Employment Ministers கூட்டத்திற்கு, இந்தியாவின் பிரதிநிதியாக Bandaru Dattatraya கலந்துகொள்கிறார். இவர், இந்தியா சமீபத்தில் தொழிலாளர்களின் நலனுக்காக முன்னெடுத்துள்ள வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, சமூக பாதுகாப்பு, மகப்பேற்று நன்மை, குழந்தைத்தொழிலாளர் ஆகியவற்றுடன் தொடர்புடைய முயற்சிகளை விவரிப்பார். இக்கூட்டம் தொழிலாளர், குடியேற்றம் மற்றும் இளைஞர் வேலைவாய்ப்பு முதலிய பல்வேறு தலைப்புகளை விவாதிக்கும். G20 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் முடிவுகள் கூட்டத்தின் இறுதியில் ஏற்றுக்கொள்ளப்படும். இது ஜூலை 7-8 அன்று ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க்கில் நடைபெறும்.

9. இந்தியாவின் முதல் **"Smart Grid"** திட்டம் எந்த நிறுவனத்தால் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது?

**A. Shanmugha Arts Science Technology & Research Academy (SASTRA)**

**B. Indian Institute of Space Science and Technology (IISST)**

**C. Indian Institute of Technology Madras (IITM)**

**D. Indian Institute of Engineering Science and Technology (IIEST)**

விடை : **D. Indian Institute of Engineering Science and Technology (IIEST)**

இந்தியாவின் முதல் **"Smart Grid"** திட்டத்தை **Indian Institute of Engineering Science and Technology (IIEST)** வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சூரிய ஒளி, காற்று மற்றும் காய்கறி கழிவுகள் ஆகியவற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும். இதனை, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி விரைவில் தொடங்கிவைப்பார். சூரிய ஆற்றலிலிருந்து உருவாக்கப்படும் சக்தி சூரிய ஒளி கிடைப்பதை பொறுத்ததாகும். அதேபோல், அதிகக்காற்று வீசும் வெப்பமண்டல புயலைப் பயன்படுத்தி காற்று மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும். சமையலறை மற்றும் வெளிப்புறச்சந்தைகளிலிருந்து பெறப்படும் காய்கறி கழிவுகளிலிருந்து உயிரி வாயுக்கள் உற்பத்தி செய்யப்படும்.

10. நான்காவது முறையாக எவரெஸ்ட் சிகரத்தை அடையும் முதல் இந்தியப்பெண் யார்?

**A. Anshu Jamsenpa**

**B. Lhakpa Sherpa**

**C. Premlata Agarwal**

**D. Malavath Purna**

விடை : **A. Anshu Jamsenpa**

அருணாச்சல பிரதேச மலையேற்ற வீராங்கனையான **Anshu Jamsenpa,** நான்காவது முறையாக எவரெஸ்ட் சிகரத்தை அடையும் முதல் இந்தியப்பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். இம்முறை அவர்

இரட்டை ஏற்றத்திற்கு முயற்சி செய்கிறார். ஒருவேளை இதில் அவர் வெற்றி பெற்றால், உலகிலேயே எவரெஸ்ட் சிகரத்தை 5 முறை அடைந்த பெண் என்ற சாதனையை தனதாக்குவார்.

winmeen

# TNPSC Tamil Current Affairs 18th May 2017

**1. இரயில்வே துறை சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி, A1 பிரிவில் சுத்தமான இரயில் நிலையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரயில் நிலையம் எது?**

A. விசாகப்பட்டினம்

B. ஜம்மு தாவி

C. செகந்திரபாத்

D. ஆனந்த விகார் முனையம்

விடை : A. விசாகப்பட்டினம்

நாட்டிலுள்ள 75 பரபரப்பான இரயில் நிலையங்களில், ஆந்திராவின் விசாகப்பட்டினம் இரயில் நிலையம் A1 பிரிவில் சுத்தமான நிலையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து செகந்திராபாத், ஜம்மு தாவி, விஜயவாடா & ஆனந்த் விஹார் ரயில் நிலையங்கள் அடுத்தடுத்த இடங்களைப்பெற்றுள்ளன. இவ்வறிக்கையை மே 17 2017 அன்று புது டில்லியில் இரயில்வே அமைச்சகம் (Third Party Audit Report on Station Cleanliness) வெளியிட்டது. வருடாந்திர பயணிகளின் வருவாயின் அடிப்படையில் A1, A, B, C, D, E & F என்று இரயில் நிலையங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 'A' பிரிவில், பஞ்சாப்பின் Baes இரயில் நிலையம், தெலுங்கானாவின் Khammam இரயில் நிலையம் மற்றும் மகாராஷ்டிராவின் Ahmed Nagar இரயில் நிலையம் ஆகியவை மிகவும் சுத்தமான இரயில் நிலையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மண்டல வாரியாக தென் கிழக்கு மத்திய இரயில்வே முதலிடத்தையும், அதைத்தொடர்ந்து, கிழக்குக்கடற்கரை இரயில்வே இரண்டாமிடத்தையும் பிடித்துள்ளன. இந்த ஆய்வு, Quality Council of India (QCI)வினால் நடத்தப்பட்டது. இதில் நடைமேடை, கழிவறைகள், குப்பைத்தொட்டிகள், கழிவு மேலாண்மை, இருப்புப்பாதை மேலாண்மை போன்ற கூறுகள் கருத்தில் கொள்ளப்பட்டன.

**2. Forbes-ன் 2017 Global Game Changers பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்தியர் யார்?**

A. Sunny Varkey

B. Mukesh Ambani

C. Rahul Bhatia

D. Cyrus Poonawalla

விடை : B. Mukesh Ambani

Forbes-ன் 2017 Global Game Changers பட்டியலில், உலகெங்கிலும் உள்ள 25 செல்வாக்கு மிகுந்த வர்த்தக தலைவர்களின் பட்டியலில் ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானியின் பெயர் இடம்பெற்றுள்ளது. இந்தப்பட்டியலில் இடம்பெற்றுள்ள 8 வர்த்தகத்தலைவர்களில் அம்பானி ஒருவரே இந்தியராவார். இப்பட்டியல் பெருநிறுவன வளர்ச்சி, கண்டுபிடிப்புகள் மற்றும் சர்வதேச அளவில் அதன் ஈடுபாடு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

3. சமீபத்தில் திருத்தப்பட்ட ஐ. நா வின் "World Economic Situation and Prospects (WESP) as of mid-2017"ன் அறிக்கையின்படி, 2017ல் இந்தியாவின் GDP என்னவாக இருக்கும்?

A. 7.9%

B. 7.7%

C. 7.3%

D. 7.1%

விடை : C. 7.3%

சமீபத்தில் திருத்தப்பட்ட ஐ. நா வின் "World Economic Situation and Prospects (WESP) as of mid-2017"ன் அறிக்கையின்படி, 2017ல் இந்தியாவின் GDP 7.7% லிருந்து 7.3% ஆக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில், பணமதிப்பிழப்பாலும், பொருளாதார வளர்ச்சியினாலும் சனவரி மாத நிலையை கருத்தில் கொள்ளவில்லை. இருப்பினும் திருத்தப்பட்ட இந்த அறிக்கை, வரும் 2018 நிதியாண்டில் இந்தியா 7.9% GDP-ஐ அடைந்துவிடும் என்றும், அடுத்த ஆண்டு சனவரி மாதத்தில் இந்த வளர்ச்சி 7.6% ஆக

இருக்கும் எனவும் கூறியுள்ளது. இருப்பினும் வங்கிகளிலுள்ள அழுத்தம் நிறைந்த இருப்புத்தாள்(**Balance Sheet**)களின் காரணமாக, இந்தியாவின் முதலீடுகள் மோசமான விளைவை சந்திக்குமெனவும் எச்சரித்துள்ளது.

**4. 2017 London World Athletics Championships** போட்டிக்கு தகுதி பெற்றுள்ள **Muhammed Anas,** இந்தியாவின் எந்த மாநிலத்தைச்சேர்ந்தவராவார்?

**A.** தமிழ்நாடு

**B.** கர்நாடகம்

**C.** மேற்கு வங்கம்

**D.** கேரளா

விடை : **D.** கேரளா

புது டில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நடைபெற்ற **Indian Grand Prix Athletics Meet**-ன் மூன்றாவது காலிறுதியில், ஆண்களுக்கான **400m** ஓட்டப்பந்தயத்தை **45.32** நொடிகளில் கடந்து, தனது சொந்த தேசிய சாதனையையே முறியடித்த **Muhammed Anas Yahiya, 2017 London World Athletics Championships** போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். உலக சாம்பியன்ஷிப்புக்கான நுழைவுத்தகுதி **45.50** நொடிகளாகும். இப்போட்டி வரும் ஆகஸ்ட் **2017**ல் லண்டனில் நடைபெறவுள்ளது.

**5. 2017 Whitley Awards**-ஐ வென்ற இந்திய வனவிலங்கு ஆர்வலர் யார்?

**A. Sanjay Gubbi**

**B. Naresh Kadyan**

**C. Aruna Sabhane**

**D. Shahriar Kabir**

விடை : **A. Sanjay Gubbi**

கர்நாடகாவைச்சேர்ந்த **Sanjay Gubbi** மற்றும் அசாமைச்சேர்ந்த **Dr. Purnima Barman** ஆகியோர் கௌரவமிக்க **2017 Whitley** விருதினை வென்றுள்ளனர். இது வனவுயிரிகளின் பாதுகாப்புக்காக அவர்கள் செய்த சேவைக்கு

மதிப்பளிக்கும் விதமாக **"Green Oscars"** எனும் பெயரில் வழங்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்திலுள்ள புலிகளுக்கான தாழ்வாரங்களை பாதுகாத்த காரணத்தினால் **Sanjay Gubbi**க்கும் அசாமின் ஈரநிலங்களை வாழிவிடங்களாகக்கொண்டு வாழும் பெரு நாரைகளின்(பொதுவாக இந்தியாவில் "ஹர்கிலா" என்று வழங்கப்படும்) பெண்ணினங்களை ஒன்றிணைத்து பாதுகாத்த காரணத்தினால் **Dr. Purnima Barman**க்கும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெற்றியாளருக்கும் ஒரு வருட திட்டத்துக்காக **35,000** பவுண்ட் பணப்பரிசு வழங்கப்படுகிறது. **"The Whitley Fund for Nature"** எனும் **UK**வைச்சார்ந்த தொண்டு நிறுவனம், இயற்கைப்பாதுகாவலர்களை கௌரவிக்கும் விதமாக இதனை செய்துவருகிறது.

**6. சமீபத்தில் காலமான Anil Madhav Dave எந்தத்துறைக்கு மத்திய அமைச்சராக இருந்தார்?**

**A.** தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

**B.** பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை

**C.** சுகாதார மற்றும் குடும்ப நலன் அமைச்சகம்

**D.** சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் துறை

விடை : **D.** சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் துறை

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சரான **Anil Madhav Dave,** சமீபத்தில் புது டில்லியில் காலமானார். நர்மதையாற்றின் பாதுகாப்புச்சூழலுக்காகவும் அவற்றின் நீர்ப்பிடிப்புப்பகுதிகளை காப்பதற்காகவும் இவரால் தொடங்கப்பட்ட **"Narmada Samagra"** என்ற திட்டத்தின் மூலம் இவர் அறியப்படுகிறார். இவர் ஜூலை **2016**ல் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சராக பதவியேற்றார்.

**7. 2017 Dan David பரிசினை "Future" பிரிவில் வென்றுள்ள இந்திய விஞ்ஞானி யார்?**

**A. Dronamraju Krishna Rao**

**B. Biman Bagchi**

C. Har Gobind Khorana

D. Shrinivas Kulkarni

விடை : D. Shrinivas Kulkarni

வானியல் துறைக்கு தன் பங்களிப்பை அளித்த இந்திய விஞ்ஞானி Shrinivas Kulkarni, 2017 Dan David "Future" பிரிவில் பரிசினை வென்றுள்ளார். இவர் மட்டுமல்லாமல் Warsaw பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த Andrej Udalski & NASAவைச்சேர்ந்த Neil Gehrels ஆகியோர் தமது வான் இயற்பியல் கண்டுபிடிப்புகளுக்காக இப்பரிசினை வென்றுள்ளனர். இப்பரிசுகள் வரும் 2017 மே 21 அன்று இஸ்ரேலின் Tel Aviv-ல் நடைபெறும் விருது வழங்கும் நிகழ்வில் வழங்கப்படும். Shrinivas Kulkarni, USன் California Institute of Technology-யில் வானியற்பியல் & கோளறிவியல் துறையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். சமுதாயத்திற்கு அளப்பரிய அறிவியல் பங்களிப்பை செய்தோருக்கு, "Past", "Present", & "Future" என்ற மூன்று பிரிவில், $1 மில்லியனுக்கான பரிசுகள் வழங்கப்படுகிறது.

8. சமீபத்தில் மறைந்த Reema Lagoo, எந்தத்துறையைச்சார்ந்தவராவார்?

A. அரசியல்

B. திரைப்படத்துறை

C. பத்திரிகைத்துறை

D. சட்டத்துறை

விடை : B. திரைப்படத்துறை

புகழ்பெற்ற சின்னத்திரை & வெள்ளித்திரை நடிகை Reema Lagoo, மே 18 2017 அன்று மும்பையில் காலமானார். இவர் "Hum Saath Saath Hain", "Kuch Kuch Hota Hai", "Kal Ho Na Ho", "Hum Aapke Hain Koun" போன்ற படங்களில், அம்மா வேடத்தில் நடித்ததன் மூலம் அறியப்படுகிறார். இவர் "Tu Tu Main Main" & "Shriman Shrimati" போன்ற தொலைக்காட்சித்தொடர்களிலும் நடித்துள்ளார். இவர் இறுதியாக மராத்திய படமான Katyar Kaljat Ghusali-யிலும், தொலைக்காட்சித்தொடரான Naamakaran-னிலும் நடித்தார்.

**9. 2017 National Geographic தேனீ போட்டியில் வென்ற இந்திய-அமெரிக்க மாணவர் யார்?**

A. Veda Bhattaram

B. Pranay Varada

C. George Sudarshan

D. Jayant Narlikar

விடை : B. Pranay Varada

2017 National Geographic தேனீ போட்டியில் $50000 மதிப்பிலான பரிசை வென்ற இந்திய-அமெரிக்க மாணவர், Pranay Varada ஆவார். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இந்தப்போட்டியில் இந்திய-அமெரிக்கர்களின் ஆதிக்கமே அதிகம், அவர்களே அதிகம் வென்றுள்ளனர். இதுமட்டுமல்லாமல், நியூ ஜெர்சியைச்சேர்ந்த இந்திய-அமெரிக்க மாணவர் Veda Bhattaram, இறுதிப்போட்டியில் வென்று மூன்றாவது இடத்தை பிடித்து $10,000 மதிப்பிலான ஊக்கத்தொகையை பெற்றார். இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்ட இறுதி வெற்றியாளர்களில் பத்தில் ஆறு பேர் இந்திய-அமெரிக்க மாணவர்களாவர்.

**10. 2017 World Telecommunication and Information Society Day (WTISD)-ன் மையக்கருத்து என்ன?**

A. Big data for big impact

B. Entrepreneurship for social impact

C. Reduce digital divide

D. Promote digital education for social welfare

விடை : A. Big data for big impact

International Telecommunication Union (ITU)-ன் தொடக்க தினத்தையும் International Telegraph Convention (ITC)-க்காக முதல் கையெழுத்திட்ட ஆண்டு நிறைவையும் குறிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மே 17 அன்று 2017 World Telecommunication and Information Society Day (WTISD)

கடைபிடிக்கப்படுகிறது. இதன் நோக்கம் இணையம் மற்றும் பிற தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இந்நாள், டிஜிட்டல் வேறுபாடுகளை நீக்கும், ஒரு இணைப்புப்பாலமாக செயல்படுகிறது. **2017 World Telecommunication and Information Society Day (WTISD)-ன்** மையக்கருத்து **"Big data for big impact"** ஆகும். இது பெரிய தரவுகளின் யுத்திகளைக்கொண்டு, சில ஒழுங்கற்ற, சிக்கலான, கட்டமைக்கப்படாத தரவுகளை எவ்வாறு சரிசெய்வதென்பதை வலியுறுத்துகிறது.

---

# TNPSC Tamil Current Affairs 19th May 2017

**1. 2017ம் ஆண்டுக்கான இருதரப்பு கடற்சார் பயிற்சியான "SIMBEX-17" இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே தொடங்கியுள்ளது?**

A. இலங்கை

B. தென் ஆப்பிரிக்கா

C. தென்கொரியா

D. சிங்கப்பூர்

விடை : D. சிங்கப்பூர்

தென் சீனக்கடலில் சிங்கப்பூர் மற்றும் இந்தியாவின் கடற்படைகளுக்கு இடையேயான 24வது "SIMBEX-17" கடற்சார் பயிற்சி, மே 18 2017 அன்று தொடங்கி மே 21 2017 வரை தொடர்ந்து நடைபெறும். இப்பயிற்சியின் நோக்கம், இரண்டு கடற்படைகளுக்கும் இடையேயான பாதுகாப்புகளை மேம்படுத்துவதும் மற்றும் கடற்சார் நடைமுறைகளை புரிந்துகொள்வதும் ஆகும். SIMBEX என்பது "Singapore-India Maritime Bilateral Exercises" என்பதன் சுருக்கமாகும்.

**2. சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றத்துக்கான அமைச்சகத்தின் கூடுதல் பொறுப்புகள் எந்த மத்திய அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது?**

A. Ravi Shankar Prasad

B. Ananthkumar

C. Harsh Vardhan

D. J P Nadda

விடை : C. Harsh Vardhan

அமைச்சர் Anil Madhav Dave-ன் மறைவுக்குப்பிறகு சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றத்துக்கான அமைச்சகத்தின் கூடுதல் பொறுப்புகள் Dr. Harsh Vardhan அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் & புவியியல் அமைச்சகத்துக்கான அமைச்சராக

பதவியிலுள்ளார். புது டில்லியிலுள்ள Chandni Chowk-ன் 16வது மக்களவை நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

**3. African Development Bank (AfDB)-ன் 2017க்கான வருடாந்திர கூட்டத்தை எந்த நகரம் நடத்தவுள்ளது?**

A. வேலன்சியா (Valencia)

B. காந்திநகர்

C. லிஸ்பன்

D. ஷாங்காய்

விடை : B. காந்திநகர்

African Development Bank (AfDB)-ன் 2017க்கான வருடாந்திர கூட்டம், குஜராத்தின் காந்திநகரிலுள்ள மகாத்மா மந்திரில், வரும் 2017 மே 22 முதல் 26 வரை "Transforming Agriculture for Wealth Creation in Africa" எனும் மையக்கருத்துடன் நடைபெறவுள்ளது. 2017 மே 23 அன்று இந்தியாவில் நடைபெறும் இம்முதல் AfDB கூட்டத்தினை, நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார். இந்த சர்வதேச நிகழ்வில் 81 உலக நாடுகளிலிருந்து ஆளுநர்கள், துணை ஆளுநர்கள், நிர்வாக இயக்குநர்கள், கொள்கை தயாரிப்பாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் என 3000-க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இது அரசாங்கப்பிரதிநிதிகள், சிந்தனையாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஊடகங்களின் பிரதிநிதிகளுக்கு ஆப்ரிக்காவின் பிரச்சனைகளை விவாதிக்கும் ஒரு மேடையாக அமையும்.

**4. Ernst and Young (EY) வெளியிட்ட 2017-க்கான Renewable Energy Country Attractiveness Index (RECAI)-ல் முதலிடத்தைப்பிடித்துள்ள நாடு எது?**

A. சீனா

B. இந்தியா

C. ஜெர்மனி

D. ஆஸ்திரேலியா

விடை : A. சீனா

**Ernst and Young (EY)** வெளியிட்ட **2017**-க்கான **Renewable Energy Country Attractiveness Index (RECAI)**-ல் **40** நாடுகளில் சீனா முதலிடத்தைப்பிடித்துள்ளது. இந்தியா 2வது இடத்திலும், அதைத்தொடர்ந்து அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சிலி, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப்பிடித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முதலீடுகள், முதலீட்டிற்கான வாய்ப்புகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு **RECAI** இந்த **40** நாடுகளுக்கான குறியீட்டை வழங்கியுள்ளது.

**5.** சுந்தரம் ரவி எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

**A.** கிரிக்கெட்

**B.** பேட்மிட்டன்

**C.** ஹாக்கி

**D.** ஸ்பிரின்ட்

விடை : **A.** கிரிக்கெட்

இந்தியாவின் கிரிக்கெட் நடுவர் **& ICC Elite Panel of Umpires**-ன் உறுப்பினருமான சுந்தரம் ரவி, கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்புடையவராவார். ஜூன் **2017** அன்று நடைபெறவுள்ள **2017 ICC Champions Trophy**-க்காக **International Cricket Council (ICC)** மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள **20** நடுவர்களுள் இவரும் ஒருவர். **ICC** போட்டி நடுவர்கள் பட்டியலில் **Chris Broad, David Boon** மற்றும் **Andy Pycroft** ஆகியோருடன் **Aleem Dar, Kumar Dharmasena, Marais Erasmus, Chris Gaffaney, Ian Gould, Richard Illingworth, Richard Kettleborough, Nigel Llong, Bruce Oxenford, Sundaram Ravi, Paul Reiffel & Rod Tucker** ஆகிய பன்னிருவரும் நடுவர்களாக கலந்துகொள்வார்கள்.

**6.** சமீபத்தில் வெளியிடப்பட்ட **"2017 Brand Finance India 100"**-ன் அறிக்கையின் படி, இந்தியாவில் மிகவும் மதிப்புவாய்ந்த பிராண்ட் எது?

**A. Tata** குழுமம்

**B.** ஏர்டெல்

C. LIC

D. ரிலையன்ஸ்

விடை : A. Tata குழுமம்

சமீபத்தில் வெளியிடப்பட்ட "2017 Brand Finance India 100"-ன் அறிக்கையின் படி, டாடா குழுமம் இந்தியாவில் 13.1 பில்லியன் டாலர் மதிப்புகொண்ட மதிப்புமிக்க பிராண்ட் ஆகும். ஏர்டெல் நிறுவனம் 2வது இடத்திலும், அதனைத்தொடர்ந்து LIC, Infosys, SBI மற்றும் Reliance Industries Ltd அடுத்தடுத்த இடங்களிலுமுள்ளது. "The Brand Finance" என்பது உலகளாவிய வர்த்தக மதிப்பீடு மற்றும் யுக்திகளை வழங்கும் ஓர் ஆலோசனை நிறுவனமாகும். இந்நிறுவனம் பிராண்ட் அமைப்புகளுக்கு, சிறந்த மேலாண்மையின் மூலம் எப்படி தங்களின் மதிப்பை மேலும் உயர்திக்கொள்வது என்பது போன்ற ஆலோசனைகளை வழங்குகிறது.

7. இந்தியாவின் முதல் Aquatic Rainbow Technology Park (ARTP), எந்த நகரத்தில் அமைக்கப்படவுள்ளது?

A. விசாகப்பட்டினம்

B. சென்னை

C. கொச்சி

D. மும்பை

விடை : B. சென்னை

இந்தியாவின் முதல் Aquatic Rainbow Technology Park (ARTP), சென்னை நகரத்தில் அமைக்கப்படவுள்ளது. இந்தப்பூங்காவில், பல வகையான நவீன வண்ண அலங்கார மீன்கள் பராமரிக்கப்படும். இங்கு மீன் வளர்ப்புக்கான பொரிப்பகங்களும் (Hatcheries) உண்டு. தமிழ்நாட்டின் பொன்னேரியிலுள்ள, Fisheries College and Research Institute (FCRI)-ன் மூலம் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் அதிநவீன வசதிகளைக்கொண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வண்ண அலங்கார மீன் வகைகளை உற்பத்தி செய்வதற்கான மேம்பட்ட உள்கட்டமைப்புகள் உண்டு. அலங்கார

மீனினங்களுக்கான இனப்பெருக்கத்தொழில்நுட்பங்களை உருவாக்கி, தரமான மீன் குஞ்சுகள் இங்கே பெருமளவில் உற்பத்தி செய்யப்படும்.

**8. 2017 International Day against Homophobia, Transphobia & Biphobia (IDAHOT)-ன் மையக்கருத்து என்ன?**

A. Mental health

B. Childhood memories

C. Families

D. Join Hands

**விடை : C. Families**

உலகளவில் LGBTI (Lesbian,Gay,Bisexual,Transgender,Intersexual) உரிமை மீறல்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் & அதன் மீதான எண்ணத்தை உயர்த்தும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் மே 17 அன்று சர்வதேச Homophobia, Transphobia & Biphobia தினம் அனுசரிக்கப்படுகிறது. 2017 International Day against Homophobia, Transphobia & Biphobia (IDAHOT)-ன் மையக்கருத்து "Families" ஆகும். இது குடும்பங்களில் உள்ள ஓரினச்சேர்க்கையாளர்கள், திருநங்கைகள் & இருபாலுணர்வுள்ளவர்களின் நல வாழ்விற்கும் உரிமைக்கும் மதிப்பு தரவேண்டுமென வலியுறுத்துகிறது.

**9. மறைந்த புகழ்பெற்ற பாடகர் Chris Cornel, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

A. ஜெர்மனி

B. பிரான்ஸ்

C. ஜப்பான்

D. US

**விடை : D. US**

புகழ்பெற்ற அமெரிக்க இசைக்கலைஞர், பாடகர் மற்றும் பாடலாசிரியரான Chris Cornel(52), சமீபத்தில் அமெரிக்காவிலுள்ள மிச்சிகனில் காலமானார். "Seattle Rock" இசைக்குழுவின் "Soundgarden" இசைத்தொகுப்பிற்காக

முன்னணி பாடகராகவும், பாடலாசிரியராகவும், கிதார் கலைஞராகவும், **"AudioSlave"** இசைக்குழுவுக்கு முன்னணி பாடகராகவும், பாடலாசிரியராகவும் பணிபுரிந்து பிரபலமடைந்தார்.

**10. எந்த தேதியில் சர்வதேச அருங்காட்சியக நாள் (International Museum Day) அனுசரிக்கப்படுகிறது?**

**A.** மே **22**

**B.** மே **21**

**C.** மே **18**

**D.** மே **19**

விடை : **C.** மே **18**

சமுதாய முன்னேற்றத்திற்கு அருங்காட்சியகத்தின் பங்கு எவ்வளவு முக்கியமென்பதை மக்களுக்கு உணர்த்தவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் மே **18** அன்று சர்வதேச அருங்காட்சியக நாள் **(IMD)** அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் அருங்காட்சியக நிபுணர்கள் பொதுமக்களை சந்தித்து, அருங்காட்சியகங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப்பற்றியும் அதற்கான எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும் விளக்குகின்றனர். **2017** சர்வதேச அருங்காட்சியக நாள் **(IMD)**-ன் மையக்கருத்து **"Museums and contested histories: Saying the unspeakable in museums"** ஆகும். சமுதாய நலனுக்காகவும் மக்களின் ஒற்றுமைக்காகவும் அருங்காட்சியகங்களின் பங்கு அளப்பரியது என்பதை இது வலியுறுத்துகிறது. வரலாறு முதல் எதிர்காலம் வரை ஒரு குடையின் கீழ் தாங்கி நிற்கும் அருங்காட்சியகங்களின் சிறப்பை இந்நாள் உணர்த்துகிறது.

# TNPSC Tamil Current Affairs 20th May 2017

**1. 2017-க்கான Intel International Science and Engineering Fair (ISEF) விருதினை, சுற்றுச்சூழல் பொறியியல் பிரிவில் வென்ற இந்திய இளைஞர் யார்?**

**A. Sairandi Sathyanarayanan**

**B. Pratik Naidu**

**C. Prashant Ranganathan**

**D. Sahithi Pingali**

விடை : **C. Prashant Ranganathan**

ஜாம்ஷெட்பூரைச்சேர்ந்த **Prashant Ranganathan, 2017-க்கான Intel International Science and Engineering Fair (ISEF)** விருதினை சுற்றுச்சூழல் பொறியியல் பிரிவில் வென்றுள்ளார். பூச்சிக்கொல்லிக்கு எதிரான மற்றும் உயிரியல் ரீதியான பயன்பாடு மூலம் அதன் பக்க விளைவுகளை அகற்றுவதற்கான அவரது கண்டுபிடிப்பிற்காக, **$5000** டாலர் மதிப்பிலான இப்பரிசினை கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்சில் பெற்றார். இதைத்தவிர, ஜெர்மனியைச்சேர்ந்த **Ivo Zell,** ஒரு புதிய ரிமோட் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய பறக்கும் கருவியை வடிவமைத்ததற்காக, **$75000** டாலர் மதிப்புமிக்க **Gordon E Moore** விருதினை வென்றுள்ளார்.

**2. பள்ளி மாணவர்களுக்கான e-textbook portal-ஐ, எந்த மாநில அரசு தொடங்கியுள்ளது?**

**A.** அசாம்

**B.** கேரளா

**C.** கர்நாடகம்

**D.** அரியானா

விடை : **D. அரியானா**

அரியானா மாநில அரசு சமீபத்தில் பள்ளி மாணவர்களுக்கான e-பாடப் புத்தகச்சேவையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம்,

மாணவர்கள், Haryana School Education Board (HSEB)-ன் e-textbook தளத்திலிருந்து மின்-புத்தகங்களை உடனடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தற்போது, IX முதல் XII வகுப்பு வரையிலுள்ள 26 பாடப்புத்தகங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. இதனை ஒலிக்கோப்புகளாக எளிதாக மாற்ற முடியும். இவ்வலைத்தளம், புத்தகத்தின் சில பகுதிகளை மட்டும் ஹைலைட் செய்து படிக்கும் வசதியினையும் வழங்குகிறது.

**3. 2015-க்கான இந்திரா காந்தி அமைதிப்பரிசை பெற்ற அமைப்பு எது?**

**A. United Nations High Commissioner for Refugees (UNHCR)**

**B. Indian Space Research Organisation (ISRO)**

**C. International Court of Justice (ICJ)**

**D. International Labour Organization (ILO)**

<u>விடை</u> : **A. United Nations High Commissioner for Refugees (UNHCR)**

மே 18 2017 அன்று புது டில்லியில் நடந்த விழாவில், United Nations High Commissioner for Refugees (UNHCR) அமைப்பிற்கு, முன்னாள் பிரதம மந்திரி மன்மோகன் சிங் அவர்கள் 2015-க்கான இந்திரா காந்தி அமைதிப்பரிசினை வழங்கினார். இதுதவிர, 2014-க்கான விருது ISRO அமைப்பிற்கு Mars Orbiter Mission (MOM)-க்காக, ISROவின் தலைவர் Kiran Kumar அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விருது, ஒரு கோப்பை, ஒரு கோடி பணப்பரிசு மற்றும் சான்றிதழை உள்ளடக்கியது.

**4. சமீபத்திய "Global Burden of Disease (GBD)"-ன் அறிக்கையின்படி, 2017 Healthcare Access and Quality Index (HAQI)-ல் இந்தியா எத்தனையாவது இடத்திலுள்ளது?**

**A. 128வது**

**B. 154வது**

**C. 166வது**

**D. 137வது**

<u>விடை</u> : **B. 154வது**



winmeen

சமீபத்திய "Global Burden of Disease (GBD)"-ன் அறிக்கையின்படி 2017 Healthcare Access and Quality Index (HAQI)-ல், 195 நாடுகளுள் இந்தியா 154வது இடத்திலுள்ளது. இந்தியாவில், குறிப்பிட்ட காலப்பகுதியில் சமூகப்பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும், சுகாதாரத்துறைகளில் அதன் இலக்குகளை அடையமுடியவில்லை. இது காசநோய், நீரிழிவு, ருமாட்டிக் இதய நோய்கள் மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய் ஆகியவற்றில் எதிர்பார்த்ததைவிட மோசமானதாக இருந்தது. 1990 முதல் 2015 வரையான காலப்பகுதியில் 25 நாடுகளில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலிடம் வகிக்கிறது. இந்தக்குறியீடானது 32 நோய்களுக்கான இறப்பு விகிதங்களை அடிப்படையாகக்கொண்டது. இந்நோய்களை திறமையான & சரியான மருத்துவப்பராமரிப்புடன் தவிர்க்கலாம். இதன் வகையில் 1990ம் ஆண்டு, சிறப்புநிலையினை பெற்றுள்ளது.

**5. RR Laxman, எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A. பேட்மின்டன்

B. டேபிள் டென்னிஸ்

C. சதுரங்கம்

D. கிரிக்கெட்

விடை : C. சதுரங்கம்

மே 18 2017 அன்று கொல்கத்தாவிலுள்ள Kshudiram Anushilan Kendraவில் நடைபெற்ற 2017 All India Open Rapid FIDE Rating Chess போட்டியில் Integral Coach Factory-யைச்சேர்ந்த Grand Master RR Laxman வெற்றிபெற்றார். 8.5 புள்ளிகள் பெற்ற Mitrabha Guha-வை 9.5 புள்ளிகள் பெற்று வென்றார்.

**6. சமீபத்தில் மறைந்த, பல விருதுகளைப்பெற்ற புகைப்படக்கலைஞர் Stanley Greene, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

A. சீனா

B. ரஷ்யா

C. ஜப்பான்

D. US

விடை : D. US

மோதல்கள், பேரழிவுகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளை தனது புகைப்படத்திறமையின் மூலம் வெளிப்படுத்திய அமெரிக்க புகைப்படக் கலைஞரான Stanley Greene (52), சமீபத்தில் பிரான்சில் காலமானார். Chechnyaவில் நடந்த விடுதலைப்புலிகளுக்கும் ரஷ்ய ஆயுதப் படைகளுக்கும் இடையேயான அவரது புகைப்பட ஆவணங்கள், 2004-ல் "Open Wound" என்ற புத்தகமாக தொகுக்கப்பட்டது. 1994, 2001, 2004 & 2008-ம் ஆண்டுகளில் World Press Photo விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

7. Bhindawas Bird Sanctuary (BBS) எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. அரியானா

B. ராஜஸ்தான்

C. சிக்கிம்

D. கேரளா

விடை : A. அரியானா

Bhindawas பறவைகள் சரணாலயம் (BBS), அரியானாவின் ஜஜ்ஜார் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த சரணாலயம், Blue Peafowl, Gray Francolin, Black Francolin, Shikra, Black Kite, Greater Coucal, White-throated Kingfisher, Coppersmith Barbet & Indian Roller போன்ற பறவையினைங்களுக்கு புகலிடமாக இருந்துவருகிறது. இந்த சரணாலயம், விரைவில் ஓர் அழகான சுற்றுலாத்தலமாக மேம்படுத்தப்படுவதால், இந்த இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளுக்கு இரவு நேரத்தில் தங்குவதற்கான வசதிகள், ஏரியை அழகுபடுத்துதல், பறவைகள், விலங்குகளுக்கான மருந்தகம் போன்றவையும் திறக்கப்படவுள்ளது.

8. சமீபத்தில், கங்கை நதியை தூர்வாரி புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்த குழு எது?

A. KSS Banerjee committee

B. Mukesh Sinha committee

C. J P Nadda committee

D. Madhav Chitale committee

விடை : D. Madhav Chitale committee

**Madhav Chitale** குழுவானது கங்கை நதியின் களிமண் செயல்திறன், மணல் பதிவேடு, மணல் படிவுகளுக்கான நிதியறிக்கை, வெள்ளநீர் வழித்தடங்கள் பற்றிய ஆய்வுகளை உள்ளடக்கியது. மேலும், இக்குழு சிறந்த விவசாய நடைமுறைகள், நதிக்கரையோர அரிப்பினைத்தடுத்தல் மற்றும் ஆற்றின் வெள்ளப்பகுதிகளில் ஆக்கிரமிப்பை தடுத்தல் ஆகியவற்றை பரிந்துரைத்துள்ளது. இதுமட்டுமல்லாமல், அருகிலுள்ள ஏரிகளிலும் தூரெடுத்து, அவற்றின் கொள்ளளவினை உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழு, மத்திய நீர்வள ஆதார அபிவிருத்தி மற்றும் கங்கை புத்துயிர் அமைச்சகத்தின் மூலம் 2016 ஜூலையில் அமைக்கப்பட்டது.

9. 2017-க்கான HADR பயிற்சி "Karavali Karunya", இந்திய கடற்படையால் எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டது?

A. தமிழ்நாடு

B. கர்நாடகம்

C. ஆந்திரப்பிரதேசம்

D. கேரளா

விடை : B. கர்நாடகம்

இந்தியக்கடற்படையால் மே 18 2017 அன்று கர்நாடகத்திலுள்ள Naval Station-ல், Indian Navy's Western Nava Command-னால், வருடாந்திர Humanitarian Assistance and Disaster Relief (HADR) கூட்டுப்பயிற்சி தொடங்கப்பட்டது. இந்தப்பயிற்சியில் தொழில்முறை பரிமாற்றம் மற்றும் பேரழிவு விளைவுகளை சமாளிக்கும் வழிமுறைகளை, சுனாமி பேரழிவு

சூழலிலேயே பயில்கின்றனர். இப்பயிற்சி 20 மே 2017 வரை நீடிக்கும்.

**10. Integrated Defence Staff (Operations)-ன் புதிய துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**A. Satish Dua**

**B. Subhash Bhamre**

**C. PN Pradhan**

**D. N S Rathore**

விடை : **C. PN Pradhan**

விமானப்படை தளபதியான **PN Pradhan, Integrated Defence Staff (Operations)**ன் புதிய துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது ஆயுதப்படைகளுக்கு இடையே உறுதியான தொடர்பினை ஏற்படுத்துவதற்கான முக்கிய தளமாக விளங்குகிறது. இவ்வமைப்பு, அக்டோபர் 2001-ல், இந்தியாவின் பாதுகாப்பு நிர்வாகத்தை ஆய்வு செய்ய, கார்கில் போருக்குப்பின்னர் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் பேரில் உருவாக்கப்பட்டது. சிறந்த நிர்வாக நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் கொள்கை, கோட்பாடு, போர் சண்டை மற்றும் கொள்முதல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பிற்கான புள்ளியாக இவ்வமைப்பு செயல்படுகிறது. இதன்(IDS) தற்போதைய தலைவராக **Lt General Satish Dua** அவர்கள் உள்ளார்.

# TNPSC Tamil Current Affairs 21st & 22nd May 2017

**1. 5 நாட்களுக்குள் எவரெஸ்ட் சிகரத்தை இருமுறை அடைந்த முதல் இந்தியப்பெண் Anshu Jamsenpa, எந்த மாநிலத்தை சேர்ந்தவராவார்?**

A. மிசோரம்

B. மணிப்பூர்

C. அசாம்

D. அருணாச்சலப்பிரதேசம்

விடை : **D. அருணாச்சலப்பிரதேசம்**

அருணாச்சலப்பிரதேச மாநிலத்தை சேர்ந்த மலையேற்ற வீரரான **Anshu Jamsenpa, 5** நாட்களுக்குள் எவரெஸ்ட் சிகரத்தை இருமுறை அடைந்து உலக சாதனை படைத்துள்ளார். மே **21 2017** அன்று, இவர் நேபாள மலையேற்ற வீரரான **Furi Sherpa**-வுடன் இணைந்து காலை **8** மணியளவில் எவரெஸ்ட் சிகரத்தினை அடைந்தார். அதற்கு முன்பு மே **16 2017** அன்று ஒருமுறை எவரெஸ்ட் சிகரத்தினை அடைந்தார். இதன் மூலம், எவரெஸ்ட் சிகரத்தினை ஐந்து முறை அடைந்த முதல் இந்தியப்பெண் என்ற பெருமையையும் தனதாக்கியுள்ளார். இதைத்தவிர, மே **20 2017** அன்று இந்திய மலையேற்ற வீரர்களான **Dhankude Kishor Dattatraya & Brij Mohan Sharma** ஆகியோரும் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியினை அடைந்தனர். இந்தியக்கடற்படையிலிருந்து முதன்முதலாக எவரெஸ்டின் உச்சியினை அடைந்தவர், **Breeze Sharma** என பிரபலமாக அறியப்படும் **Brij Mohan Sharma** ஆவார். இதற்கு முன் **2012** மே **12&19** என ஒரு வார காலத்திற்குள் இரண்டுமுறை எவரெஸ்ட் சிகரத்தினை அடைந்தவர் **Chhurim Sherpa** (நேபாள மலையேற்ற வீரர்) ஆவார்.

**2. தைரியம் மற்றும் தியாகத்திற்காக வழங்கப்படும் ஐ. நாவின் Dag Hammarskjold பதக்கத்தினை பெறும், மறைந்த இந்திய அமைதிக் காவலர்கள் யார்?**

A. Shubhkaran Yadav and Rajesh Kumar

B. Manish Malik and Amal Deka

winmeen

C. Brijesh Thapa and Ravi Kumar

D. Maya Ajmera and Gagan Panjab

விடை : C. Brijesh Thapa and Ravi Kumar

தைரியம் மற்றும் தியாகத்திற்காக வழங்கப்படும் ஐ. நாவின் Dag Hammarskjold பதக்கத்தினை பெறும், மறைந்த இந்திய அமைதிக் காவலர்கள் Brijesh Thapa & Ravi Kumar ஆவார்கள். மே 29 2017 அன்று அனுசரிக்கப்படும் சர்வதேச ஐ. நா அமைதிக்காப்பாளர்கள் தினத்தில், இவர்களோடு சேர்த்து 117 இராணுவ வீரர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இவர்களுக்கான விருதுகளை ஐ.நாவின் நிரந்தர பிரதிநிதிகள் பெற்றுக்கொள்வார்வார்கள். தற்போது ஆப்கானிஸ்தான், காங்கோ, லெபனான், லைபீரியா, மத்திய கிழக்குநாடுகள், தெற்கு சூடான், சூடான் மற்றும் மேற்கு சகாரா ஆகிய நாடுகளில், ஐ.நாவின் அமைதிப் படைகளுக்காக 7,600-க்கும் அதிகமான இராணுவ அதிகாரிகளை இந்தியா பணியமர்த்தியுள்ளது.

3. 2017 International Day for Biodiversity (IDB)-க்கான மையக்கருத்து என்ன?

A. Convention on Biological Diversity

B. Biodiversity and Sustainable Tourism

C. Invasive Alien Species

D. Biodiversity and Agriculture

விடை : B. Biodiversity and Sustainable Tourism

ஒவ்வொரு ஆண்டும் மே 22 அன்று பல்வகை உயிரிகளின் மேலான விழிப்புணர்வை அதிகப்படுத்தும் விதமாக, International Day for Biodiversity (IDB) கடைபிடிக்கபடுகிறது. 2017 International Day for Biodiversity (IDB)-க்கான மையக்கருத்து “Biodiversity and Sustainable Tourism” ஆகும். இது பொருளாதார வளர்ச்சிக்கும், பல்லுயிரியலுக்கான பாதுகாப்பு மற்றும் அதன் நிலையான பயன்பாட்டிற்கான விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைகளை அதிகரிக்க ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

**4. எந்த மாநில அரசாங்கம் திறந்தவெளி மலங்கழித்தலை தடுக்கவும், அவற்றை கண்காணிக்கவும் "Good Morning" என்ற கண்காணிப்புப்படையை உருவாக்கியுள்ளது?**

A. மகாராஷ்டிரா

B. உத்திரப்பிரதேசம்

C. மத்தியப்பிரதேசம்

D. ராஜஸ்தான்

விடை : **A. மகாராஷ்டிரா**

மகாராஷ்டிரா அரசு அனைத்து கிராமங்களில் மற்றும் மாவட்டங்களில் திறந்தவெளி மலங்கழித்தலை கட்டுப்படுத்துவதற்காக, **"Good Morning"** என்ற கண்காணிப்பு படையை உருவாக்கியுள்ளது. இந்த குழுக்கள் உள்ளூர் மக்கள், சுய உதவிக்குழுக்கள், NGOக்கள், மாணவர்கள் மற்றும் சுகாதாரத்துறையில் பணிபுரிபவர்கள் ஆகியோரை பிரதிநிதிகளாக கொண்டிருக்கும். இந்தக்குழு குடியிருப்புகளில் கழிவறை உள்ளதா என ஆய்வு செய்யும். மேலும், நிலுவையிலுள்ள கழிவறை கட்டுமானப்பணிகளை மேற்பார்வையிடவும், அவற்றை விரைந்து முடிக்க கட்டளையிடவும் இக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

**5. 2017 ஈரான் ஜனாதிபதி தேர்தலில் வென்றவர் யார்?**

A. Eshaq Jahangiri

B. Ebrahim Raeisi

C. Mostafa Hashemi

D. Hassan Rouhani

விடை : **D. Hassan Rouhani**

ஈரானின் தற்போதைய ஜனாதிபதியான **Hassan Rouhani,** தன்னை எதிர்த்து போட்டியிட்ட **Ebrahim Raeisi-ஐ** பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து இரண்டாவது முறையாக 2017 ஈரான் ஜனாதிபதி தேர்தலிலும் வென்றுள்ளார். இதன் மூலம் முன்னாள் ஈரான்

ஜனாதிபதியான **Mohammad Khatami**-க்குப்பிறகு தொடர்ந்து இரண்டாவது முறையாக ஜனாதிபதியானவர் என்ற பெருமையை இவர் தனதாக்கியுள்ளார். இவர் ஒரு மிதவாத & நடைமுறை அரசியல்வாதியாக கருதப்படுகிறார்.

**6. 2017 Asian Continental Women Blitz சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற இந்திய Squash வீரர் யார்?**

A. Padmini Rout

B. Vinita Gujrathi

C. R Vaishali

D. Soumya Swaminathan

விடை : C. R Vaishali

சீனாவின் **Chengdu**-வில் நடைபெற்ற **2017 Asian Continental Women Blitz** சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில், ஒன்பது சுற்றுகளிலில் 8 புள்ளிகளை பெற்று இந்திய **Squash** வீரர் **R Vaishali** தங்கம் வென்றுள்ளார். இவர் இந்தப்போட்டியில் சிறப்பாக விளையாடி ஏழு போட்டிகளில் வென்றுள்ளார். மேலும், இரண்டு போட்டிகளில் ஒன்பது சுற்றுகளை "டிரா" ஆக்கியுள்ளார். இறுதிப்போட்டியில் மங்கோலியாவின் **Uurt-saikh Uuriin-tuya**-வை வென்று, ஈரானின் **Saras-dat Khademal-sharieh**-வை விட ஒரு புள்ளிகள் அதிகம் பெற்று **R Vaishali** தங்கத்தை வென்றார். இதைத்தவிர சீனாவின் **Yuxin Song**-ஐ ஏழு புள்ளிகள் வித்தியாசத்தில் **Padmini Rout** வென்றுள்ளார்.

**7. 2017 Men's Makati Open Squash போட்டியினை வென்ற இந்திய Squash வீரர் யார்?**

A. Mohd Syafiq Kamal

B. Harinder Pal Sandhu

C. Saurav Ghosal

D. Abhay Singh

விடை : B. Harinder Pal Sandhu

பிலிப்பைன்சின் Makati நகரத்திலுள்ள Manila Polo Club-ல் நடைபெற்ற, 2017 Men's Makati Open Squash இறுதிப்போட்டியில், மலேசியாவைச்சேர்ந்த Mohd Syafiq Kamal-ஐ 11-5, 11-7, 11-7 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்து, இந்திய Squash வீரர் Harinder Pal Sandhu இப்போட்டியினை வென்றுள்ளார். மகளிர் இறுதிப்போட்டியில், ஜப்பானின் Satomi Watanabe, வேல்சின் Deon Saffery-ஐ தோற்கடித்து தனது முதல் வெற்றியை பெற்றுள்ளார்.

**8. 2017 Men's singles Rome Masters tennis போட்டியினை Alexander Zverev வென்றுள்ளார். இவர் எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

A. ஜெர்மனி

B. ருமேனியா

C. உக்ரைன்

D. பிரான்ஸ்

விடை : A. ஜெர்மனி

இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற 2017 Men's singles Rome Masters tennis இறுதிப்போட்டியில், நான்கு முறை சாம்பியன் பட்டம் பெற்ற Novak Djokovic-ஐ 6-3, 6-4 என்ற செட் கணக்கில், ஜெர்மனி வீரர் Alexander Zverev வென்றுள்ளார். இதன் மூலம் Djokovic-க்குப் பிறகு Master's 1000 பட்டத்தினை பெறும் இளம் வீரர் இவராவார். இதையடுத்து, உக்ரைனைச்சேர்ந்த Elina Svitolina, இத்தாலிய ஓபன் டென்னிஸ் பட்டமான "Simona Halep of Romania"-வினை வென்றுள்ளார்.

**9. 2017 World Metrology Day (WMD)-ன் மையக்கருத்து என்ன?**

A. Measurement in commerce

B. Measurement in sport

C. Measurements for transport

D. Measurements and light

விடை : **C. Measurements for transport**

மே 20, 1875-ல் நடந்த மீட்டர் மாநாட்டின் கையொப்பமிடுதலை குறிக்கும் வகையில் உலக அளவியல் தினம் (WMD), ஒவ்வொரு ஆண்டும் மே 20 அன்று அனுசரிக்கப்படுகிறது. இம்மாநாடு, அளவீடு மற்றும் அதன் தொழில்துறை, வர்த்தக மற்றும் சமூக பயன்பாடுகளில் அதன் உலகளாவிய கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது. 2017 World Metrology Day (WMD)-ன் மையக்கருத்து "Measurements for transport" ஆகும்.

**10. 38வது Indian Federation Cup Football tournament-2017-ஐ எந்த கால்பந்து அணி வென்றுள்ளது?**

A. Mohun Bagan

B. Bengaluru FC

C. Churchill Brothers

D. Shillong Lajong

விடை : **B. Bengaluru FC**

ஒடிசாவின் கட்டாக்கிலுள்ள Barabati ஸ்டேடியத்தில் நடைபெற்ற 38வது Indian Federation Cup Football tournament-2017-ஐ, 14 முறை வெற்றிபெற்ற Mohun Bagan அணியை தோற்கடித்து Bengaluru FC அணி வெற்றிகொண்டது. இரு அணிகளும் 90 நிமிடத்தில் வெற்றி பெறாத நிலையில், கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. இதில் Bengaluru FC அணியைச்சேர்ந்த CK Vineeth இரண்டுபுள்ளிகள் அதிகம் பெற்று போட்டியின் வெற்றிக்கு உதவினார். இதன்மூலம் இப்போட்டியினை இரண்டுமுறை Bengaluru FC அணி வென்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம், அடுத்த ஆண்டு Asian Football Confederation (AFC) போட்டியில் Bengaluru FC அணி கலந்துகொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் Bengaluru FC அணி ஒன்றுக்கு மேற்பட்ட Federation கோப்பையை வென்ற 8வது அணி ஆகிறது.

# TNPSC Tamil Current Affairs 23rd May 2017

1. எந்த உயர்மட்டக்குழு சமீபத்தில் மத்திய அரசுக்கு சாரணர் மற்றும் வழிகாட்டிகளுக்கான தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது?

A. **Harsh Malhotra** குழு

B. **Ratan Watal** குழு

C. **Injeti Srinivas** குழு

D. **Abhijit Sen** குழு

விடை : **A. Harsh Malhotra குழு**

**Harsh Malhotra** தலைமையின் கீழ், சாரணர் மற்றும் வழிகாட்டிகள் குழுவினைச்சேர்ந்த ஏழு பேர், இந்த அறிக்கையினை மாநில விளையாட்டுத்துறை அமைச்சரான, விஜய் கோயலிடம் ஒப்படைத்தனர். **Bharat Scout and Guides** மற்றும் **Hindustan Scouts and Guides**-களில் முக்கிய சீரமைப்புகளை மேற்கொள்ளவேண்டுமெனவும், இவ்விரு அமைப்புகளை கண்காணிக்க, நிரந்தர கண்காணிப்புக்குழு அமைக்கவும், இரண்டு அமைப்புகளின் வாரியங்களிலும் அரச பிரதிநிதிகள் இருக்கவேண்டும் எனவும் இக்குழு பரிந்துரைத்துள்ளது. மேலாண்மை மற்றும் நிதி நிர்வாகத்தில் பல முறைகேடுகள் மற்றும் முரண்பாடுகளை இக்குழு கண்டறிந்துள்ளது. **2016-17-ல் Bharat Scout and Guide**-ஆல் நடத்தப்பட்ட **Rashtrapati Puraskar** தேர்வில், கேள்வித்தாள் கசிந்த விவகாரத்தினையும், அது சம்பந்தப்பட்ட புகார்களையும் இக்குழு கூறியுள்ளது.

2. **Asian Voice Charity** விருதுகளில், **2017**-க்கான சர்வதேச மனிதாபிமான விருது, எந்த நடிகைக்கு வழங்கப்பட்டது?

A. தீபிகா படுகோன்

B. ஜாக்குலின் பெர்னாண்டஸ்

C. வித்யா பாலன்

D. ஜூஹி சாவ்லா

விடை : **B. ஜாக்குலின் பெர்னாண்டஸ்**

உலகளாவிய தனது தொண்டிற்காக, **Asian Voice Charity** விருதுகளில், **2017-**க்கான சர்வதேச மனிதாபிமான விருது, இந்தி நடிகை ஜாக்குலின் பெர்னாண்டசுக்கு **"Editor's Choice"** பிரிவில் வழங்கப்பட்டது. இவர் கடந்த ஐந்து ஆண்டுகளாக **"Habitat for Humanity"** என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றிவருகிறார். இவ்வமைப்பானது, மக்களுக்கு வீடுகளை வழங்கி அவர்களை கௌரவத்துடன் வாழ வழிசெய்கிறது.

**3. 2017 Global Rajasthan Agritech Meet (GRAM)-ஐ** எந்த நகரம் நடத்துகிறது?

**A.** ஜெய்ப்பூர்
**B.** உதய்பூர்
**C.** கோட்டா
**D.** அஜ்மீர்

விடை : **C.** கோட்டா

**2017** மே **24** அன்று ராஜஸ்தானின் கோட்டாவில், **2017 Global Rajasthan Agritech Meet (GRAM)** நடைபெறுகிறது. இது நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் அவர்களை முன்னேறச் செய்கிறது. **2017 GRAM** கோட்டாவில், மலேசியா பங்குதாரராகவுள்ளது. விவசாய பண்ணைகள் தங்களை தாங்களே விளம்பரப்படுத்திக்கொள்ள மற்றும் / அல்லது விளம்பரதாரர்களைக்கண்டறிய **GRAM** ஒரு நல்ல தளமாக விளங்குகிறது. இம்மூன்று நாள் நிகழ்வில், கோட்டா மற்றும் அதனைச்சுற்றியுள்ள கல்வியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், விவசாய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விவசாய முன்னேற்றத்திற்கான புதுமையான முறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை அறிந்துகொள்வர்.

**4. African Development** வங்கிக் **(AFDB)** குழுவின் **2018-**ம் ஆண்டு மாநாட்டினை எந்த நாடு நடத்துகிறது?

**A.** சீனா
**B.** இலங்கை

C. இந்தியா

D. தென் கொரியா

விடை : D. தென் கொரியா

சமீபத்தில், இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியால், குஜராத்தின் காந்திநகரிலுள்ள மகாத்மா மந்திரில் மே 22 முதல் 26 வரை நடைபெறும், African Development வங்கி(AFDB)-யின் 52வது வருடாந்திர கூட்டம் "Transforming Agriculture for Wealth Creation in Africa" எனும் மையக்கருத்துடன் தொடங்கிவைக்கப்பட்டது. இந்தியாவில் முதன்முதலாக நடைபெறும் இந்த AFDB கூட்டத்தில், ஆளுநர்கள், துணை ஆளுநர்கள், நிர்வாக இயக்குநர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் உள்ளிட்ட 3000-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் 81 உலக நாடுகளிலிருந்து கலந்துகொள்கின்றனர். 2018-ம் ஆண்டுக்கான AFDB கூட்டம் தென்கொரியாவின் புசன் நகரில் நடைபெறுகிறது.

5. எந்த இந்திய கேலிச்சித்திரக்கலைஞர், 2017 World Wide Fund for Nature (WWF) International President's விருதினை வென்றுள்ளார்?

A. Rohan Chakravarty

B. Sudhir Dar

C. O V Puthukkody

D. Satish Acharya

விடை : A. Rohan Chakravarty

இளைஞர்களை இயற்கையை நோக்கி பயணிக்கச்செய்த இவரின் முயற்சிக்காகவும், அணுகுமுறைக்காகவும், 2017 World Wide Fund for Nature (WWF) International President's விருதினை இந்தோனேசியாவின் மனோடோவில் பெற்றார். உலகெங்கிலுமுள்ள இயற்கை ஆர்வலர்களை அங்கீகரிப்பதற்கான சிறந்த விருது இது. 30 வயதிற்குட்பட்ட இளைஞர்களின், இயற்கை பாதுகாப்புக்கான அவர்களின் பங்களிப்புகளை அங்கீகரித்து இவ்விருது வழங்கப்படுகிடுகிறது.

**6. 2017 ஐஸ் ஹாக்கி உலக சாம்பியன்ஷிப்பை வென்ற நாடு எது?**

A. கனடா

B. சுவீடன்

C. இரஷ்யா

D. பின்லாந்து

**விடை : B. சுவீடன்**

2017 ஐஸ் ஹாக்கி உலக சாம்பியன்ஷிப்பை சுவீடன் நாடு வென்றுள்ளது. இவ்வெற்றியின் மூலம், சுவீடன் அதன் 10வது ஐஸ் ஹாக்கி உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை தனதாக்கியுள்ளது. 2017- க்கான போட்டியினை மே 5 முதல் 21 வரை பாரிஸ், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகிறது. இப்போட்டிகளின் அதிகாரப்பூர்வ சின்னங்களாக, பிரபல பிரெஞ்சு காமிக் புத்தகத்தொடர் ("The Adventures of Asterix")-ன் கதாப்பாத்திரங்களான Asterix & Obelix அறிவிக்கப்பட்டுள்ளன.

**7. The World Cultural Diversity for Dialogue and Development Day எந்த தேதியில் கடைபிடிக்கப்படுகிறது?**

A. மே 22

B. மே 21

C. மே 23

D. மே 24

**விடை : B. மே 21**

பல்வேறு கலாச்சாரங்களுக்கிடையிலான இடைவெளியை இணைக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மே 21 அன்று உலக Cultural Diversity for Dialogue and Development நாள் கடைபிடிக்கப்படுகிறது. இது கலாச்சார பன்முகத்தன்மையின் மதிப்பை புரிந்துகொள்ளவும் மற்றும் எப்படி ஒன்றிணைந்து வாழவேண்டுமென்பதை கற்றுக்கொள்ள உதவுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் உள்ளது. 2001-ம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் பமீனிலுள்ள புத்தர் சிலைகளை அழித்ததன் விளைவாக இந்த நாள்

உருவாக்கப்பட்டது. இதன் 2017-க்கான மையக்கருத்து **“Local Culture as a Driver for Economic Growth”** ஆகும்.

**8. ‘Toyota Sunny’** என பிரபலமாக அறியப்படும் **Mattuhunny Mathews,** சமீபத்தில் காலமானார். இவர் எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. இந்தியா

B. பிரான்ஸ்

C. ஜெர்மனி

D. US

விடை : A. இந்தியா

**‘Toyota Sunny’** என பிரபலமாக அறியப்படும் **Mattuhunny Mathews,** சமீபத்தில் **2017** மே **20** அன்று, குவைத்திலுள்ள **Qadisiya**வில் காலமானார். இவரின் இறுதிச்சடங்குகள் கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் எரவிபேரூரிலுள்ள அவரது சொந்தவூரான பொடிப்பாராவில் நடைபெற்றது. **1990**-களில் சதாம் உசைனின் ஈராக் படைகள் குவைத்தில் நுழைந்த பிறகு, அங்கிருந்த **1.7** லட்சம் இந்தியக்குடிமக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதில், குவைத்தில் குடியேறிய ஒரு இந்தியராக இவர் பெரும்பங்காற்றினார். இந்திய கலைக்குழுவின் நிறுவனர்களில் இவருமொருவர். **Akshay Kumar**-ஐ வைத்து **Ranjit Katyal**-ஆல் இயக்கப்பட்ட **‘Airlift’** படத்திற்கு இவரின் கதையே ஊக்கமாக இருந்தது.

**9. International Stainless Steel Forum (ISSF) 2017** வெளியிட்ட தரவுப்படி, **2016**ம் ஆண்டுக்கான உலகின் மிகப்பெரிய துருப்பிடிக்காத எஃகு தயாரிப்பாளர் யார்?

A. இந்தியா

B. ஜப்பான்

C. அமெரிக்கா

D. சீனா

விடை : D. சீனா

2017 மே 14 முதல் 19 வரை ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற, வருடாந்திர மாநாட்டில், International Stainless Steel Forum (ISSF) 2017 வெளியிட்ட தரவுப்படி, 2016ம் ஆண்டுக்கான உலகின் மிகப்பெரிய துருப்பிடிக்காத எஃகு தயாரிப்பாளராக சீனாவுள்ளது. 2016-ம் ஆண்டில் இந்தியா இரண்டாவது மிகப்பெரிய தயாரிப்பாளராகி ஜப்பானை பின்னுக்குத்தள்ளியுள்ளது. ISSF என்பது 1996-ல் நிறுவப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனமாகும், இது சர்வதேச எஃகு தொழிற்துறையின் மையப்புள்ளியாக விளங்குகிறது.2016-ல் இந்தியாவின் எஃகு உற்பத்தி 3.32 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது, இது 2015-ம் ஆண்டில் உற்பத்தி செய்த 3 மில்லியன் டன்னைவிட 9% அதிகமாகும்.

10. Ghughua தொல்பொருள் தேசியப்பூங்கா எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. இமாச்சல பிரதேசம்
B. உத்திரப்பிரதேசம்
C. மத்தியப்பிரதேசம்
D. ராஜஸ்தான்

விடை : C. மத்தியப்பிரதேசம்

Ghughua தொல்பொருள் தேசியப்பூங்கா மத்தியப்பிரதேசத்திலுள்ள சாபுராவிற்கு அருகே அமைந்துள்ளது. இங்கே 31 இனங்களிலுள்ள 18 குடும்பங்களைச்சேர்ந்த தாவர புதைபடிவங்கள் காணப்படுகின்றன. இவை 65 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாகும். மண்டல் மாவட்டத்தின் புள்ளிவிவர அதிகாரி மற்றும் மாவட்ட தொல்பொருள் துறையின் கௌரவ செயலாளரான டாக்டர் தர்மேந்திர பிரசாத் அவர்களால் 1970-ல் இந்தப்பூங்கா நிறுவப்பட்டது.

## TNPSC Tamil Current Affairs 24th May 2017

**1. நேபாளத்தின் புதிய பிரதமர் யார்?**

**A. Sher Bahadur Deuba**

**B. Girija Prasad Koirala**

**C. Bidhya Devi Bhandari**

**D. Sushil Koirala**

விடை : **A. Sher Bahadur Deuba**

**"Prachanda"** என அறியப்படும் **Pushpa Kamal Dahal-ன்** பதவி விலகலுக்குப்பிறகு, நேபாளத்தின் புதிய பிரதமராக நேபாள காங்கிரசின் தலைவர் **Sher Bahadur Deuba** அவர்கள் பதவியேற்றுள்ளார். **Deuba-வின்** ஆதரவில் **Pushpa Kamal Dahal** பிரதமராக இருந்த காலமான **2016ம்** ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கையெழுத்தான ஒப்பந்தத்தை கௌரவிக்கும் விதமாக இந்த ராஜினாமா செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, **Deuba** பிரதமர் என்கிற முறையில், அவரின் தலைமையின் கீழ் மத்திய தேர்தல்கள் மற்றும் உள்ளூர் தேர்தல்கள் நடைபெறும் வரையில் **Pushpa Kamal Dahal** பதவியிலிருப்பார். **2016** ஆகஸ்ட் **3** அன்று நேபாள காங்கிரசுடன் கூட்டணி வைத்து, நேபாளத்தின் **39**வது பிரதமராக இவர் **(Deuba)** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**2. National Commission for Minorities (NCM)-ன் புதிய தலைவர் யார்?**

**A. George Kurian**

**B. Gayarul Hasan**

**C. Sulekha Kumbhare**

**D. Athornan Anjuman**

விடை : **B. Gayarul Hasan**

சமீபத்தில் மத்திய அரசு, சிறுபான்மை குழுவில் தலைவருடன் சேர்த்து **7** உறுப்பினர்களை நியமனம் செய்தது. உத்தரப்பிரதேசத்தைச்சேர்ந்த சமூக ஆர்வலரான **Gayarul Hasan, National Commission for Minorities (NCM)-ன்** புதிய

தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கேரள BJP தலைவரும், ஆர்வலருமான George Kurian, மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் அமைச்சரான Sulekha Kumbhare, சமணப்பிரதிநிதிகளான குஜராத்தைச்சேர்ந்த Sunil Singhi & Vada Dasturji Khurshed, முதன்மை மதபோதகர் Udvada Athornan Anjuman ஆகியோர் இக்குழுவின் மற்ற உறுப்பினர்களாவர். சனவரி 2014-ல் "சிறுபான்மை" என குறிப்பிட்டப்பிறகு சமண உறுப்பினர்கள் இக்குழுவின் ஒரு பகுதியாக இருப்பது, இதுவே முதல் முறையாகும். இக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் (நீட்டிக்கப்படாவிட்டால்) மூன்றாண்டுகள் ஆகும். இது இசுலாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் மற்றும் பார்சிகள் என ஐந்து மத சமுதாயங்களின் உறுப்பினர்களிடமிருந்து வரும் புகார்களைப்பெற 1992-ம் ஆண்டு National Commission for Minorities(NCM) சட்டத்தின்படி அமைக்கப்பட்டது.இக்குழு, தலைவர் & துணைத்தலைவருட்பட ஏழு உறுப்பினர்களைக்கொண்டிருக்கும்.

3. உலக கடலாமைகள் தினம் எந்தத்தேதியில் கடைபிடிக்கப்படுகிறது?

A. மே 23

B. மே 24

C. மே 25

D. மே 26

விடை : A. மே 23

ஆமை மற்றும் கடலாமைகளின் பாதுகாப்பு மற்றும் சட்டவிரோத கடத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மே 23 அன்று உலக கடலாமைகள் தினம் (World Turtle Day(WTD)) கடைபிடிக்கப்படுகிறது. இந்தியாவில் ஆமைகள் மற்றும் கடலாமைகள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தல்களில் ஒன்று கிழக்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் சந்தைகளுக்கு கடத்தப்படுவதாகும். வங்காள விரிகுடாவைத்தாண்டியிருக்கும் தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள மக்கள் நன்னீர் கடலாமைகள் மற்றும் ஆமைகளை உண்கின்றனர்.

**4. "Confessions of a dying mind: the blind faith of atheism" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?**

**A. Albert Dyers**

**B. David Syiemlieth**

**C. Kiren Rijiju**

**D. Haulianlal Guite**

விடை : **D. Haulianlal Guite**

புதுடில்லியிலுள்ள **Civil Services Officers' Institute-ல்** நடைபெற்ற ஆகஸ்ட் கூட்டத்தில், **IAS** அதிகாரி **Haulianlal Guite** எழுதிய **"Confessions of a dying mind: the blind faith of atheism"** என்ற புத்தகத்தினை மத்திய அமைச்சர் **Kiren Rijiju** வெளியிட்டார். இந்நூல் "கடவுளுக்கான உலகின் முதல் தத்துவ நாவல்" என்று கூறப்படுகிறது. **1858-ல்** ஜான் ஸ்டுவர்ட் மில்லுக்குப்பிறகு, தத்துவங்களை எழுதும் முதல் இந்திய ஆட்சிப்பணி அதிகாரி இவரே. இப்புத்தகம் விஞ்ஞானம், மதம் ஆகியவற்றின் சான்றுகளின் தன்மையை ஆராய்கிறது. இந்நூல் நாத்திகத்திற்கெதிரான சில தத்துவார்த்தங்களை சுவாரஸ்யமான விவாதங்களாக வழங்குகிறது.

**5. மகிழ்ச்சிக்குறியீட்டை அளவிடுவதற்காக மத்தியப்பிரதேசத்துடன் இணைந்து எந்த IIT நிறுவனம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

**A. IIT** கரக்பூர்

**B. IIT** பாம்பே

**C. IIT** சென்னை

**D. IIT** இண்டூர்

விடை : **A. IIT கரக்பூர்**

மத்தியப்பிரதேச மக்களின் நலன்களை அளவிட மகிழ்ச்சிக்குறியீட்டின் வளர்ச்சிக்காக மகிழ்ச்சி அறிவியல் கழகத்துடன் இணைந்து, **IIT** கரக்பூர் ரெஹி மையத்துடன் மத்தியப்பிரதேச அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மகிழ்ச்சிக்குறியீட்டை **IIT-KGP** உருவாக்கியுள்ளது,

மாநில அரசால் சேகரிக்கப்பட்ட தரவினை பயன்படுத்தி மாநில மக்களின் மகிழ்ச்சியை அளவிடுதல் மற்றும் மகிழ்ச்சியினளவை அதிகரிக்க யோசனைகள் பரிந்துரைக்கப்படும். ஒவ்வொருவரிடமும் இதற்கான கருத்துக்கணிப்பு நடத்தப்படும். சனவரி 2018 முதல் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும், மேலும் இதன் முடிவுகள், அம்மாநிலத்தின் 2018 சட்டசபை தேர்தலின்போது வெளியிடப்படும்.

**6. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், எந்த நகரத்தில் முதன்முதலாக "Ozone2Climate technology roadshow" நடத்த ஏற்பாடு செய்துள்ளது?**

A. கொல்கத்தா

B. ஆக்ரா

C. போபால்

D. ஜெய்பூர்

விடை : B. ஆக்ரா

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், ஐ.நா வின் Environment OzonAction's Compliance Assistance திட்டத்துடன் இணைந்து, முதன்முதலாக "Ozone2Climate technology roadshow" நடத்த ஏற்பாடு செய்துள்ளது. மே 23-26 வரை நடைபெறவுள்ள தெற்காசிய ஓசோன் அதிகாரிகளின் வருடாந்திர கூட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த தொழில்நுட்ப சாலை முறை கண்காட்சி முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் 20 நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். இதன் நோக்கம் HFCக்களுக்கு எதிரான மற்றும் ஓசோனுக்கு சாதகமான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை வலியுறுத்துவதாகும்.

**7. 2017 CEAT International Cricketer of the Year விருதினை வென்றவர் யார்?**

A. விராட் கோலி

B. மகேந்திர சிங் தோனி

C. ரவிச்சந்திரன் அஸ்வின்

D. அஜிங்யா ரகானே

விடை : C. ரவிச்சந்திரன் அஸ்வின்

மும்பையிலுள்ள Cricket Club of India (CCI)-ல் நடைபெற்ற 2017-ம் ஆண்டு CEAT கிரிக்கெட் தரவரிசைக்கான (CCRC) சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில், International Cricketer of the Year விருதினை ரவிச்சந்திரன் அஸ்வின் வென்றுள்ளார். இவர் கடந்த 12 மாதங்களில் 99 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதற்கிடையே, இளம் கிரிக்கெட் வீரர் Shubhman Gill, மும்பையில் நடைபெற்ற இந்தியா-இங்கிலாந்துக்கு இடையேயான U-19 ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடியதற்காக இளம் வீரருக்கான விருதை வென்றுள்ளார்.

8. ஜேம்ஸ் பாண்ட் திரைப்படங்களில் நடித்து புகழ்பெற்ற Roger Moore, சமீபத்தில் காலமானார். இவர் எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. பிரான்ஸ்

B. ஜெர்மனி

C. ஜப்பான்

D. UK

விடை : D. UK

ஜேம்ஸ் பாண்ட் திரைப்படங்களில் நடித்து புகழ்பெற்ற Roger Moore(89), புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சமீபத்தில், சுவிச்சர்லாந்தில் காலமானார். "Live and Let Die" & "The Spy Who Loved Me" படங்களில் ஜேம்ஸ் பாண்ட் வேடத்தில் நடித்து புகழ்பெற்றார். 1973 முதல் 1985 வரையேயுள்ள காலங்களில், ஏழு திரைப்படங்களில் பிரபல உளவாளி கதாபாத்திரத்தில் நடித்த ஒரே நடிகர் இவரே.

9. உலக சுகாதார அமைப்பு(WHO)-வின் புதிய பொது இயக்குனராக Dr. Tedros Adhanom Ghebreyesus தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. Ghana

B. Comoros

C. Nauru

D. Ethiopia

விடை : D. Ethiopia

எத்தியோப்பியாவைச்சேர்ந்த Dr. Tedros Adhanom Ghebreyesus, உலக சுகாதார அமைப்பின் புதிய பொது இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 186 உறுப்பு நாடுகளின் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று, ஐ.நா. நிறுவனத்தை தலைமைத்தாங்கும் முதல் ஆப்பிரிக்கர் இவராவார். இவருக்குமுன் இப்பதவியினை Dr. Margaret Chan பத்தாண்டுகளாக வகித்துவந்தார்.

10. The Sonai Rupai வனவிலங்கு சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. அசாம்

B. அருணாச்சலப்பிரதேசம்

C. மிசோரம்

D. மணிப்பூர்

விடை : A. அசாம்

The Sonai Rupai வனவிலங்கு சரணாலயம் 175 சதுர கிமீ பரப்பளவில், அசாமில் அமைந்துள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இது இமயமலைத்தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. 1998-ல் இப்பகுதி சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. இச்சரணாலயம் தேஜ்பூர் நகரிலிருந்து 52 கி.மீ., தொலைவிலும், கவுஹாத்தியிலிருந்து 193 கி.மீ., தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு புலி, பூனை, யானை, காட்டுப்பன்றி, பன்றி, மற்றும் குரைக்கும் மான் ஆகிய பாலூட்டிகள் உள்ளன.

# TNPSC Tamil Current Affairs 25th May 2017

**1. ஓரின திருமணங்களை அங்கீகரிக்கும் முதல் ஆசிய நாடு எது?**

A. தைவான்

B. லெபனான்

C. திமோர்-லெஸ்டே (Timor-Leste)

D. ஜோர்டான்

விடை : A. தைவான்

அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு, சட்டப்பூர்வமாக ஓரின திருமணங்களை அங்கீகரிக்கும் முதல் ஆசிய நாடு தைவான் ஆகும். இப்புதிய சட்டத்திருத்தத்தினை இயற்ற, நீதிபதி குழு இரண்டாண்டுகள் அவகாசத்தை கொடுத்துள்ளனர். இதன்மூலம் ஆசியாவில் முதன்முதலில் ஓரின திருமணத்தை அனுமதிக்கும் நாடாக தைவான் உள்ளது. ஆப்பிரிக்காவிலேயே ஓரின திருமணத்தை அனுமதிக்கும் ஒரே நாடு தென்னாப்பிரிக்கா மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

**2. International Solar Alliance (ISA) கட்டமைப்பை சமீபத்தில் கொண்டுள்ள நாடு எது?**

A. ஜிம்பாப்வே

B. நௌரு (Nauru)

C. வனுாட்டு (Vanuatu)

D. உகாண்டா

விடை : B. நௌரு (Nauru)

2015-ம் ஆண்டு பாரிசில் நடந்த காலநிலை மாற்றத்திற்கான உச்சி மாநாட்டில், இந்தியா மற்றும் பிரெஞ்சு அரசாங்கங்களால் தொடங்கப்பட்ட International Solar Alliance (ISA) கட்டமைப்பின் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் ஆறாவது நாடாக உலகின் மிகச்சிறிய குடியரசான நௌரு (Nauru) உள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்கள் தங்களின் வளர்ச்சி

இலக்குகளுக்காக சுற்றுச்சூழலை பாதிக்காதவண்ணம் ஆற்றலை உருவாக்கவேண்டும் என்ற அவற்றின் எண்ணமே, ISA கட்டமைப்பின் வளர்ச்சிக்கு உந்துதலாகும். ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கியின் (AFDB) வருடாந்திர கூட்டத்தில், Comoros, Cote d'Ivoire, Somalia, Ghana மற்றும் Djibouti ஆகிய ஐந்து ஆப்பிரிக்க நாடுகள் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. வாடிகன் நகரம் & மொனாக்கோவுக்குப்பிறகு உலகின் மிகச்சிறிய பரப்பளவு கொண்ட மாநிலம், தென் பசிபிக்கின் மிகச்சிறிய தீவான நௌரு (Nauru) ஆகும்.

3. எந்த நதியின் கீழ், இந்தியாவின் முதல் நீருக்கடியில் இரயில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது?

A. காவிரி ஆறு

B. கோதாவரி ஆறு

C. ஹூக்ளி ஆறு

D. கிருஷ்ணா ஆறு

விடை : C. ஹூக்ளி ஆறு

ஔரா மற்றும் கொல்கத்தாவிற்கிடையே மெட்ரோ வழித்தட அமைப்பை நிறுவுவதற்காக, இந்தியாவின் முதல் நீருக்கடியில் இரயில் சுரங்கப்பாதை, அதன் திட்டமிடப்பட்ட தேதியான சூலை 2017-க்கு முன்பே நிறைவடைந்துள்ளது. இந்த வழித்தடம் 16.6 கி.மீ., நீளம் கொண்டது. இதில் 10.8 கி.மீ., சுரங்கப்பாதையாகும். இந்த 10.8 கி.மீ.,-ல் 502 மீ முழுக்க முழுக்க நீருக்கடியில் அமைந்துள்ளது. இது மேற்கில் ஔராவையும், கிழக்கில் உப்பு ஏரியையும் இணைக்கிறது. இது 12 நிலையங்களைக்கொண்டிருக்கிறது, அதில் ஆறு நிலத்தடியில் அமைந்துள்ளது. முழு திட்டத்தின் மதிப்பீடும் $750 மில்லியன் டாலர் அல்லது ரூ. 5000 கோடியாகும். இறுதி சோதனைக்குப்பிறகு, டிசம்பர் 2019-ல் இது பயன்பாட்டுக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத்திட்டம் Afcons Transtonnelstroy & Kolkata Metro Railway Corporation Ltd (KMRCL) ஆகியவற்றால் இணைந்து செயல்படுத்தப்பட்டது.

**4. உலக சுகாதார சபை (World Health Assembly 70)-ன் 70வது கூட்டம் எந்த நகரத்தில் நடைபெறவுள்ளது?**

A. பிரசல்ஸ்

B. புது டில்லி

C. பாரிஸ்

D. ஜெனிவா

விடை : D. ஜெனிவா

2017 மே 22-31 வரை, சுவிச்சர்லாந்தின் ஜெனிவாவில், உலக சுகாதார சபை (World Health Assembly 70)-ன் 70வது கூட்டம் நடைபெறவுள்ளது. இதில், எத்தியோப்பியாவைச்சேர்ந்த Dr. Tedros Adhanom Ghebreyesus, உலக சுகாதார அமைப்பின் புதிய பொது இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குமுன் இப்பதவியினை Dr. Margaret Chan பத்தாண்டுகளாக வகித்துவந்தார். வரும் 2017 சூலை 1 முதல், இவர் (Dr. Tedros) அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இப்பதவியிலிருப்பார். இந்தியாவின் சார்பாக, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் JP Nadda இந்த கருத்தரங்கில் 'Advancing the 2030 Agenda for Sustainable Development: building better systems for health' என்ற தலைப்பில் உரையாற்றினார். WHA என்பது அதன் 194 உறுப்பு நாடுகளில் WHO-வினால் நிர்வகிக்கப்படுகிறது. இது உலகின் மிகவுயர்ந்த சுகாதாரக்கொள்கை அமைப்பாகும். இது மாநிலங்களின் சுகாதார அமைச்சர்களை உறுப்பினர்களாக கொண்டுள்ளது.

**5. உலகின் முதல் செயல்பாட்டு ரோபோ காவல் அதிகாரியான "RoboCop"-ஐ, எந்த நாட்டின் காவல்துறை, அதிகாரப்பூர்வமாக பணியமர்த்தியுள்ளது?**

A. UAE

B. இஸ்ரேல்

C. ஜப்பான்

D. ஜெர்மனி

விடை : A. UAE

2017 மே 21 அன்று UAE, துபாயில் நடைபெற்ற 4வது வளைகுடா தகவல் பாதுகாப்பு கண்காட்சி மற்றும் மாநாட்டில் (GISEC), உலகின் முதல் செயல்பாட்டு ரோபோ காவல் அதிகாரியான "RoboCop", துபாய் காவல்துறையில் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டது. இது 5 அடி உயரமும், 100 கிலோ எடையும் கொண்டது. இது 1.5 மீட்டர் தூரத்திலிருந்து கை சைகைகளை அடையாளம் காணுவது மட்டுமல்லாமல், மக்களின் உணர்வுகளையும் முகபாவங்களையுங்கூட கண்டறியும் திறன் படைத்தது. இது நகரிலுள்ள வணிக வளாகங்கள் மற்றும் சுற்றுலாத்தலங்களில் ரோந்துப்பணி செய்வதற்காக பயன்படுத்தப்படும். மக்கள் இதனை குற்றங்களை புகாரளிப்பதற்கும், அபராதத்தொகையை செலுத்துவதற்கும், அதன் மார்பிலுள்ள தொடுதிரை மூலம் தகவலைப்பெறவும் பயன்படுத்த முடியும். இது மக்களுடன் ஆங்கிலத்தில் அல்லது அரபியில் உரையாடுவது மட்டுமல்லாது, கைகுலுக்கும், மேலும் இராணுவ வணக்கத்தையும் தெரிவிக்கும். விரைவில் இதில் ரஷ்ய, சீன, பிரெஞ்சு மற்றும் ஸ்பானிஷ் மொழிகளைச்சேர்க்கும் திட்டங்களும் உள்ளன.

6. தேசிய நீர்வழிகள் (National Waterways) அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்காக மத்திய சாலை நிதியிலிருந்து (Central Road Fund) எவ்வளவு சதவீதத்தை வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

A. 3.5%

B. 2.5%

C. 4.5%

D. 5.5%

விடை : B. 2.5%

தேசிய நீர்வழிகள் (National Waterways) அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்காக மத்திய சாலை நிதியிலிருந்து (Central Road Fund) 2.5% வழங்க, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்தினை அதிகரிக்க ஆண்டொன்றுக்கு 2000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். மேலும், இதன் மூலம் பொருளாதாரம் மேம்படுமெனவும், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் துறையில்

வேலைவாய்ப்பு அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் 1.8 இலட்சம் பேருக்கு, உள்நாட்டு நீர்வழி போக்குவரத்துத் துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. வழிநடத்தல், முனையங்கள், மேலாண்மை போன்ற துறைகளில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம், செயல்பாட்டில் ஐந்து தேசிய நீர்வழித்தடங்களும், புதிதாக 106 தேசிய நீர்வழித்தடங்களும் உள்ளன. **Central Road Fund** என்பது பெட்ரோலியம் மற்றும் அதிவேக டீசல் மீதான சுங்கவரி விதிப்பாகும்.

**7. Ecuador-ன் புதிய ஜனாதிபதி யார்?**

**A. Guillermo Lasso**

**B. Rafael Correa**

**C. Jorge Glas**

**D. Lenin Moreno**

விடை : **D. Lenin Moreno**

சமீபத்தில் தனது போட்டியாளரும் முன்னாள் வங்கியாளருமான **Guillermo Lasso**-வை 2.3% வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்த பிறகு, **Ecuador**-ன் புதிய ஜனாதிபதியாக **Lenin Moreno** பதவியேற்றார். 2007 முதல் 2013 வரை **Rafael Correa** ஜனாதிபதியாக இருந்தபோது, இவர் துணை ஜனாதிபதியாக பணியாற்றினார். **Ecuador**-ன் முதல் மாற்றுத்திறன் கொண்ட ஜனாதிபதி இவரே. 1998-ம் ஆண்டில் நடந்த ஒரு கொள்ளைச்சம்பவத்தின் போது துப்பாக்கிச்சூட்டில் அவரது கால்கள் செயலிழந்தன. இவர் **Correa** அரசாங்கத்தின் மாற்றுத்திறனாளிகள் உரிமை கழகத்தின் துணை தலைவராகவும் இருந்துள்ளார். இது 2012 நோபல் அமைதிப்பரிசுக்கான பரிந்துரை வரை அவரை அழைத்துச்சென்றது.

**8. 2017 North Atlantic Treaty Organization (NATO)-ன் உச்சிமாநாட்டை எந்த நாடு நடத்துகிறது?**

A. ருமேனியா

B. பெல்ஜியம்

C. இத்தாலி
D. லட்வியா

விடை : B. பெல்ஜியம்

2017 மே 24 & 25 அன்று பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரில், 2017 North Atlantic Treaty Organization (NATO)-ன் 28வது உச்சிமாநாடு, பயங்கரவாத எதிர்ப்பினை தலைப்பாகக்கொண்டு தொடங்கியது. இசுலாமிய பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவதற்காக, அமெரிக்கா தலைமையிலான இசுலாமிய அரசுக்கூட்டணி (Islamic State coalition(IS))-ல் NATO இணையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2018 நேட்டோ உச்சிமாநாடு துருக்கியின், இசுதான்புலில் நடைபெறும்.

9. BWF Athelete ஆணையத்தின் புதிய உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய விளையாட்டு வீரர் யார்?

A. Jwala Gutta

B. Ashwini Ponnappa

C. P V Sindhu

D. Aparna Popat

விடை : C. P V Sindhu

ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற P V சிந்து, 129 வாக்குகளைப்பெற்று Badminton World Federation (BWF) தடகள ஆணையத்தின் புதிய உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். Saina Nehwal-க்குப்பிறகு இவ்வானையத்தில் உறுப்பினராகும் இரண்டாவது இந்தியர் இவராவார். இவர்களைத்தவிர ஸ்காட்லாந்தைச்சேர்ந்த Kirsty Gilmour, லித்துவேனியாவைச்சேர்ந்த Akvile & ஜெர்மனியை சேர்ந்த Marc Zwiebler ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

10. மாணவர்களுக்கான ஆன்லைன் ஆவணங்கள் சரிபார்ப்பிற்காக, எந்த இணையதளத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது?

A. e-Verification

B. e-Sanad

C. e-Students

D. e-Certificates

விடை : B. e-Sanad

அயல்நாட்டில் படிக்கும் மாணவர்களின் ஆவணங்கள் சரிபார்ப்பினை எளிதாக்குவதற்காக, e-Sanad இணையதளத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. வெளிவிவகார அமைச்சகம் மற்றும் மேலிரண்டு அமைச்சகங்கள் இணைந்து, மத்திய கல்வி வாரியத்தின் (CBSE) துணையோடு, முதற்கட்டமாக பள்ளிச்சான்றிதழ்களை பதிவேற்றும் முயற்சிகளை செய்துவருகிறது. அடுத்தகட்டமாக, மத்திய பல்கலைக்கழகங்களிலிருந்து ஆவணங்களை பதிவேற்றும் முயற்சிகள் தொடரும்.

## TNPSC Tamil Current Affairs 26th May 2017

**1. International Fertilizer Association (IFA)-ன் புதிய தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?**

A. Kaustubh Shah

B. Naoki Tajima

C. Rakesh Kapoor

D. Vinodh Bhat

விடை : C. Rakesh Kapoor

2017-ம் ஆண்டுக்கான IFA-ன் வருடாந்திர கூட்டம் மொராக்கோவிலுள்ள Marrakech-ல் நடைபெற்றது. இதில் Indian Farmers Fertilizer Cooperative Limited (IFFCO)-ன் மேலாண்மை இயக்குநரான Rakesh Kapoor IFA-வின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரே Fertilizer Association of India (FAI)-ன் தலைவருமாவார். இதன்மூலம், Rakesh Kapoor IFA-ன் 90 ஆண்டுகால வரலாற்றில், இந்த மதிப்புமிக்க பதவியினை வகிக்கும் மூன்றாவது இந்தியராகிறார். பாரிசை தலைமையாகக்கொண்டு இயங்கும் IFA-வில், இந்தியாவைச்சேர்ந்த 24 உறுப்பினர்கள் உட்பட 68 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 500 உறுப்பினர்கள் உள்ளனர்.

**2. எந்த இந்திய மாநிலம் 2017 Asian Junior Tennis Championship போட்டியை நடத்தவுள்ளது?**

A. பஞ்சாப்

B. மேற்கு வங்கம்

C. கேரளா

D. மகாராஷ்டிரா

விடை : D. மகாராஷ்டிரா

2017 Asian Junior Tennis Championship போட்டியை மகாராஷ்டிராவின் புனேவிலுள்ள Shree Shiv Chatrapati விளையாட்டு அரங்கில் மே 29 முதல் HCL நிறுவனம் நடத்துகிறது. 18 வயதுக்குட்பட்டோர் டென்னிஸ் போட்டிகளில்

ஆசியாவிலேயே மிகவும் பிரபலமான போட்டி இதுவாகும். இந்த சாம்பியன்ஷிப் போட்டியானது மகாராஷ்டிரா மாநில Lawn Tennis Association; International Tennis Federation (ITF); Asian Tennis Federation (ATF); & All India Tennis Association (AITA) தலைமையின் கீழ் நடக்கிறது. இது இந்தியாவின் ஒரே B1 பிரிவு சாம்பியன்ஷிப் போட்டியாகும். இதில் தாய்லாந்து, தைவான், ஜப்பான், தென் கொரியா, பிலிப்பைன்ஸ், ஹாங்காங், மலேசியா, சீனா, இலங்கை, ஈரான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. இந்த 6 நாள் சாம்பியன்ஷிப் போட்டியில், ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் 100-க்கும் அதிகமான இந்திய மற்றும் சர்வதேச வீரர்கள் பங்கேற்பார்கள்.

**3. இந்தியாவின் மிக நீளமான "Dhola-Sadia" பாலம், பிரம்மபுத்ரா நதியின் எந்த கிளை நதிமீது கட்டப்பட்டுள்ளது?**

A. Kameng (கமெங்) நதி
B. Lohit (லோகித்) நதி
C. Subansiri (சுபன்சிரி) நதி
D. Manas (மானஸ்) நதி

விடை : B. Lohit (லோகித்) நதி

பிரதமர் நரேந்திர மோடி 2017 மே 26 அன்று அசாமில், இந்தியாவின் மிக நீண்ட பாலமான "Dhola-Sadia" பாலத்தினை திறந்துவைத்தார். பிரம்மபுத்திரா நதியின் துணை நதியான லோகித் நதி மீது 915 கி.மீ., நீளமுள்ள இந்த மூன்று வழி பாலம் கட்டப்பட்டுள்ளது. இது அசாமின் Dhola-வையும் Sadia-வையும் இணைக்கிறது. இது NH 37-ல் உள்ள அசாமின் Rupai-க்கும் NH 52-ல் உள்ள அருணாச்சலப்பிரதேசத்தின் Meka-Roing-க்கும் இடையேயான தூரத்தினை 165 Km அளவுக்கு குறைத்துள்ளது. இதன்மூலம் ஆறு மணிநேரமாக இருந்த பயண நேரம் வெறும் ஒரு மணிநேரமாகியுள்ளது. இது 10 இலட்சம் அளவுக்கான பெட்ரோல் டீசல் செலவினை மிச்சப்படுத்தியுள்ளது. இதனால் எல்லைகளிலுள்ள நாடுகளின் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்யமுடியும். இதைத்தவிர, அருணாச்சலப் பிரதேசத்தில் பல நீர்வழிப்போக்குவரத்து திட்டங்களும் விரைவில் செயல்படுத்தப்படும்.

**4. எந்த மாநில அரசு, Japanese Encephalitis (JE) தடுப்பூசி முகாமினை தொடங்கியுள்ளது?**

A. உத்தரப்பிரதேசம்

B. மத்தியப்பிரதேசம்

C. ராஜஸ்தான்

D. பஞ்சாப்

விடை : **A. உத்தரப்பிரதேசம்**

உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் 38 மாவட்டங்களில் Japanese Encephalitis (JE) தடுப்பூசி முகாமினை, 2016 மே 25 அன்று குசிநகரிலிருந்து தொடங்கிவைத்தார். Encephalitis பற்றிய தகவலறிய, "18001805544" என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணையும் கொடுத்துள்ளது. பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற இந்நிகழ்வில், அமைச்சரவை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள 1-15 வயதுக்குட்பட்ட 88,55,000 குழந்தைகளுக்கு இத்தடுப்பூசியினை வழங்குவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2017 சூன் 11 முதல் இதற்கான வேலைகள் நடைபெறும்.

**5. Internet and Mobile Association of India (IAMAI)-ன் புதிய தலைவர் யார்?**

A. Deep Kalra

B. Umang Bedi

C. Rajan Anandan

D. Kunal Shah

விடை : **C. Rajan Anandan**

தென்கிழக்காசியாவிற்கும் இந்தியாவுக்கும் Google-ன் துணைத்தலைவராக இருக்கும் Rajan Anandan, Internet and Mobile Association of India (IAMAI)-ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்குமுன் இப்பதவியில் FreeCharge நிறுவனத்தின் நிறுவனரும், தலைமை அதிகாரியுமான Kunal Shah பணிபுரிந்தார். இதுதவிர, Makemytrip-ன் தலைவரும், தலைமை

நிர்வாகியுமான **Deep Kalra, IAMAI-ன்** புதிய துணைத்தலைவராகிறார். **Umang Bedi** புதிய பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். **Dr.Subho Roy** சங்கத்தின் தலைவராக தொடர்ந்து நீடிப்பார். இந்தப்புதிய குழுவின் பதவிக்காலம் இரண்டாடுகளாகும். **1986**ம் ஆண்டு **(Societies Act)** சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற தொழிற்துறை நிறுவனமாக **IAMAI** உள்ளது. இதன் நோக்கம் ஆன்லைன் மற்றும் மொபைல் மதிப்புக் கூட்டப்பட்ட சேவைத்துறைகளை விரிவுபடுத்துவதும் மேம்படுத்துவதும் ஆகும். இதன் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது.

**6.** ஐ.நா. வின் வாழ்வாதார தரவுகளின் அடிப்படையில், **World Economic Forum (WEF)** வெளியிட்ட அறிக்கையின்படி உலகின் மிகவும் நெரிசலான நகரங்கள் எது?

**A.** மெடல்லின் **(Medellin)**

**B.** டாகா **(Dhaka)**

**C.** மும்பை **(Mumbai)**

**D.** லாகோஸ் **(Lagos)**

விடை : **B.** டாகா **(Dhaka)**

**World Economic Forum (WEF)** வெளியிட்ட அறிக்கையின்படி உலகின் மிகவும் நெரிசலான நகரமாக, வங்காளதேசத்தின் தலைநகர் **Dhaka** தேர்வாகியுள்ளது. இந்நகரம் ஒரு சதுர கிமீ.,க்கு **44,500** மக்கள்தொகை அடர்த்தியினை கொண்டிருக்கிறது. ஐ.நா. வின் தரவுப்படி, உலகின் மிக அதிக மக்களடர்த்தியினை கொண்ட **10** நகரங்களின் பட்டியலில், ஆசியாவில் ஆறு நாடுகளும், ஆப்பிரிக்காவில் மூன்று நாடுகளும், தென்னமெரிக்காவில் ஒரு நாடும் உள்ளது. இந்தியாவின் நிதி தலைநகரான மும்பை நகரம், ஒரு சதுர கிமீ.,க்கு **31,700** மக்கள்தொகை அடர்த்தியினையும் கொண்டிருக்கிறது. ராஜஸ்தானிலுள்ள கோட்டா, **12,100** மக்கள்தொகை அடர்த்தியினை கொண்டு ஏழாவது இடத்திலுள்ளது. கொலம்பியாவிலுள்ள **Medellin (3**வது இடத்திலும்), பிலிப்பைன்சிலுள்ள மணிலா **(14,800) 4**வது இடத்திலும், மொராக்கோவிலுள்ள **Casablanca (14,200) 5**வது இடத்திலும், நைஜீரியாவிலுள்ள **Lagos (13,300) 6**வது இடத்திலும், சிங்கப்பூர் **(10,200) 8**வது

இடத்திலும், இந்தோனேசியாவிலுள்ள ஜகர்த்தா (9,600) 9வது இடத்திலும் உள்ளன.

**7. எந்த நாடு World Street Food Congress (WSFC17)-ஐ நடத்தவுள்ளது?**

A. இஸ்ரேல்

B. இந்தியா

C. பிலிப்பைன்ஸ்

D. சிங்கப்பூர்

விடை : C. பிலிப்பைன்ஸ்

2017 மே 31 முதல் சூன் 4 வரை, பிலிப்பைன்சிலுள்ள மணிலாவில் World Street Food Congress (WSFC17) நடைபெறவுள்ளது. இதன் மையக்கருத்து "Re-Imagine Possibilities" ஆகும். இந்த உணவுத்திருவிழாவில் உலகளாவிய கண்டுபிடிப்பாளர்கள், தொழில் முனைவோர்கள், சமையல்காரர்கள், தெரு விற்பனையாளர்கள் மற்றும் உணவு ஆர்வலர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து தமது யோசனைகள், வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளை பகிர்ந்துகொள்வார்கள். இதில் இந்தியாவின் சார்பாக Bihari எனும் சுவைமிகுந்த பண்டம் இடம்பெறும். இது சுடப்பட்ட கோதுமை உருண்டைகளின் மேல் வறுத்த மசாலா,வறுத்த உருளைக்கிழங்கு, தக்காளி, வெங்காயம் ஆகிய கலவையுடன் காரம் சேர்க்கப்பட்ட ஒரு பண்டமாகும்.

**8. Central Board of Secondary Education (CBSE)-ன் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A. Krishna Maurya

B. Himanta Sarma

C. Anurag Tripathy

D. Nilam Gupta

விடை : C. Anurag Tripathy

1998-ல் Indian Railway personnel Service (IRPS) அதிகாரியாக பணிபுரிந்த Anurag

**Tripathy**, வரும் அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு CBSE-ன் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

9. “மதிகெட்டான் சோலை” தேசியப்பூங்கா எந்த மாநிலத்திலுள்ளது?

A. கேரளா

B. தமிழ்நாடு

C. மேற்கு வங்கம்

D. திரிபுரா

விடை : A. கேரளா

கேரள மாநிலத்தின் இடுக்கி மாவட்டத்திலுள்ள உடும்பன்சோலை வட்டத்தில், பூப்பாறை எனும் கிராமத்தில் இந்த “மதிகெட்டான் சோலை” தேசியப்பூங்கா அமைந்துள்ளது. இங்கு புலிகள், சிறுத்தைகள், காட்டு யானைகள், மிகப்பெரிய அணில், பறக்கும் அணில், புள்ளிமான் மற்றும் நீலகிரி வரையாடு போன்ற அழகான மற்றும் அரிய விலங்கினங்கள் உள்ளன. இராஜநாகம், கட்டுவிரியன், பைதான் பாம்புகள், கடலாமைகள், முதலைகள் மற்றும் பல்லிகள் போன்றவைகளும் உள்ளன. தேசியப்பூங்கா என்பது ஒரு பல்லுயிர் வனப்பகுதியாகும் மற்றும் இப்பகுதி வனவிலங்குகளை பாதுகாப்பதில் முக்கியப்பங்கினை வகிக்கிறது. இந்த நிலம் அவற்றின் வாழ்விடங்களை பாதுகாக்கும் இயற்கை அரணாக விளங்குகிறது.

10. பஞ்சாபிலிருந்து தீவிரவாதத்தை வேரறுத்தவர் என புகழப்படும் KPS Gill, இந்தியாவின் எந்த மாநிலத்தைச்சேர்ந்தவராவார்?

A. அரியானா

B. பஞ்சாப்

C. இமாச்சல பிரதேசம்

D. சத்தீஸ்கர்

விடை : B. பஞ்சாப்

பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் DGP-யான **Kanwar Pal Singh Gill (82),** சமீபத்தில் டில்லியில் மே 26 2017 அன்று காலமானார். இவர் பஞ்சாபிலிருந்து சீக்கிய தீவிரவாதத்தை வேரரறுத்ததற்காக அறியப்படுகிறார். இந்திரா காந்தி பதவிக்காலத்தில், இவர் **'Operation Black Thunder'** எனும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் வெற்றியடைந்தார். இரண்டு முறை பஞ்சாபின் DGP-யாக பதவியிலிருந்து, வெற்றிகரமாக பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன்மூலம், பஞ்சாபின் இயல்பு நிலைக்கு உதவினார். 2006-ல் நக்சல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உதவியாக, சத்தீஸ்கர் அரசாங்கத்திற்கு ஒரு பாதுகாப்பு ஆலோசகராகவும் பணியாற்றினார். இவர் பயங்கரவாதத்திற்கு எதிராக எழுத்தாளர், ஆசிரியர், பேச்சாளர் மற்றும் ஆலோசகராக பல துறைகளிலும் பணியாற்றியுள்ளார். **Institute for Conflict Management** மற்றும் **Indian Hockey Federation (IHF)**-க்கு தலைவராகவும் இருந்துள்ளார்.

TNPSC Tamil Current Affairs 27th May 2017

1. எந்த மாநிலத்தில் ஏலகிரி கோடைத்திருவிழா தொடங்கியுள்ளது?

A. தமிழ்நாடு

B. கேரளா

C. கர்நாடகா

D. மேற்கு வங்கம்

விடை : A. தமிழ்நாடு

மே 27 அன்று வேலூர் மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலையில், இரண்டு நாள் கோடைத்திருவிழா தொடங்கியுள்ளது. இந்த விழாவில் மாணவர்கள் மற்றும் தொழில்சார் கலைஞர்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும். தமிழ் திரைப்பட இசை இயக்குநரான தேவாவின் இசை நிகழ்ச்சியும் இவ்விழாவில் நடைபெறுகிறது. வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கே.சி. வீரமணி, மாவட்டாட்சியர் எஸ்.ஏ.ராமன் முன்னிலையில் விழாவினை தொடங்கிவைத்தார்.

2. புகழ்பெற்ற நவநாகரிக உடை வடிவமைப்பாளரான Laura Biagiotti சமீபத்தில் காலமானார். இவர் எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. US

B. இத்தாலி

C. பிரான்ஸ்

D. ஜப்பான்

விடை : B. இத்தாலி

புகழ்பெற்ற இத்தாலிய நவநாகரிக உடை வடிவமைப்பாளரான Laura Biagiotti 2017 மே 26 அன்று ரோமில் காலமானார். 1960-ல் முதன்முதலாக இவர் பெண்கள் நவநாகரிக உடை வடிவமைப்பாளராக தனது பயணத்தை தொடங்கினார். பின் 1980-களில் அதன் மூலம் புகழடைந்தார். சீனாவில் ஆடையலங்கார அணிவகுப்பு நடத்திய முதல் இத்தாலிய உடை வடிவமைப்பாளர் இவரே. 1995-ல் மாஸ்கோவிலுள்ள Kremlin Walls-லும்

ஆடையலங்கார அணிவகுப்பு நடத்தியுள்ளார்.

3. இந்தியாவின் முதல் "பல்வகை மின் வாகனத்திட்டம்" எந்த நகரத்தில் தொடங்கப்பட்டுள்ளது?

A. புது டில்லி

B. கொல்கத்தா

C. சென்னை

D. நாக்பூர்

விடை : D. நாக்பூர்

சுற்றுச்சூழலுக்கேற்ற, போக்குவரத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில், இந்தியாவின் முதல் "பல்வகை மின் வாகனத்திட்டம்", நாக்பூர் வானூர்தி நிலைய வளாகத்தில், மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்காரி மற்றும் மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் தொடங்கிவைத்தனர். இதன்மூலம், நாக்பூர், இந்தியாவிலேயே அதிக மின்வாகனங்கள் இயக்கம் கொண்ட ஒரு நகரமாக மாறியுள்ளது. இதில் டாக்சிகள், பேருந்துகள், e-ரிக்சா மற்றும் ஆட்டோக்கள் உட்பட 200 வாகனங்கள் அடங்கும்.

4. எந்த நாடு 2017 G7 உச்சிமாநாட்டை நடத்துகிறது?

A. ஜப்பான்

B. கனடா

C. இத்தாலி

D. ஜெர்மனி

விடை : C. இத்தாலி

43வது G7 உச்சிமாநாடு, 2017 மே 26 அன்று Taorminain Sicily-ல் தொடங்கியது. இந்த 2 நாள் மாநாட்டில் உலகப்பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் ஆற்றல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்படும். ஏழு நாடுகளின் தலைவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் இந்த

உச்சிமாநாட்டில் கலந்துகொள்கின்றனர். இந்த 2017 G7 உச்சிமாநாடு பிரிட்டிஷ் பிரதமர் **Theresa May**, பிரஞ்சு ஜனாதிபதி **Emmanuel Macron**, இத்தாலிய பிரதமர் **Paolo Gentiloni** மற்றும் அமெரிக்க ஜனாதிபதி **Donald Trump** ஆகியோர் பங்குபெறும் முதல் உச்சிமாநாடு ஆகும். இத்தாலி, கனடா, பிரான்ஸ், **US**, **UK**, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகியவை **G7** உறுப்புநாடுகள் ஆகும்.

**5. உலகின் முதல் 10 TripAdvisor's Travellers' Choice விருதுகளில் இடம்பெற்றுள்ள ஒரே இந்திய நினைவுச்சின்னம் எது?**

**A.** தாஜ்மஹால்

**B.** இந்தியாவின் நுழைவாயில்

**C.** குதுப்மினார்

**D.** சுவாமிநாராயணன் அக்சர்தம்

விடை : **A.** தாஜ்மஹால்

**TripAdvisor's Travellers' Choice** விருதுகளின்படி, இந்தியாவின் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான தாஜ்மஹால் உலகின் 5வது மிக பிரபலமான சுற்றுலாத்தலமாகவும், ஆசியாவில் 2வது மிக பிரபலமான சுற்றுலாத்தலமாகவும் உள்ளது. உலகளவில் கம்போடியாவிலுள்ள அங்கோர் வாட், அபுதாபியில் உள்ள **Sheikh Zayed** மசூதி, ஸ்பெயினிலுள்ள **Mezquita** பேராலயம் மற்றும் இத்தாலியிலுள்ள **St Peter's Basilica** ஆகியவை முறையே முதல் நான்கு இடங்களைப்பிடித்துள்ளது. அதேசமயம், ஆசியாவின் முதல் **10** இடங்களுள் அங்கோர் வாட் முதலிடம் வகிக்கிறது. இதுதவிர, தாஜ்மஹால் முதன்முதலில் இந்தியாவின் பிரபலமான இடங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து, அம்பர் கோட்டை, ஜெய்ப்பூர், சுவாமிநாராயண் அக்சர்தம், புது டில்லி, முதலியனவும் இடம்பெற்றுள்ளன.

**6. எந்த மாநகர காவல்துறை 2017 FICCI Smart Policing விருதினை வென்றுள்ளது?**

**A.** கொச்சி மாநகர காவல்துறை

**B.** புனே மாநகர காவல்துறை

C. போபால் மாநகர காவல்துறை
D. டில்லி மாநகர காவல்துறை

விடை : B. புனே மாநகர காவல்துறை

பெண்கள் & இணைய பாதுகாப்பிற்கு பல முயற்சிகளை மேற்கொண்டதற்காக, புனே மாநகர காவல்துறைக்கு 2017 Federation of Indian Chamber of Commerce and Industries(FICCI) Smart Policing விருது வழங்கப்பட்டுள்ளது. மே 25 அன்று விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளை மற்றும் FICCI இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், BJP MP Meenakshi Lekhi-யிடமிருந்து புனே மாநகர காவல்துறை ஆணையர் Rashmi Shukla இவ்விருதினை பெற்றுக்கொண்டார். “BuddyCop”, “Damini squad”, “Lost & Found” portal, Beat Marshal Monitoring Sapience செயலி போன்றவைகளை புனே மாநகர காவல்துறை அறிமுகப்படுத்தியதால், இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

7. எந்த மாநில சுற்றுலாத்தலம், 2017 Lonely Planet இதழின் Indian Travel விருது விழாவில் ‘Best Destination for Romance’ விருதினை பெற்றுள்ளது?
A. கர்நாடகா
B. தமிழ்நாடு
C. கேரளா
D. மேற்கு வங்கம்

விடை : C. கேரளா

மே 25 அன்று மும்பையில் நடைபெற்ற 2017 Lonely Planet இதழின் Indian Travel விருதுகள் வழங்கும் விழாவில் ‘Best Destination for Romance’ விருதினை, கேரள மாநிலத்திலுள்ள மலையக நகரமான மூனாறு வென்றுள்ளது. மூனாறின் எழில்மிகு தேயிலைத்தோட்டங்கள், மலைவாழிடங்கள், மழைக்காடுகள், பச்சைப்பள்ளத்தாக்குகள் மற்றும் அருவிகள் போன்றவை, இதன் பெருமைகளைக்கூறும்.

8. “Mann Ki Baat: a social revolution on radio” எனும் புத்தகத்தின் ஆசிரியர் யார்?

A. Jitendra Singh

B. Uday Mahurkar

C. Pankaj Kumar

D. Rajesh Jain

விடை : D. Rajesh Jain

**"Mann Ki Baat: a social revolution on radio"** எனும் புத்தகம், **Mann Ki Baat** திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் பிரதமர் நரேந்திர மோடி பேசும், வானொலி உரையாடல்களின் ஒரு தொகுப்பாகும். **Mann Ki Baat**-ன் விரிவான, தரமான மற்றும் கல்விசார் பகுப்பாய்வுகள், கருப்பொருள்கள், முக்கிய அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளது. இது 'புதிய இந்தியா', குறிப்பாக இளைஞர்களுடன் எவ்வாறு இணைந்திருக்கிறது என்பதை விளக்குகிறது. இந்தப்புத்தகத்தை எழுதியவர் **Rajesh Jain** ஆவார். சமீபத்தில் புது டில்லியிலுள்ள ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற விழாவில், இந்திய குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு இப்புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது.

9. எந்த நாட்டில் Royal Manas தேசியப்பூங்கா அமைந்துள்ளது?

A. இந்தியா

B. பூடான்

C. மியான்மர்

D. நேபாளம்

விடை : B. பூடான்

**Royal Manas** தேசியப்பூங்கா பூடானின் **Sarpang** மாவட்டத்தின் கிழக்குப்பகுதியையும், **Zhemgang** மாவட்டத்தின் மேற்குப்பாதியையும், மேற்கு **Pemagatshel** மாவட்டத்தையும் உள்ளடக்கிய மிகவும் பழமையான தேசியப்பூங்கா ஆகும். **1,057** சதுர கி.மீ., பரப்பளவில் இது பரந்துவிரிந்துள்ளது. வங்கப்புலிகள், யானைகள், **Pygmy** பன்றிகள் போன்றவை இங்குள்ளன. ஒற்றைக்கொம்பு காண்டாமிருகமும், காட்டெருமைகளும் வசித்து வரும் ஒரே பூட்டான் பூங்கா இதுதான்.

10. எந்த நகரத்தில் Indo Thailand HADR “Siam Bharat 17” நடைபெற்றது?

A. Bangkok

B. Surat Thani

C. Chiang Mai

D. Pai

விடை : C. Chiang Mai

மே 22-26 வரை, இந்திய விமானப்படை மற்றும் ராயல் தாய்லாந்து விமானப்படை (RTAF) இடையே தாய்லாந்திலுள்ள Chiang Mai-ல் Indo-Thailand Humanitarian Assistance and Disaster Relief (HADR) “Siam Bharat 17” கூட்டுப்பயிற்சி நடைபெற்றது. 11 உறுப்பினர்கள் கொண்ட IAF குழுவை, கேப்டன் Sucharu Rai VM தலைமையேற்றார். இது இவ்விரு விமானப்படைகளுக்கும் இடையே நடத்தப்படும் இரண்டாவது பயிற்சியாகும். இந்தப்பயிற்சியின் நோக்கம், இயற்கை இடர்பாடுகளின்போது நிவாரணப்பணிகளை திட்டமிட்டு நிறைவேற்றுவதாகும். மேலும், இது விமானப்படைகளின் இடையேயுள்ள ஒருங்கிணைப்புகளை மேம்படுத்துகிறது. இதன்மூலம் நிவாரணப்பணிகளை, எதிர்பார்த்தபடி நடைமுறைப்படுத்த முடியும்.

## TNPSC Tamil Current Affairs 28th & 29th May 2017

**1. எந்த நாட்டில் 2017 உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி (WTTC) தொடங்கியுள்ளது?**

A. ஜெர்மனி

B. பிரான்ஸ்

C. ஜப்பான்

D. சிங்கப்பூர்

விடை : A. ஜெர்மனி

2017 உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி (WTTC), மே 29 அன்று ஜெர்மனியிலுள்ள Dusseldorf நகரில் தகுதிச்சுற்றுகளுடன் தொடங்கியது. 8 பேர்கொண்ட இந்திய அணியை, Achanta Sharath Kamal வழிநடத்துவார். இவ்வணி Soumyajit Ghosh, Harmeet Desai, Madhurika Patkar, Manika Batra & Mouma Das ஆகியோரை உள்ளடக்கியது. இந்த 54வது உலக சாம்பியன்ஷிப்போட்டியினை, ஜெர்மனி 7வது முறையாக நடத்துகிறது.

**2. சமீபத்தில் காலமான புகழ்பெற்ற இசைக்கலைஞர் Gregg Allaman, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

A. தென்னாப்ரிக்கா

B. US

C. பெல்ஜியம்

D. சீனா

விடை : B. US

அமெரிக்க இசைக்கலைஞர், பாடகர், மற்றும் பாடலாசிரியரான Gregory LeNoir Allman (69), 2017 மே 27, அன்று அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியாவில் காலமானார். இவர் Southern Rock இசைக்குழுவின் முன்னோடியும் Allman Brothers இசைக்குழுவின் இணை நிறுவனருமாவார்.

**3. எந்த நாடு 2017 Badminton Sudirman கோப்பையை வென்றுள்ளது?**

A. ஹாங்காங்
B. ஜெர்மனி
C. தென் கொரியா
D. சீனா

விடை : C. தென்கொரியா

2017 மே 28 அன்று ஆஸ்திரேலியாவிலுள்ள Carrara Sports and Leisure Centre-ல் நடைபெற்ற போட்டியில், சீனாவை 3-2 என்ற செட்கணக்கில் தோற்கடித்ததன் மூலம், தென்கொரியா 2017-ம் ஆண்டுக்கான Badminton Sudirman கோப்பையை வென்றுள்ளது. நான்காவது முறையாக தென் கொரியா, இந்தக்கோப்பையை வெல்கிறது. முதல்முறையாக ஆஸ்திரேலியா இப்போட்டியினை நடத்துகிறது. 1989-ம் ஆண்டில் இந்த போட்டி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஐரோப்பிய, ஆசிய கண்டத்திற்கு வெளியே இப்போட்டி நடப்பது இதுவே முதல்முறையாகும்.

4. Tournoi Satellite Fencing Championship (TSFC) போட்டியின் Sabre நிகழ்வில், தங்கம் வென்ற இந்திய கத்திச்சண்டை வீரர் யார்?

A. Amrita Aullakh
B. Neelam Ghose
C. Deepika Sahi
D. Bhavani Devi

விடை : D. Bhavani Devi

2017 மே 27 அன்று ஐஸ்லாந்திலுள்ள Reykjavik-ல் நடைபெற்ற Tournoi Satellite Fencing Championship (TSFC) போட்டியின் Sabre நிகழ்வின் இறுதிப் போட்டியில் பிரிட்டனின் Sarah Jane Hampson-ஐ 15-13 என்ற கணக்கில் தோற்கடித்து, இந்திய கத்திச்சண்டை வீராங்கனையான C.A. Bhavani Devi தங்கம் வென்றுள்ளார். இதன்மூலம், பவானி தேவி ஒரு சர்வதேச கத்திச்சண்டை நிகழ்வில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமைக்குரியவராகிறார்.

5. உலக Football for Friendship (F4F) சமூக நிகழ்விற்கு, இந்திய இளம் பத்திரிகையாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய மாணவர் யார்?

A. Satnam Bhamara

B. Ananya Kamboj

C. Shekhar Ramamurthy

D. Samar Singh Sheikhawat

விடை : B. Ananya Kamboj

2017 சூலை மாதம் இரஷ்யாவின் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெறும் உலக Football for Friendship (F4F) சமூக நிகழ்விற்கு, இந்திய இளம் பத்திரிகையாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய மாணவர் 8-ம் வகுப்பு படிக்கும் Ananya Kamboj ஆவார். Gazprom & FIFA-வின் ஆதரவில் நடைபெறும் இந்நிகழ்வு, குழந்தைகளின் கால்பந்து ஆர்வத்தினை வளர்ப்பது, பல்வேறு நாடுகளிலுள்ள குழந்தைகளிடையே வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் தேசியங்களின் சகிப்புத்தன்மை & மரியாதை போன்றவைகளை உருவாக்குவதை மையமாகக்கொண்டதாகும். இந்தியா முதன்முறையாக இதில் கலந்துகொள்கிறது. இதில் இந்தியாவுடன் சேர்த்து 60 நாடுகள் பங்கேற்கும்.

6. 2017 Little Miss Universe போட்டியில் இந்தியாவின் சார்பாக கலந்துகொள்பவர் யார்?

A. Vinita Sayal

B. Rajeshwari Dyal

C. Padmalaya Nanda

D. Nandita Das

விடை : C. Padmalaya Nanda

மே 31 அன்று US-ன் ஜார்ஜியாவில் நடைபெறும் 2017 Little Miss Universe போட்டியில் இந்தியாவின் சார்பாக, ஒடிசாவைச்சேர்ந்த Padmalaya Nanda கலந்துகொள்கிறார். உலகெங்கிலும் உள்ள 15 போட்டியாளர்களுடன்

இவர் போட்டியிடுகிறார். இதுதவிர கிரீசில் நடைபெறும் **2017 Little Miss** உலகப்போட்டியிலும், இந்தியாவின் சார்பாக பங்குபெறுவார்.

**7. Deloitte நடத்திய 2017 Asia Pacific Tax Complexity-ன் கருத்துக்கணிப்பின்படி, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் எந்த நாடு மிகவும் சிக்கலான வரி விதிமுறைகளைக்கொண்டுள்ளது?**

A. சீனா

B. ஆஸ்திரேலியா

C. ஜப்பான்

D. இந்தியா

விடை : **A. சீனா**

**Deloitte** நடத்திய **2017 Asia Pacific Tax Complexity-ன்** கருத்துக்கணிப்பின்படி, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சீனா மிகவும் சிக்கலான வரி விதிமுறைகளைக்கொண்டுள்ளது. இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் முறையே சீனாவுக்கு அடுத்தடுத்த இடங்களைப்பிடித்துள்ளது. ஆசிய பசிபிக் முழுவதும் **20** அதிகார வரம்புகளின் தற்போதைய மற்றும் எதிர்பார்த்த வரிச்சூழல் பற்றி, 300-க்கும் அதிகமான நிதி நிர்வாகிகளிடம், அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து ஆய்வுசெய்துள்ளனர். பதிலளித்தவர்களில் **147** பேர் இந்தியாவில் வணிகம் செய்பவர்களாவார்கள்.

**8. உலகின் மிகப்பெரிய ஒளி தொலைநோக்கி (Optical Telescope) கட்டுமானப்பணி எந்த நாட்டில் தொடங்கியுள்ளது?**

A. தென்கொரியா

B. கனடா

C. சீனா

D. சிலி

விடை : **சிலி**

உலகின் மிகப்பெரிய ஒளி தொலைநோக்கியின் **(Optical Telescope)** கட்டுமானப்பணி வட சிலியில் தொடங்கியுள்ளது, இது **2024-ல்** இயங்கத்தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. **39** மீட்டர் விட்டம் அகலமுள்ள இந்த மிகப்பெரிய தொலைநோக்கி, **European Southern Observatory (ESO)** மூலம் கட்டப்படுகிறது. இது சிலியிலுள்ள **3046** மீ உயர **Cerro Armazones** மலையின்மீது வைக்கப்படுகிறது. இதன் நோக்கம் பூமிபோன்ற இன்னொரு கோளை கண்டறிவது மற்றும் பல விஞ்ஞான மூலங்களை ஆராய்வதாகும்.

**9. 2016 Sangeet Natak Akademi Puraskar** விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**A. Parassini Kunhiraman**

**B. Satyabrata Rout**

**C. Sreedharan Nair**

**D. Kalamandalam Ramankutty**

விடை : **B. Satyabrata Rout**

திரைக்கலை பயிற்சியில் புதுவிதமான கற்பிக்கும் யுத்திகளை பயன்படுத்தியதற்காக, ஐதராபாத் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற **S N** கலை **&** தகவல் பள்ளியில், திரைக்கலைத்துறையில் பணிபுரியும் **Satyabrata Rout-**க்கு **2016-**ம் ஆண்டுக்கான **Sangeet Natak Akademi Puraskar** விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் **'Scenography: An Indian Perspective', "Visual Theatre"** போன்றவைகளை இந்தியாவில் பயன்படுத்திய முன்னோடி ஆவார். இவர் பல நாடகங்களை இயக்கியுள்ளார், தேசிய மற்றும் சர்வதேச திரைப்படத்திருவிழாக்களில் பங்குபெற்றுள்ளார் மற்றும் உலகம் முழுவதிலும் பல கூத்துப்பட்டறை நிகழ்வுகளை நடத்தியுள்ளார். இவ்விருது, **Sangeet Natak Akademi** மற்றும் இந்திய தேசிய இசை, கலை **&** நடன அகாடமியால் வழங்கப்படுகிறது. இது கலை பயிற்றுவினர்களை கௌரவிக்கும் விதமாக வழங்கப்படுகிறது.

**10.** உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையான **"India Development Report"-**ன் படி, **2018** நிதியாண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு

உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?

A. 7.2%

B. 7.4%

C. 7.7%

D. 7.5%

விடை : **A. 7.2%**

உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையான **"India Development Report"-ன்** படி, **2018** நிதியாண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம், பணமதிப்பிழப்பின் தாக்கத்தால் **7.2%** ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் வளர்ச்சி, வலுவான அடிப்படைகள், சீர்திருத்த வேகம் & முதலீட்டு சூழ்நிலையை மேம்படுத்துவத்தின் மூலம், **2020-ம்** நிதியாண்டில் **7.7%** ஆக அதிகரிக்கும். சமபங்கு மற்றும் வறுமை மீதான **GST-யின்** ஒட்டுமொத்த தாக்கம் நேர்மறையானதாக இருக்குமென இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

# TNPSC Tamil Current Affairs 30th May 2017

**1. மத்திய அரசாங்கத்தின் கழிப்பறை பயன்பாடு பிரச்சாரத்திற்கு "Darwaza Band" யார்?**

A. அமீர்கான்

B. மேரி கோம்

C. கீதா போகத்

D. அமிதாப் பச்சன்

விடை : D. அமிதாப் பச்சன்

நாடு முழுவதும் உள்ள கிராமப்புறங்களில் கழிப்பறை வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2017 மே 30 அன்று மும்பையில், நாடு தழுவிய பிரச்சாரமான "Darwaza Band"-ஐ மத்திய அரசு தொடங்கியது. இந்தப்பிரச்சாரம் உலக வங்கியால் ஆதரிக்கப்பட்டு, திரைப்பட நடிகர் அமிதாப்பச்சனால் வழிநடத்தப்பட்டது. இப்பிரச்சாரம், கழிவறை வைத்துக்கொண்டே அதனை பயன்படுத்தாமல் இருப்பவர்களின் எண்ணத்தை மாற்றுவதாக அமைந்தது. இந்தப்பிரச்சாரத்தில் நடிகை அனுஷ்கா சர்மாவும் கலந்துகொண்டார். இவர், கிராமப்புற பெண்களை ஊக்கப்படுத்தும்விதமாக தலைமையேற்று இப்பிரச்சாரத்தினை வழிநடத்தினார்.

**2. எந்த நாட்டில் பெண்களுக்காக பிரத்யேகமாக தொடங்கப்பட்ட முதல் தொலைக்காட்சி சேனலான "Zan TV" தொடங்கப்பட்டது?**

A. நேபாளம்

B. ஈரான்

C. ஆப்கானிஸ்தான்

D. இஸ்ரேல்

விடை : C. ஆப்கானிஸ்தான்

பெண்களுக்காக பிரத்யேகமாக தொடங்கப்பட்ட முதல் தொலைக்காட்சி சேனலான "Zan TV" ஆப்கானிஸ்தானிலுள்ள காபுல் நகரில் 2017 மே 30 அன்று தொடங்கப்பட்டது. இந்த தொலைக்காட்சியில் இருக்கும் தொகுப்பாளர்கள் &

தயாரிப்பாளர்கள் அனைவரும் பெண்களாவார்கள். இதன் நோக்கம் ஆப்கானிய பெண்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்தி, அவர்களின் நிலையை மேம்படுத்துவதோடு, பழமைவாத சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராக தங்களது பங்குகளை உறுதிப்படுத்திக்கொள்வதாகும். ஆணாதிக்க நாட்டில், சமாதானத்திற்காக போராடும் பெண்களின் உரிமைகளுக்கு இது ஒரு அடித்தளமாக கருதப்படுகிறது. இத்தொலைக்காட்சியின் நிறுவனர் ஊடகவியலாளர் **Hamid Samar** ஆவார்.

**3. 2017 Formula 1 Monaco Grand Prix** உலக சாம்பியன்ஷிப் போட்டியை வென்றவர் யார்?

**A. Kimi Raikkonen**

**B. Sebastian Vettel**

**C. Valtteri Bottas**

**D. Daniel Ricciardo**

விடை : **B. Sebastian Vettel**

மொனாகோவிலுள்ள **Circuit de Monaco La Condamine and Monte Carlo**-வில் நடைபெற்ற **2017 Formula 1 Monaco Grand Prix** உலக சாம்பியன்ஷிப் போட்டியை, ஜெர்மனியைச்சேர்ந்த **Scuderia Ferrari** கார் பந்தயவீரரான **Sebastian Vettel** வென்றுள்ளார்.

**4.** எந்த இந்தி நடிகை சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட நடிகையாக தாதாசாகிப் பால்கே விருதுடன் கௌரவிக்கபட்டுள்ளார்?

A. பிரியங்கா சோப்ரா

B. ஐஸ்வர்யா ராய்

C. தீபிகா படுகோனே

D. சோனம் கபூர்

விடை : A. பிரியங்கா சோப்ரா

சர்வதேச அளவில் புகழ்பெற்ற நடிகை (Internationally Acclaimed Actress) என்ற

பெயரில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரிவின் கீழ் தாதாசாகிப் பால்கே அகாடமி விருதுடன் இந்தி நடிகை பிரியங்கா சோப்ரா கௌரவிக்கபட்டார். இவ்விருது வழங்கும் விழா 2017 சூன் 1 அன்று மும்பையில் நடக்கிறது. 1969-ல் நிறுவப்பட்ட இந்த தாதாசாகிப் பால்கே விருது, இந்திய சினிமாவின் மிகவுயர்ந்த விருதாகும்.

**5. Jamia Millia Islamia (JMI)-விற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய வேந்தர் யார்?**

**A. Talat Ahmad**

**B. Najma Heptulla**

**C. Hakim Ajmal Khan**

**D. Anwar Jamal Kidwai**

விடை : **B. Najma Heptulla**

மணிப்பூரின் ஆளுநர் மற்றும் முன்னாள் சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சரான **Dr. Najma Heptulla**, புது டில்லியிலுள்ள **Jamia Millia Islamia (JMI)**-விற்கு புதிய வேந்தராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். இவர் இந்தியாவின் முதல் கல்வியமைச்சரான மவுலானா அபுல் கலாம் ஆசாத்தின் பேத்தியாவார். இவருக்குமுன், **Lt. Gen. (Retd.) M.A. Zaki** அவர்கள் இப்பதவியிலிருந்தார். 1986 முதல் 2012 வரை ராஜ்ய சபாவில் 5 முறை உறுப்பினராகவும், 16 ஆண்டுகளாக ராஜ்யசபாவின் துணைத்தலைவராகவும் பதவியிலிருந்துள்ளார். 1993-ல் **Inter-Parliamentary Union (IPU)** குழுவிற்கும் இவர் தலைமை தாங்கியுள்ளார்.

**6. எவரெஸ்ட் சிகரத்தை ஆறுமுறை அடைந்த முதல் இந்தியர் Love Raj Singh ஆவார். இவர் எந்த மாநிலத்தைச்சேர்ந்தவராவார்?**

**A.** ஜார்கண்ட்

**B.** பீகார்

**C.** உத்தரகண்ட்

**D.** உத்தரப்பிரதேசம்

விடை : **C. உத்தரகண்ட்**

உலகின் மிகவுயரமான எவரெஸ்ட் சிகரத்தை ஆறாவது முறையாக அடையும் முதல் இந்தியர் மற்றும் பத்ம ஸ்ரீ விருது பெற்றவரான Love Raj Singh Dharmshaktu ஆவார். இவர் இச்சாதனையை 2017 மே 27 அன்று படைத்தார். இவர் எல்லைப்பாதுகாப்பு படையில் டேராடூனில் பணிபுரிந்து வருகிறார். இவர் 1998-ல் முதன்முதலாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தார், பின்பு 2006, 2009, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் அடுத்தடுத்து சாதனைகளை புரிந்தார். அவர் உத்தரகண்ட் மாநிலம் Kumaon பகுதியிலுள்ள Munsiyari-ன் Bona கிராமத்தைச்சேர்ந்தவராவார்.

7. சமீபத்தில் Dailong கிராமத்தை மாநிலத்தின் பல்லுயிர் மரபுவழித்தளமாக அறிவித்துள்ள மாநிலம் எது?

A. அருணாச்சலப்பிரதேசம்

B. மிசோரம்

C. திரிபுரா

D. மணிப்பூர்

விடை : D. மணிப்பூர்

மணிப்பூர் அரசு சமீபத்தில் Tamenglong மாவட்டத்திலுள்ள Dailong கிராமத்தை 2002-ம் ஆண்டு பல்லுயிர் சட்டம் பிரிவு 37 (1)-ன் கீழ் ஒரு பல்லுயிர் மரபுவழித்தளமாக அறிவித்துள்ளது. 11.35 சதுர கி.மீ. பரப்பளவுகொண்ட இந்த கிராமத்தின் மக்கட்தொகை 1634 ஆகும். 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி, இதில் 819 பேர் ஆண்கள் மற்றும் 815 பேர் பெண்களாவர்.

8. ஒளிபரப்புத்துறை கூட்டாண்மைக்காக, பிரசார் பாரதி எந்த நாட்டின் பொது ஒளிபரப்பு நிறுவனத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

A. சுவிட்சர்லாந்து

B. மாலத்தீவு

C. சிலி

D. மொராக்கோ

விடை : D. மொராக்கோ

Rabat-ல் நடைபெற்ற 5வது India Morocco Joint Commission Meeting (JCM)-ல், இந்தியாவின் மிகப்பெரிய பொது வானொலி நிறுவனமான பிரசார் பாரதி, ஒளிபரப்புத்துறை கூட்டாண்மைக்காக மொராக்கோவின் Societe Nationale de Radiodiffusion et de Television (SNRT) நிறுவனத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. SNRT என்பது மொரோக்கோவின் பொது ஒளிபரப்பு நிறுவனம் மற்றும் European Broadcasting Union (EBU)-ன் உறுப்பினருமாகும்.

**9. 2017 சர்வதேச ஐ.நா. அமைதிகாப்பாளர்கள் தினத்தின் மையக்கருத்து என்ன?**

**A. Investing in peace around the world**

**B. A force for the future**

**C. Honoring our heroes**

**D. Women in peacekeeping**

விடை : **A. Investing in peace around the world**

ஐ.நா.வின் அமைதிக்காப்பு நடவடிக்கைகளில் பணியாற்றிய அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதோடு, அவர்களின் தொழில், தியாகம், அர்ப்பணிப்பு மற்றும் தைரியத்தை போற்றும்விதமாக ஒவ்வொரு வருடமும் மே 29 அன்று சர்வதேச ஐ.நா. அமைதிக்காப்பாளர்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது. 2017 சர்வதேச ஐ.நா. அமைதிகாப்பாளர்கள் தினத்தின் மையக்கருத்து "Investing in peace around the world" ஆகும். 2017 இதே நாளில், இரு இந்திய அமைதிப்படை வீரர்களான Rifleman Brijesh Thapa மற்றும் Ravi Kumar ஆகியோரின் நினைவை கௌரவிக்கும் வகையில், ஐ.நா.வின் உயரிய பதக்கமான Dag Hammarskjold பதக்கத்தை வழங்கி கௌரவிக்கப்பட்டனர். தற்பொழுது ஆப்கானிஸ்தான், காங்கோ, ஹெய்டி, லெபனான், லைபீரியா, மத்திய கிழக்கு நாடுகள், தெற்கு சூடான், சூடான் மற்றும் மேற்கு சகாரா ஆகிய நாடுகளில் ஐ.நா அமைதிப்படைகளுக்காக 7,600க்கும் அதிகமான இராணுவ அதிகாரிகளை இந்தியா பணியமர்த்தியுள்ளது.

**10. 2017 கேன்ஸ் திரைப்பட விழாவில் Palme d'Or பரிசினை வென்ற திரைப்படம் எது?**

A. April's Daughter

B. Wind River

C. The Square

D. Force Majeure

விடை : C. The Square

பிரான்சின் கேன்ஸ் நகரில் நடைபெற்ற 70வது கேன்ஸ் திரைப்பட விழாவில் Palme d'Or விருதை, Ruben Oustland இயக்கிய சுவீடன் திரைப்படமான "The Square" பெற்றுள்ளது. இத்திரைப்படம், தனது அருங்காட்சியகத்தை ஒரு புது யுக்தியான The Square-ஐக் கொண்டு எப்படி அந்த அருங்காட்சியக இயக்குநர் முன்னேற்றுகிறார் என்பதனை விவரிக்கிறது. கேன்ஸ் திரைப்பட விழாவின் மிகவுயரிய பரிசு Palme d'Or ஆகும்.

# TNPSC Tamil Current Affairs 31st May 2017

**1. உலக வங்கி சமீபத்தில் வெளியிட்ட "India Development Report"-ன் படி, பெண் தொழிலாளர்கள் தொகுப்பில் இந்தியாவின் தரநிலை என்ன?**

A. 120 வது

B. 131 வது

C. 110 வது

D. 115 வது

விடை : A. 120 வது

உலக வங்கி சமீபத்தில் வெளியிட்ட "India Development Report"-ன் படி, பெண் தொழிலாளர்கள் தொகுப்பில், மொத்தம் பங்கேற்ற 131 நாடுகளில் இந்தியாவின் தரநிலை 120வதாகும். இவ்வறிக்கையின்படி, 42% பெண்கள் பட்டதாரிகளாக இருந்தாலும், அவர்களின் பங்கேற்பு நிலை 2005-லிருந்து குறைந்துகொண்டே வருகிறது. 15 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினரில் 27% பெண்கள் மட்டுமே பணிபுரிகிறார்கள் அல்லது தீவிரமாக வேலை தேடுகிறார்கள் என இவ்வறிக்கை கூறுகிறது. ஐந்தில் மூன்று உழைக்கும் வயதுடைய (26-45 ஆண்டுகள்) இந்தியப்பெண்கள் பொருளாதார ரீதியாக செயலற்றவர்களாக இருக்கிறார்கள். அதாவது அவர்கள் எந்தவித சம்பளமும் பெறாதவர்களாக இருக்கிறார்கள். பெண்களின் பங்களிப்பு அதிகரித்தால், இந்தியாவின் GDP வளர்ச்சி விகிதம் சாத்தியமான அளவு அதிகரிக்கலாம் என இந்த அறிக்கை கூறுகிறது.

**2. 2017 உலக புகையிலை ஒழிப்பு தினத்தின் மையக்கருத்து என்ன?**

A. Tobacco: deadly in any form or disguise

B. Tobacco - a threat to development

C. Tobacco kills, don't be duped

D. Tobacco: deadly for human development

விடை : B. Tobacco - a threat to development

உலகளாவிய புகையிலை நுகர்வினை 24 மணிநேர காலத்திற்கு தவிர்ப்பதை

ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் மே 31 அன்று உலக புகையிலை ஒழிப்புதினம் அனுசரிக்கப்படுகிறது. புகைப்பிடிப்பதனால் ஏற்படும் எதிர்மறை சுகாதார விளைவுகளால் தற்போது உலகெங்கிலும் கிட்டத்தட்ட 6 மில்லியனுக்கும் அதிகமானோர் இறக்கின்றனர். இதில் 600,000 பேர் புகைப்பவர்களின் அருகில் இருப்பதாலேயே நோய்த்தாக்கத்திற்கு ஆளாகிறார்கள். 2017 உலக புகையிலை ஒழிப்பு தினத்தின் மையக்கருத்து **"Tobacco - a threat to development"** ஆகும். இதனை உலக சுகாதார மையம் உருவாக்கியுள்ளது. இதன் நோக்கம் புகையிலை தொழிற்சாலைகளின் வளர்ச்சியை நாசப்படுத்துவதாகும்.

**3. எந்த இந்திய வங்கி, சூரிய ஆற்றல் திட்டங்களுக்காக Asian Development Bank (ADB)யிடமிருந்து, $100 மில்லியன் டாலர் நிதியினை கடனாக பெற்றுள்ளது?**

A. ICICI வங்கி

B. State Bank of India (SBI)

C. Punjab National வங்கி

D. Allahabad வங்கி

விடை : C. Punjab National வங்கி

சூரிய ஆற்றல் திட்டங்களுக்காக Asian Development Bank (ADB)யிடமிருந்து, $100 மில்லியன் டாலர் நிதியினை Punjab National வங்கி கடனாக பெற்றுள்ளது. இந்தக்கடனுக்கு இந்திய அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. 2016-ல் ADB வங்கி அனுமதித்துள்ள $500 மில்லியன் டாலர் நிதியுதவியில், Solar Rooftop Investment Program (SRIP)-க்கு தற்போது $100 மில்லியன் டாலர் நிதியினை கடனாக வழங்கியுள்ளது. இந்த நிதி ADB-ன் சாதாரண மூலதனத்திலிருந்து $330 மில்லியன் டாலரும், ADB நடத்தும் Clean Technology Fund (CTF)-லிருந்து $170 மில்லியன் டாலரும் சேர்ந்ததாகும். தற்போது வழங்கப்பட்ட $100 மில்லியன் டாலர் நிதி முழுக்க CTF-னால் வழங்கப்பட்டதாகும். SRIP-ன் மொத்த செலவு $1 பில்லியனாகும். இதன் நோக்கம், இந்தியாவில் 1 ஜிகாவாட் திறன் கொண்ட சூரிய மின்கல அமைப்பினை நிறுவுவதாகும்.

**4. எந்த IIT நிறுவனம் மலிவான, விரைவான & மாசில்லாத உயிரி**

எரிபொருளை உற்பத்தி செய்ய **'soil-to-soil'** தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது?

A. IIT பாம்பே

B. IIT சென்னை

C. IIT இண்டூர்

D. IIT கரக்பூர்

விடை : D. IIT கரக்பூர்

IIT கரக்பூரிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் மலிவான, விரைவான & மாசில்லாத உயிரி எரிபொருளை உற்பத்திசெய்ய 'soil-to-soil' எனும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர். இது IIT-KGP-ல் உள்ள உயிரி ஆற்றலுக்கான பி.கே. சின்கா மையத்தில் உருவாக்கப்பட்டதாகும். இத்திட்டம் முற்றிலும் பசுமையை பாதிக்காத வண்ணம் உயிரி எரிபொருளை உற்பத்திசெய்யும். நெல் வைக்கோல், மூங்கில், வாழை இலை, அன்னாசி மற்றும் பருத்திச்செடிகள், ஆமணக்கு இலை மற்றும் உலர்ந்த மற்றும் கழிவு நிலத்தில் வளர முடியாத காய்கறி பயிர்கள், ஆகியவைகளை ஒன்றாக கலந்து IIT-KGP-ல் இந்த உயிரி எரிபொருள் தயாரிக்கப்படும். இத்திட்டத்துக்கான நிதியை இயற்கை எரிவாயு துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை மற்றும் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவை வழங்குகிறது.

5. அமுல் நிறுவனம், விண்வெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தீவனம் தயாரிக்கும் முறைக்கு எந்த நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

A. Indian Space Research Organisation (ISRO)

B. Antrix Corporation Limited (ACL)

C. National Remote Sensing Centre (NRSC)

D. Satish Dhawan Space Centre (SDSC)

விடை : A. Indian Space Research Organisation (ISRO)

விண்வெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தீவனம் தயாரிக்கும் முறைக்கு Gujarat Cooperative Milk Marketing Federation (GCMMF), இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. GCMMF, அதன் தயாரிப்புகளை 'அமுல்' என்ற பெயரில் சந்தைப்படுத்துகிறது. இந்த ஒப்பந்தத்தின் படி, கிராமப்புறத்தில் உணவுப் பயிர்கள் மற்றும் தீவனப் பயிர்களை அடையாளங்காண ISRO உதவி செய்வதுடன், பசுந்தீவன வளர்ப்பிற்காக கிராமப்புறங்களில் பயிர்செய்யும் சூழலமைந்த புல்வெளிகளையும் கண்டறிய உதவும். தற்போது, அமுல் சுமார் 18,500 கிராமங்களிலுள்ள 35 லட்சம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து தினமும் சுமார் 150 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்கின்றது.

6. சமீபத்தில் இறந்த தாசரி நாராயண ராவ் எந்த துறையிலிருந்து பிரபலமடைந்தார்?

A. பத்திரிகைத்துறை

B. திரைப்படத்துறை

C. அரசியல்

D. மேலேயுள்ள அனைத்தும்

விடை : D. மேலேயுள்ள அனைத்தும்

புகழ்பெற்ற தெலுங்கு திரைப்படத்தயாரிப்பாளரும் முன்னாள் மத்திய அமைச்சருமான தாசரி நாராயண ராவ் (75), 2017 மே 30 அன்று ஐதராபாத்தில் காலமானார். இவர் தெலுங்கு மற்றும் பிற மொழிகளில் 151 படங்களை இயக்கியுள்ளார். மிக அதிகமான திரைப்படங்களை இயக்கியதற்காக கின்னஸ் புத்தகத்திலும் இவர் பெயர் இடம்பெற்றுள்ளது. இவர் எழுத்தாளர், மற்றும் பாடலாசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். 50-க்கும் மேற்பட்ட திரைப்படங்களை தயாரித்துள்ளார். NT Rama Rao மற்றும் Akkineni Nageswara Rao போன்ற புகழ்பெற்ற நடிகர்களையும் இயக்கியுள்ளார். இவர் ஒரு பத்திரிகையாளருமாவார். 2000-ம் ஆண்டின் தொடக்கத்தில் இவர், காங்கிரஸ் கட்சியில் இணைந்து, மன்மோகன் சிங் அரசின் அமைச்சரவையில் நிலக்கரித்துறை அமைச்சராக பணியாற்றினார். நிலக்கரி ஊழலில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் இவரும் ஒருவராவார், CBI இவருக்கு எதிராக 2013ல்

வழக்குப்பதிவு செய்துள்ளது.

**7. National Commission for Minorities (NCM)-ன் புதிய துணைத்தலைவர் யார்?**

**A. Sulekha Kumbhare**

**B. George Kurian**

**C. Sunil Singhi**

**D. Vada Dasturji Khurshed**

விடை : **B. George Kurian**

கேரள **BJP** தலைவர் மற்றும் 'சமூக & கல்வி ஆர்வலர்' **George Kurian, NCM-**ன் புதிய துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இரு மாதங்களுக்கும் மேலாக இந்தப்பதவி காலியாகவே இருந்தது. இப்பதவி மத்திய சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சர் **Mukhtar Abbas Naqvi,** மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளது. குஜராத்தின் முன்னாள் முதல்வர் **Sulekha Kumbhare,** குஜராத்தின் சமணப்பிரதிநிதி **Sunil Singhi** மற்றும் பார்சி பிரதிநிதி **Vada Dasturji Khurshed Kaikobad Dastoor** ஆகியோர் இவ்வாணையத்தின் மற்ற உறுப்பினர்களாவார்கள். உத்தரபிரதேசத்தைச்சேர்ந்த சமூக ஆர்வலர் **Gayarul Hasan,** இதன் புதிய தலைவராவார். இந்தியாவில் சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகளை பாதுகாப்பது **NCM**-ன் பொறுப்பாகும்.

**8. எந்த நகரம் 2017 India Mobile Congress (IMC)-ஐ நடத்துகிறது?**

**A.** சென்னை

**B.** கொல்கத்தா

**C.** புது டில்லி

**D.** புனே

விடை : **C.** புது டில்லி

உலகளாவிய மொபைல் உற்பத்தியாளர்களின் முதலீடுகளை ஈர்க்க, செப்டம்பர் **27** முதல் **29**-ம் தேதி வரை புது டில்லியிலுள்ள பிரகதி மைதானத்தில், **2017 India Mobile Congress (IMC)** நடைபெறுகிறது. இந்நிகழ்வு,

மொபைல் துறையின் நுண்ணறிவுகள், சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அடுத்த தலைமுறை சேவைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் ஆகியவற்றை மேற்கோளிட்டு காட்டும். இதனை தொலைத் தொடர்புத்துறை அமைப்பான **Cellular Operators' Association of India (COAI),** தொலைத்தொடர்புத்துறை, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆகியவையின் ஆதரவுடன் நடத்துகிறது. **2017 IMC**-னால் இந்தியா, உலக மொபைல் துறை தலைவர்கள், நிறுவனர்கள் கலந்துரையாட ஒரு முக்கியத்தலமாக அமைகிறது.

**9. எந்த மாநில அரசு, வேலை தேடுபவர்கள் மற்றும் வழங்குபவர்களுக்காக "Mahaswayam portal"-ஐ தொடங்கியுள்ளது?**

A. மகாராஷ்டிரா

B. உத்தரப்பிரதேசம்

C. கேரளா

D. அரியானா

விடை : **A. மகாராஷ்டிரா**

மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், வேலை தேடுவோர் வேலை வழங்குவோர், தொழில் முனைவோர் மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்காக **"Mahaswayam portal"** எனும் இணையதளம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளார். வேலை தேடுவோர் இதில், தங்களை பதிவு செய்து கொள்ளலாம், வேலை வாய்ப்புகள் & பயிற்சிகள் பற்றி விசாரிக்கலாம், சுய வேலைவாய்ப்புப்பற்றிய தகவல்களைப் பெறலாம். இதுதவிர, பயிற்சி நிறுவனங்களும் தங்களைப்பற்றி பதிவு செய்யலாம், பயிற்சிக்கான செலுத்துகைச்சீட்டினை பெறலாம், மற்றும் **ECS** மூலமாக பயிற்சிக்கான கட்டணத்தையும் செலுத்தலாம். இதைத்தவிர, தொழில்முனைவோர், வேலைவாய்ப்புப் பிரிவில் விளம்பரங்களும் செய்யலாம்.

**10. சமீபத்தில் காலமான Konstantinos Mitsotakis எந்த நாட்டின் முன்னாள் பிரதமர் ஆவார்?**

A. துருக்கி
B. இஸ்ரேல்
C. கிரீசு
D. இரஷ்யா

விடை : C. கிரீசு

கிரீசின் பழம்பெரும் முன்னாள் பிரதமரான Konstantinos Mitsotakis (98), 2017 மே 29 அன்று கிரீசிலுள்ள ஏதென்சில் காலமானார். இவரின் 60 ஆண்டுகால அரசியல் வரலாற்றில், கிரேக்கத்தின் தாராளவாத மற்றும் சோசலிச கட்சிகளுடனான மோதல்கள் & சீர்திருத்தங்களின் மூலம் நினைவுறப்படுகிறார். பிரபலமில்லாத தடையற்ற சந்தைக்கொள்கைகளை உருவாக்கியதன் மூலம் இவர் போற்றப்படுகிறார். பின்னர், துருக்கியுடனான உறவுகளை மேம்படுத்திக்கொள்ள அரசாங்கங்கள் இக்கொள்கைகளை பயன்படுத்திகொண்டன. ஆனால், அரசியல் வரலாற்றில் இவர் ஒரு பிரிவினைவாதியாகவே அடையாளப்படுத்தப்படுகிறார்.